# இதிகாசக் கதாவாசகம்

(இரண்டாம் புத்தகம்)

# இதிகாசக்கதாவாசகம்.

(இரண்டாம் புத்தகம்.)

---


இது

மதுரை அமெரிக்கன் காலேஜ்

தலைமைத் தமிழாசிரியர்

ஆ. கார்மேகக்கோனாரவர்கள்

எழுதியது.


---


மதுரை புத்தக வியாபாரம்,

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

வெளியிட்டது.

---

ரட் | 1927. [விலை அணா 10.

ஸ்ரீ

# முகவுரை.

இதிகாசக்கதாவாசகம் எனப்பெயரிய நூலொன்று முதற்
.கச் சென்ற ஆண்டில் என்னால் எழுதப்பெற்று வெளி
ந்தது. அதனைத்தமிழ் நாட்டிலுள்ள கலாசாலை ஆசிரியர் பலர்
ப்புடன் ஏற்று என்னை ஊக்கினார்கள். இப்போது அப்புத்த
தின் தொடர்ச்சியாக இரண்டாம் புத்தகமாகிய இது வெளி
கின்றது.

இப்புத்தகத்தில், தெய்வங்கொள்கை, இராஜதர்மம், இராஜ
தி, பெரியார்பெருமை, பெரியாரைப் பிழையாமை, மாதா
நா குருபக்தி, வைதிக லௌகிக ஞானங்கள், மக்கட்கு இன்றி
மையாத பலவிதஒழுக்கநெறிகள், பண்டைக்காலத்து நம்நாட்டின்
ழக்க ஒழுக்க நாகரிகமுறைகள் முதலிய பல விஷயங்கள் ஆங்
ங்குப் புலப்படுத்தப்பட் டிருக்கின்றன. இப்புத்தகத்தில் கூறப்
படும் விஷயங்களெல்லாம் யோகஞானங்களாற் சிறந்த முனிவர்
ள், புலவர்கள் முதலிய பெரியோரது கருத்துக்களாகையான்
வை கற்போர்க்குப் பெரிதும் உபகாரப் படுமென்பது எனது
ருத்தாகும். இப்புத்தகத்தின் நடையை மாணவர்க்கு எளிதில்
ங்கும்படி சந்தவின்பத்தோடு செம்பாகமாக அமைத்துள்
ன். இப்புத்தகத்தைப் படிக்கும் மாணவர்கள், தமிழ்ப்பாஷா
னமும் நல்லொழுக்கமும் கைவரப் பெறுவார்கள் என்பது
லை. முதற்புத்தகத்தைப் போலவே இவ்விரண்டாம் புத்தகத்
யும் தத்தம் கலாசாலையில் ஆதரித்து என்னை இன்னும் இத்
கய பணிகளிற் புகுத்தி ஊக்கி உபகரிக்கும்படி கலாசாலை ஆசி
யர்களையும் தமிழபிமானிகளையும் வேண்டிக் கொள்கின்றேன்.

சோதை அகம்,
மதுரை.

இங்ஙனம்,
ஆ. கார்மேகக் கோன்.

# உள்ளுறை.

பொருள்.


1. யயாதி நரபதி .... ...
2. உத்தம மாணவன் கசன் ... ...
3. பரீக்ஷித்து .... ...
4. குருகுலவாசம் .... ...
5. பீமன் வல்லபம் .... ....
6. துருவன் சித்தி ... ...

ஸ்ரீ

# திகாசக்கதாவாசகம்

(இரண்டாம் புத்தகம்.)

## யயாதி நரபதி.

(மகன் தந்தைக் காற்றிய உதவி.)

யயாதி தந்தை நகுடன்

உலக ரக்ஷகனாகிய மாதவனது இருத கமலத்தினின்றும்
உதித்த சந்திரனது வம்சத்திற் பிறந்து, கீர்த்
தியிற் சிறந்து இவ்வுலகத்தையாண்ட அர
சர்கள் எண்ணில்லாதவர்கள்; அவர்களுள்
ன், புரூரவா ஆயு முதலியோர் முதன்மையானவர்கள்.

இவர்களுள் ஆயுவுக்கு ஸ்வர்ப்பாணவி என்னும் மங்கை
டம் பிறந்தவன், நகுடன் என்னும் நரபதி. இவன் தன்
ந்தைக்குப் பின்னர் மகுடம் புனைந்து, அரசர்க்குரிய
றிவு ஆற்றல்களில் உயர்ந்து, தனது ராஜ்யத்தை அற
றி வழுவாது பரிபாலித்து வந்தான். அன்றியும் தேவர்
ளையும், முனிவர்களையும், அந்தணர்களையும், ஏனைய வரு
ணத்தார்களையும் நன்கு புரந்துவந்தான். சின்னாட்களின்
பின் இவனுக்கு யதி, யயாதி, சம்யாதி, ஆயாதி, அயதி,
துருவன் என்னும் ஆறு புத்திரர்கள் தோன்றினார்கள்.

நகுடன் இம்மண்ணுலகில் சிறந்த சக்கரவர்த்தியாக விளங்கியதேயன்றி விண்ணுலகத்துத் தேவர்களையும் கீழ்ப்படுத்தி இந்திராதிகாரத்தைச் செலுத்த விரும்பி, அப்பதவியை அடைதற்குரிய பரிமேத யாகங்கள் பல செய்யத் தொடங்கினான்.

இக்காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும் போர் பல, பன்னாட்களாக நடந்துகொண்டிருந்தன. அப்போரில் சுரர்கள், அசுரர்களோடு எதிர் நின்று பொர முடியாது பன்முறை தோற்றோடினார்கள். தமது தோல்விக்குக் காரணம், தனது வஜ்ஜிராயுதம் பழமையுற்றதே என்பதனைத் தெரிந்த இந்திரன், ததீசி என்னும் முனிபுங்கவரிடம் சென்று, அவரது முதுகந்தண்டெலும்பை யாசித்துப் பெற்றுக்கொண்டுபோய்ப், புதிய வச்சிரப்படை நிருமித்து, அசுரர்களோடு அறை கூவிப் பொருது அவர்களைக்கொன்று வென்றான். அசுரர்களுள் பலர் ஓடி ஒளித்தனர். அவர்களுள் விருத்திராசுரன் என்பவன் ஓர் மலைமீதேறி மறைந்துறைந்து தேவர்களை வெல்லுதற்குரிய வரத்தைப் பெறுதற்குத் தவஞ் செய்துகொண்டிருந்தான். இதனை யறிந்த இந்திரன், அங்கு சென்று அவனை வஜ்ஜிரப் படையால் சிரத்தைத் துணித்துக் கொன்றான். நிராயுதபாணியாய்த் தவம்புரிந்துகொண்டிருந்தவனைக் கொன்ற குற்றத்தால் உடனே இந்திரனைப் பிரமகத்தி தோஷம் பின்பற்றி விடாது வருத்தத் தொடங்கிற்று. அதனால் இந்திரன் பயந்து ஓர் தடாகத்துக்குள் புகுந்து தாமரை நாளத்தில் மறைந்து கொண்டான். இந்திரலோகமோ, இறைவனில்லாக் குறையால் பொலிவு குன்றியது. தேவர்கள், தங்களுக்கு அரச

லாக் குறையை அறிந்து, அதனை நீக்கக்கருதிப் பூவுல இந்திர பதவிக்குரிய அசுவமேதங்கள் ஆயிரத்தில் ஒன் ாடு குறைய அனைத்தையும் இந் நகுடன் செய்து த்திருத்தலைத் தெரிந்து, அவனை அழைத்துக்கொண்டு வும் ஏ முடி புனைந்து அமரர்பதி யாக்கினார்கள். இப்பதவி பா ய்திய நகுடன், இந்திராணியைக் கண்டுமகிழக் காத அ து, "அவளை என்னிடம் அழைத்து வாருங்கள்" ாய் ப ஆட்களை அனுப்பினான். ஏவலாளர் இதனை அயி ாணிக்குத் தெரிவித்தார்கள். இச்செய்தி கேட்ட இந்தி ாணி வருத்தமுற்று, தேவ குருவாகிய வியாழபகவானிடம் சென்று, "சுவாமி! என் நாயகன் உயிரோடிருக்கும்போதே மற்றொருவன் வந்து என்னைத் தன் மனைவியாகக்கொள்ளல் தர்மமாகுமா?" என்றாள். அதற்குக் குரு அவளை நோக்கி சப்தரிஷிகளும் சுமந்து வர அவன் சிவிகை ஊர்ந்து வந் தால் அவனே தேவேந்திரன்; அவனே உன் நாயகன்;" என்று விடை பகர்ந்தார். இந்திராணி அதற்குடன்பட்டுக் குருவை வணங்கி விடைபெற்றுச் சென்று "இருடிகள் எழு வரும் தாங்கச் சிவிகை ஏறி இங்கு வரக்கடவை" என்று நகுடனுக்குத் தூதனுப்பினாள். நகுடன் அவ்வாறே முனி புங்கவர் எழுவரும் சிவிகை தாங்க அதில் ஏறிச் செல்வா னாயினன்; சிவிகை தாங்கிய எழுவருள் குறுமுனியாகிய அகஸ்தியரும் ஒருவர், அவர் பாரம் பொறுக்கமுடியாது சிறிது நின்று தோள் மாற்றினார். இந்திராணியை அதி விரைவிலே காணவேண்டுமென்று அவாக்கொண்டிருக்கும் நகுடன், இச்சிறு தாமதத்தையும் பொறாமல் முனிவர்களை விரைந்து போங்கள், என்று பொருள் தரும்படியான சர்ப்ப, சர்ப்ப என்ற சொல்லால் ஏவினான். அப்போது பல்லக்

கின் முதற்கொம்பு தாங்கி நின்றவரான அகத்தியர், கத்
தில் கோபமூண்டெழ அவ்வாசனைநோக்கி, "நீ, சர்ப்ப சப்ட
என்று, எங்களை மதியாது ஏவியமையால் நீ அச்சர்ப்பமே
யாகக்கடவை" என்று சபித்தார். அக்கணமே நகுடன்
பெரியோரிடத்துப் புரிந்த தீங்கினால், பன்னெடு நாளாக
வருந்தி ஈட்டிய புகழ், தவம், சக்தி முதலிய எல்லாவற்
றையும் இழந்து, பெரிய மலைப்பாம்பு வடிவமாகிப் போய்,
பூமியில் கானகத்தில் வீழ்ந்தான்.

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி,
கணமேயும் காத்த லரிது" என்பது வேதவாக்கன்றோ

நகுடன் கதி இஃதாக, அவன் புத்திரர் அறுவருள்
மூத்தவனாகிய யதி என்பான் இளமையிலேயே யோகம்
புரிந்து ரிஷி கோலம் பூண்டு சென்றான். அதனால் அவ
னுக்கு இளையோனாகிய யயாதியே தன் தந்தைக்குப் பின்
னர் முடிதரித்துச் சக்கரவர்த்தியாய் உலகத்தைப் புரக்கத்
தொடங்கினான். இவன் சந்திரனையொத்த தண்ணளி
சுரக்கும் முகத்தினன்; சாந்தமும், அன்பும் ததும்பிய
அகத்தினன்; மந்தரம் நிகர்க்கும் தோளினன்; பகைவரைத்
தகர்க்கும் வேலினன்; வெண்கொற்றக் குடையுடையவன்;
வெம்பகை முடிக்கும் படையுடையவன்; மங்குலின் வழங்
கும் கொடையுடையவன்; ஏறுபோன்ற நடையுடையவன்.
இவன் அநேக யாகங்களைச் செய்தான்; பிதிர்க்களையும் தே
வர்களையும் பக்தியுடன் ஆராதித்தான்; தன் குடைக்கீழ்
வாழும் குடிகளுக்கு ஒரு விதத்திலும் தீங்கணுகாது க்ஷேம
மாய்க் காத்துவந்தான். இதுபரியந்தம் இவன் தனக்கோர்
காதலியைக் கடிமணம் புரியாதே காலந்தள்ளிவந்தான்.

## தெய்வயானை திருமணம்.

இவன் இங்ஙனம் வாழ்ந்துவரும் நாளிலே அசுர குருவும் அந்தணகுல திலகருமாகிய சுக்கிரருக்குத் தெய்வயானையெனச் சீரிய நங்கை ஒருத்தி பிறந்திருந்தாள். இவள் அறிவிலும் அழகிலும் சிறந்து வளர்ந்து, மங்கைப் பருவமுற்றுத் திகழ்ந்தாள். முன்பு ஒரு முறை இவளுக்குக் கசன் என்பான் இட்ட சாபம், கட்டும் நாளும் கிட்டியது. அதனால் இவள் வசந்தகாலத்தில் ஒருநாள் அசுராசனாகிய விடபபருவாவின் குமாரத்தி சன்மிஷ்டை யென்னும் பெண் மணியுடனும் அவளது தோழிமார் ஓராயிரமபேருடனும் சேர்ந்து ஓர் உத்தியான வனத்தின் மத்தியிலுள்ள தடாகத்தில் ஜலக்கிரீடைசெய்து களிக்கப் புறப்பட்டுப்போனாள். போனவர்கள் யாவரும் குளத்தில் இறங்கி நீந்தியும், மூழ்கியும், துருத்திகளால் தண்ணீரை மொண்டு இறைத்தும் ஒருவர்க்கொருவர் உல்லாசமாய் விளையாடிக்கொண்டிருந்தனர். அச்சமயத்தில் ஓர் சூறுவளி வந்து குளக்கரையில் அவர்கள் தனித் தனி களைந்து வைத்திருந்த ஆடைகளை எல்லாம் ஒன்றோடொன்று கலந்துபோகும்படி புரட்டித் தள்ளிற்று. அதனால் பெண்கள் பரபரப்புடன் கரையேறித் தத்தம் துகில்களை எடுத்தணிந்தனர். அசுரராஜன் புத்திரியாகிய சன்மிஷ்டை அவசரத்தால் அறியாது, குருவின் புதல்வி தெய்வயானையின் ஆடையைத் தன் ஆடையென எடுத்து உடுத்துக்கொண்டாள். அதனைக் கண்ட தெய்வயானை "அடீ! அசுரப்பெண்ணே, என் சிஷ்யையாகிய நீ, என்னுடைய ஆடையை எடுத்துடுப்பது அடுக்குமோ? என் ஆடையைக் கொடு கொடு" என்றுகோபித்துக் கூறி,

சன்மிஷ்டை தரித்திருந்த சேலையைப் பிடித்திழுத்தாள். அதற்குச் சன்மிஷ்டை "தெய்வ யானை! அதிகமாகக் கோபிக்காதே; அறியாது உன்னுடையதை என்னுடையதென்று எடுத்தணிந்துகொண்டேன்; இதோ எனது விலையுயர்ந்த ஆடையிருக்கிறது; இதை நீ அணிந்துகொள்; இதற்கென்ன இத்தனை மனஸ்தாபம்" என்று சமாதான மொழி பகர்ந்தாள். அதைக் கேட்டதும் தெய்வயானை, "அடி! என்ன சொல்லினை? உன் ஆடையை நான் அணிந்துகொள்ளவா; நன்றாயிருக்கிறது; அரசன் புத்திரி என்கிற கர்வத்தாலா இவ்வாறு கூறினை; உங்கள் வாழ்வெல்லாம் என் தந்தையினால் என்பதனை மறந்தாயோ? அசுர குலத்தவளாகிய உன் ஆடையை நான் காலால் தீண்டினும் கங்கையாடவல்லவோ வேண்டும்". என்று கடிந்து கூறினாள். இவ்வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் சன்மிஷ்டை, "அடீ பிச்சைக்காரி! உன் நிலையறியாது வரம்பு கடந்து என்னென்னவோ பேசிவிட்டாயே; உன் வாழ்வு எனக்குத் தெரியாதா? உன் தந்தை தினந்தோறும் என் தந்தை சபைக்கு வந்து குனிந்து நின்று, வந்தியைப்போல் வாழ்த்தித் துதித்துப் பின் என் தந்தை கொடுப்பதை வாங்கிப் போயன்றோ அன்றன்று உங்களுக்கு உலையேற வேண்டும்; இந்நிலைமையையுடைய உனக்கு இவ்வளவு வாய் வளப்பம் எவ்வாறு வந்தது? உன் கோபம் என்னை யாது செய்யும்" என்று வெகுண்டு பேசித் தன் முன்றானையைப் பிடித்துக்கொண்டு நின்ற தெய்வயானையைப் பக்கத்திலிருந்த பாழ்ங் கிணற்றில் தள்ளிவிட்டுத் தோழிகளுடன் தன் இருப்பிடம் சென்றுவிட்டாள்.

கிணற்றுள் தள்ளப்பட்ட தெய்வயானை; அங்கு ஒரு கொடியை ஆதாரமாய்ப் பிடித்துக்கொண்டு, "அந்தோ! என் செய்வேன்! இவ்வாபத்து வேளையில் என்னைக் கரையேற்றிக் காப்பாற்றுவார் ஒருவருமில்லையோ! அநாதரக்ஷகா! ஆபத்பாந்தவா!" என்று அழுது புலம்பி நின்றாள். இச்சமயத்தில வேட்டை வயத்தனாய்க் காட்டிற்கு வந்த யயாதி, நெடுநேரம் வேட்டையாடி விடாய்த்துக் களைப்புற்று, நீர் நிலையை நாடி அவ்வழியாக வந்தான். வந்தவன் அக்கிணற்றுள் பெண் குரல் கேட்பதை யறிந்து, அக்கிணற்றைப் போய்க் கண்ணுற்றான். அப்போது ஒரு பூங்கொடி மற்றொரு கொடியைத் தழுவி நிற்பதுபோல் கொடியைப் பிடித்துக்கொண்டு கண்ணில் நீர் ததும்ப நிற்கும் தெய்வயானையை அரசன் பார்த்தான்; அவ்வளவில் அவன், "ஆரணங்கே! யுவதியே! உனக்கு இவ் அவதிவரக் காரணமென்ன? இப்பாழ்ங் கிணற்றில் எப்படி வீழ்ந்தாய்? நீ யாருடைய பெண்? நடந்ததைச் சொல்? நான் தீண்டலாமோ?" என்று வினவினான். தெய்வயானை, "நான் அசுரகுருவாகிய சுக்ரருடைய குமாரத்தி; இதோ என் வலக்கை; பிடித்துத் தூக்கிவிடும்" என்று வேண்டினாள். உடனே யயாதி அவள் கரத்தைப் பிடித்துக் கரையேற்றினான். பின்பு தெய்வ யானை நடந்ததைக் கூறினாள். அதுகேட்ட யயாதி, "இனி உனக்குப்பயமில்லை; உன் இஷ்டப்படி இருப்பிடம் செல்; நான் போகிறேன்" என்றான். அப்போது தெய்வ யானை, அரசனை நோக்கி "ஆபத்தினின்றும் காத்து எனது ஆருயிரை அளித்த அண்ணலே! நீரே என் அன்புக்குப் பாத்திரர்; நீர் எப்போது என் கரத்

தைத் தீண்டினீரோ அப்போதே எனது காதலனாகிவிட்டீர்; என்னை இக்கானகத்தில் தனியேவிட்டு நீர் செல்வது தகுதியாமோ? என்னையும் உம்முடன் அழைத்துச் செல்லும்" என்று வேண்டினாள். அரசன் "சுக்கிரர் செல்வியே! நானோ க்ஷத்திரிய குலத்திற் பிறந்தவன்; நீயோ பிராமண குல மாது; அன்றியும் சிறந்த ஆசாரியரது புத்திரி; நீ சொல்லும் இச்சொல்லைக் கேட்ட அளவிலேயே என் நெஞ்சம் அஞ்சுகிறது; உனக்குப் பதியாவதற்கு யான் தகுந்தவனல்லன்; மீண்டும் இதனைச் சொல்லாதே" என்று மறுத்துரைத்தான். தெய்வயானை சிறிது கோபமுற்று, "அரசரே! நீர் என் பேச்சைக் கொண்டு என்னை அங்கீகரியாவிடின் என் தந்தையின் மூலமாகவே உம்மை யான் கணவனாக வரிப்பேன்; இது தவறாது; கற்புடைய பெண்டிர்கள் முதலில் தம்மைத் தீண்டியவரை யன்றிப் பிறனொருவனை மனத்தால் நினைத்தலுமுண்டோ? வேண்டுமாயின் நீர், உம் இருப்பிடம் செல்லும்" என்று சொன்னாள். யயாதி பின்பு அவ்விடம் விட்டகன்று தன் நகரம் போய்ச்சேர்ந்தான்.

தெய்வயானை யயாதிராசன் சென்ற பின்பு; சிறிது தூரஞ்சென்று ஒரு மரத்துநிழலை அடைந்து, அழுது துக்கமும் வெட்கமுமுற்று நின்றாள். சுக்கிரர், தன்மகள் நெடுநேரம் வரை வாராதது கண்டு, தாதியை அழைத்துத் தெய்வயானையைத் தேடிவரும்படி சொன்னார். அவளும், தெய்வயானை தோழிகளோடு வழக்கமாய் விளையாடும் இடமெல்லாந் தேடித்திரிந்து, பின்பு அழுது நிற்கும் தெய்வயானையைக்கண்டாள். உடனே அவள் வருத்தமுற்று, "நடந்ததென்ன? விரைந்து சொல்லுக; பிதா உன்னைக் காணாது

பெருங்கவலையுள் மூழ்கியிருக்கின்றார்" என்று சொன்னாள். தெய்வயானை, மனக்கொதிப்புடன் நடந்தவையெல்லாம் சொல்லி, "தாதியே! இனி விடபபருவாவின் நகரத்துக்குள் நான் அடியிடமாட்டேன்; இதனை என் தந்தையாருக்குத் தெரிவிப்பாயாக" என்று கூறினாள். தாதியும் அக்கணமே போய்ச் சுக்கிராரிடம் செய்திகளைத் தெரிவித்தாள்.

இதனைக் கேட்டமாத்திரத்தில் சுக்கிரர் மிக்க துக்கமும் கோபமுங்கொண்டு, பெண்ணைத்தேடி விரைவாக வந்து மகளைக்கண்டு இரண்டுகைகளாலும் தழுவிக்கொண்டு, "செல்வியே! நீ என் அந்தத்துஷ்டையாகிய சன்மிஷ்டையோடு சேர்ந்து சென்றாய்? உலகத்தில் ஒருவர்க்கு இன்பமும் துன்பமும் உண்டாவது அவரவாது குற்றங்களாலும், குணங்களாலுமேயாம்; உனக்கு இங்ஙனம் நேர்ந்தது சேரத்தகாதவர்களோடு சேர்ந்த குற்றத்துக்குப் பரிகாரமாகத்தான் என்றே கருதுகின்றேன்". என்று மனவருத்தத்துடன் கூறினார். தெய்வயானை அது கேட்டு, "இப்படி எனக்கு நேர்ந்தது என் குற்றத்துக்குப் பரிகாரமாகவே யிருக்கட்டும்; ஆனால் அவளுரைத்த பழிமொழிகளைக் கேளுங்கள்; அவை, நெஞ்சை நஞ்சுபோற் சுடுகின்றன; நீவிர் எப்போதும் அசுரர்களை வந்திபோல் வந்தித்துத் துதிக்கின்றீராம்; நீர் அவர்கள் கொடுக்கும் பிச்சையை இச்சித்துக் கையேந்தி வாங்குகின்றீராம். இவையெல்லாம் உண்மையா? அவள் என்னைப்பார்த்து இக்கடுஞ்சொற்களை ஒருமுறையல்ல; பல முறை சொன்னாள். அதுவும் போதாதென்று கிணற்றிலும் தள்ளிவிட்டாளே". என்று கண்ணீரும்கம்பலையுமாய்ச் சொல்லிவருந்தி நின்றாள்.

இவற்றைக்கேட்ட அசுரகுரு "தெய்வயானே! நீ பிறரைத் தோத்திரம் செய்பவனுக்கும், கையேந்துபவனுக்கும் யாசிப்பவனுக்கும் மகளல்லள்; பிறரால் துதிக்கப்படுகிறவனுக்கும் பிறர் வாழ்வுக்குக் காரணமானவனுக்கும் மகள் என்று அறிவாயாக. இது விடபபருவாவுக்கும் தெரியும்; இந்திராதி தேவர்களுக்கும் தெரியும்; யயாதி மன்னனுக்கும் தெரியும். நானே எல்லா உலகத்துக்கும் பிரபு; இறந்தாரை எழுப்பும் எனது சஞ்சீவி மந்திர பலத்தாலே அசுரர்கள் பிழைத்திருக்கிறார்கள்; நம்மைப் பற்றி நாமே புகழ்வது முறையன்று என்றே இதைப்பற்றி அதிகம் சொல்ல நாவெழ வில்லை; நீ கோபத்தை அடக்கு; பொறுமையை மேற்கொள்;

"ஒறுத்தார்க்கு ஒருநாளை யின்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்." என்பதனை நினை;

சிறுவர்களும், சிறுமிகளும் அறிவில்லாமல் விரோதம் செய்வதை அறிவாளிகள் பொருட்படுத்தலாகாது" என்று பலவாறு புகன்று, தெய்வ யானையைத் தேற்றினார்.

இவ்வாறு சொல்லக்கேட்ட தெய்வயானை, "பிதாவே! நான் சிறு பெண்ணாயிருந்தாலும் தர்மா தர்மங்களின் சூட்சுமங்களை அறிவேன்; பொறுமைக்கும் நிந்தனைக்கு முள்ள பலாபலன்களையும் தெரிவேன்; செய்ய வேண்டியதைச் செய்யாமல் சிஷ்ய முறையையும் கைவிட்ட சிஷ்யன் விஷயத்தில் பொறுமை காட்டுவது உலக அபிவிர்த்தியைக் கருதுகிறவனுக்குத் தகாது; ஒழுக்கம் தப்பினவர்களிடம் கூடி வாழ்வது எனக்குப் பிரியமில்லை; எவனொருவன் பிறரது

குலத்தைப் பற்றியும் ஒழுக்கத்தைப் பற்றியும் அவமதித் துரைக்கின்றனரோ அவனுடன் அறிவுடையோர் கூடி வாழ் வது கூடாது; செல்வமில்லாதவர்களாயிருப்பினும், அடக்க மாத்திரம் உடையவர்களா யிருப்பின், அவர்களே செல்வ முடையவராவர்; ஒழுக்கம் கெட்டவர்களும் பாவிகளும் செல்வம் படைத்திருப்பினும் அவர்கள் புலையரினும் புலை யரே; இத்தகையோருடைய சேர்க்கையால் என்றும் அவ மானமே உண்டாகும்; சன்மிஷ்டை கூறிய கொடுஞ் சொற்கள் என் நெஞ்சைத் தீக்கடைகோல்போல் கடை கின்றது; ஆயுதங்களினால் வெட்டப்பட்ட புண்ணும் ஆறும்; தீயினாற் சுட்ட புண்ணும் ஆறும்; நாவினாற் சுட்ட புண் ஒரு நாளும் ஆறாது.

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

"என்ற முதியோர்வாக்கு அநுபவ வாக்கன்றோ?" என்று மீண்டும் கூறினாள்.

இவ்வாறு தெய்வயானை உரைத்தவற்றை யெல்லாம் கேட்ட சுக்கிரர், விடபபருவாவின் மீது மிக்க கோபங் கொண்டவராய் அவனுடைய சபையை விரைவாய்ப் போய்ச்சேர்ந்தார்; சேர்ந்து அவனை நோக்கி, "அரசே! ஒருவன் செய்கிற பாவம் பசுவைப்போல் உடனே பயனைத் தராவிடினும் நாளடைவில் செய்தவனது வேரைக்களைந்து விடும்; தன் புத்திர பௌத்திரர்களிடத்தும் தன்னிடத்தும் உண்டாகிற பாவச் செய்கைகளைக் கவனிக்காமல் இருப்பா னானால் அது அளவுக்கு மிஞ்சி உண்ட உணவு எப்படி நஞ்

சாய் உண்டவனை நலியுமோ அவ்விதமே தவறாது பெருந் துன்பத்தைப் பயக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை; நீ, முன்பு என்னிடம் உத்தம சீலனாய்க் கல்வி பயின்ற கசன் என்னும் பிராமணச் சிறுவனைப் பன்முறை கொல்வித்தாய்; இப்போதோ மான மிகுந்த என் புத்திரி தெய்வயானையை உன் மகள் சன்மிஷ்டை பலவாறு பழித்துரைத்தது மன்றிப் பாழ்ங்கிணற்றிலும் தள்ளினாள்; அதனால் அவள் நீ ஆளும் இந்நகரில் அடியிடுவதில்லை யென்று சூளும் உரைத்துக் காட்டிலேயே நிற்கின்றாள்; அவள் இல்லாமல் இங்கு வாழ்க்கை எனக்கேது; இப்படி ஒன்றின்மேலொன்றாகச் செய்யத் தகாதன செய்யும் உன்னையும் உன் சுற்றத்தாரையும் விட்டு நீங்கப் போகின்றேன்." என்று மிக்க கோபத்தோடும் விசனத்தோடும் கூறினார்.

இவ்வாறு சுக்கிரர் சொல்லக்கேட்ட விடபபருவா, "ஆ! இதென்னே விபரீதம்! சுவாமிகளே சன்மிஷ்டையைக் கொண்டு இக்கொடுஞ் செயலைத் தெய்வானைக்கு யான் செய்வித்திருப்பேனாயின் நான் ஹீனகதியையடைவேன்; இவ் விஷயங்களுள் ஒன்றும் யான் அறிந்ததில்லையே" என்று வணங்கிக் கூறினான்.

விடபபருவா இவ்வாறு கூறுதலும் சுக்கிரர், "ஓ! அசுரா! என்னை நீ பொய் பேசுகிறவனாகவோ கருதுகின்றாய்? அதனாலன்றோ நான் கூறுகின்ற இவ்விஷயத்தில் அலட்சியம் காட்டுகின்றாய்" என்று கடிந்துரைத்தார். அதற்கு விடபபருவா, "பிருகு புத்திரரே! தங்களைப் பொய் பேசுகிறவராக யான் கனவிலும் கருதுவேனோ? பொறுத்

தருளவேண்டும். அடியேங்களை விட்டுக் குருமணியாகிய தாங்கள் பிரிவீர்களாயின் எங்கட்குப் பிழைப்பேது? யாங்கள் அனைவரும் அக்கினியில் பிரவேசமாவோம்;" என்று பணிவுடன் பகர்ந்து நின்றான். சுக்கிரர், "அசுரர் அரசே! நீங்கள் தீக்குளிப்பினும் கடலில் வீழினும் ஆவதென்ன? எனது அருமைப் புதல்வியின் கவலை அது கொண்டு நீங்கப் பெறுமோ? அவளது மனம் சமாதானம் அடையும் காரியத்தை நீ செய்தாலன்றி யான் கணப்பொழுதும் இங்கு தரியேன்". என்றார்.

விடபபருவா "சுவாமிகள் கட்டளைப்படி என்ன செய்ய வேண்டுமாயினும் செய்யச் சித்தமாயிருக்கின்றேன்" என்று சொல்லித்தனது சுற்றத்தாரோடும் சுக்கிரரோடும் தெய்வயானை இருக்குமிடம் சென்று, "தெய்வயானையே! கிருபைகூர்ந்தருள வேண்டும்; என்ன வேண்டுமோ அதனை அபராதமாக அளிக்கின்றேன்; உன் தந்தை என்னால் எப்போதும் தொழப்படுபவர்" என்று கூறி வணக்கத்துடன் நின்றான். அதற்குத் தெய்வயானை, "உன் மகள் சன்மிஷ்டை ஆயிரந்தோழிமார்களுடன் எனக்கு வேலைக்காரியாய் அமர்ந்திருக்க வேண்டும்; என் தந்தை என்னை யார்க்கு எவ்விடத்துக்கு விவாஹம் செய்து அனுப்புகின்றாரோ அங்கும் வந்து தாதியாக வேண்டும்"என்று சொன்னாள்.விடபபருவா,"ஒரு குலப் பாதுகாப்புக்கு இதனை யான் செய்தல் பெரிய காரியம் ஆமா? அங்ஙனமே செய்கிறேன்" என்று சொல்லித் தெய்வயானைக்குத் தாதியாக வேண்டுமென்ற கட்டளையைச் சன்மிஷ்டைக்கு ஒரு தாதி மூலம் தெரிவித்தான். சன்

மிஷ்டை அக்கட்டளையைக் கேட்டு, "எங்களது குல குருவாகிய சுக்கிரரும் அவரது புதல்வி தெய்வயானையும் யான் செய்த குற்றத்திற்காக எங்கள் குல மெல்லாம் கெட, இவ்விடம் விட்டு வேறிடம் செல்ல வேண்டாம்; நான் தெய்வயானை விரும்பியபடியே உவப்புடன் ஒருப்படுகின்றேன்" என்று சொல்லிப் பிதாவின் கட்டளைப்படி ஆயிரம் தோழிகளுடன் அந்தப்புரத்திலிருந்து வெளிப்பட்டுத்தெய்வயானை இருக்குமிடம் வந்து தெய்வயானையை வணங்கி, "நான் ஆயிரம் தோழிமார்களுடன் உனக்குப் பணிவிடை புரியும் தாசியாக ஆகிறேன்; உன் தந்தை உன்னை மணம் செய்து கொடுக்கும் இடம் எதுவோ, அங்கும் உன் பின் வருவேன்" என்று சொல்லி நின்றாள், இங்ஙனம் சன்மிஷ்டை தாதியாகியும் கூட தெய்வயானை கோபந்தணியாதவளாய், "நான் துதிப்பவன், யாசிப்பவன், வாங்குகிறவன் பெண்ணல்லவோ? துதிக்கப்படுகிறவன் பெண்ணாகிய நீ, எப்படி எனக்குத் தாதி யாகலாம்?" என்று வினவினாள். அதைக் கேட்ட சன்மிஷ்டை, " துக்கப்படுகிற சுற்றத்தார்க்கு எவ்வகையாலும் அத் துக்க நீக்கத்திற்குரிய உபாயத்தைத் தேடவேண்டும், அதுபற்றியே உனக்கு இங்ஙனமாகின்றேன்" என்று மொழிந்தாள்.

பின்பு தெய்வயானை தனது பிதாவை வணங்கி, "தந்தையே! நான் திருப்தியானேன்; இனிமேல் நகரத்துக்குள் வருகிறேன்; உம்முடைய ஞானமும்; வித்தையின் ஆற்றலும் வீணல்லவென்று தெரிந்து கொண்டேன்." என்று

மகிழ்ச்சியுடன் சொன்னாள். அதன் மேல் யாவரும் தத்தம் இருப்பிடம் ஏகினர்.

இங்ஙனம் சன்மிஷ்டையைத் தாதியாகப் பெற்ற தெய்வயானை, சின்னாள் சென்ற பிறகு, ஒரு நாள் சன்மிஷ்டையோடும் மற்ற தாதிகளோடும் விளையாடுதற்கு, முன்பு போன அந்த வனத்துக்குச் சென்றாள். அங்குச் சென்று, ஆயங்களோடு இளமரச் சோலைகளிற் புகுந்து தளிர் கொய்தும், மலர் கொய்தும், கண்ணிகள் கட்டியும், மாலைகள் தொடுத்தும் கூந்தல்களிற் சூடி, மயிலோடு ஆடியும், குயிலோடு பாடியும், கிஞ்சுகத்தோடு கொஞ்சியும், பூங்கொடி ஊஞ்சல் புரிந்து விளையாடிக் களித்தும், வாவி படிந்து எழுந்து வண்ணப் பட்டாடைகள் தரித்தும் தடாகக் கரையின் தண்மர நீழலில் ஓர் மரகதப் பாறையில் இட்ட ஆசனத்தில் தாரகை நடுவண் தண்மதி போலத் தாதியர் புடைசூழப் புன்னகையோடு நன்னயமாக அமர்ந்திருந்தாள்.

இச்சமயத்தில் யயாதி மன்னன், தனது படை புடைசூழ வேட்டை வயத்தனாய் அக்காட்டிற்கு வந்தவன், வேட்டை மிருகங்களைத் தேடி விடாய்த்து, வில்லுங் கையுமாய்த் தெய்வயானை முதலியோர் வீற்றிருக்கும் சோலையை அடைந்தான். அடைந்தவன், ஓர் தழை செறிந்த தண்மர நீழலில் மந்தகாசத்துடன் உட்கார்ந்திருக்கும் தெய்வயானையையும், சிறிது தாழ்ந்த ஆசனத்திலிருந்து தெய்வயானையின் சீறடிகளைப் பிடித்துக்கொண்டிருக்கும் சன்மிஷ்டையையும், ஏனைய தாதியர் கூட்டத்தையும் கண்டு அம்மா

நிழலின் அருகிற் சென்றான். அப்போது மன்னனைக் கண்ட பெண்கள் யாவரும் நாணத்தால் தலை சாய்த்துப் பெரு விரலை நோக்கி நின்றனர். இங்ஙனம் நின்ற பெண்களுள் அக்கிராசனத்தி லமர்ந்திருந்த தெய்வயானையை நோக்கி, யயாதி, "பெண்கள் நாயகமே! நீங்கள் இரண்டு கன்னிகை கள் பல மடவார் கூட்டம்புடை சூழ இங்கு அமர்ந்திருக் கின்றீர்களே! உங்களிருவருடைய வரலாற்றினையும் அறிய என் மனம் அவாவுகின்றது; கூறத்தகுமோ?" என்று கேட்டான். அதற்குத் தெய்வயானை, நாணம் தடுப்பி னும் முன்பு தனக்குக் கசன் இட்ட சாபம், அதனைத் தள் ளியமையால் மென்மையாய் நாவை யசைத்து "அரச ரேறே! நான் சுக்கிரனென்னும் அசுர குருவின் புத்திரி எனது அடிக்கீழ் இருக்கும் இவள், விடபபருவா என்னும் அசுரராஜன் குமாரி; சன்மிஷ்டை என்னும் பெயரினள்" என்று தேனினுமினிக்கச் செப்பினள்.

யயாதியின் உள்ளத்தைச் சன்மிஷ்டையின் அழகு மிகுந்த முகமும் பார்வையும் கவர்ந்து கொண்டன. அதனால் அவன் அவள்மீது கழி பெருங்காதல் கொண்டயனான். அவள் தெய்வயானைக்கு அடித்தொண்டு செய்து கொண் டிருப்பது அரசனுள்ளத்தை அதிகமாக வருத்தியது. ஆத லால் அவளைப்பற்றிய செய்தியை அறிதற்கு விருப்புற்றுத் தெய்வயானையை நோக்கிச் சில கூறத்தொடங்கி "குருபுத் திரியே! உன் அருகில் நிற்கும் இச் சன்மிஷ்டை போல் அழகிற் சிறந்த பெண்ணை தேவ மாதர்களிலும் இயக்கர் ஸ்திரீகளிலும் கந்தருவ நங்கைகளிலும் பூமடந்தைகளிலும் இதற்குமுன் யான் கண்டது மில்லை; கேட்டது மில்லை, இத்

தகைய உத்தம இலக்கணங்கள் வாய்ந்த அசுர ராஜாவின் பெண்ணாகிய இவள் இப்படித் தாதியாய் வரக் காரண மென்ன? இவளுக்கு இப்படிப்பட்ட துர்ப் பாக்கியம் வந்தது, இவள் பூர்வ ஜென்மத்தில் செய்த பாவத்தினால் தானே? இவ் வஞ்சியினது அழகு உன் அழகினும் பன் மடங்கு விஞ்சியதாக வுள்ளதே! அந்தோ!! பாவம்!" என்று இரங்கிக் கூறினான். இதனைக் கேட்ட தெய்வ யானை, "இவள் இப்பதவியை யடைந்தது, விதியினால் என்றே நீர் நினைத்துக் கொள்ளும்; 'ஊழிற் பெருவலி யாவுள' என்பதனை நினைப்பீராக; அஃதிருக்கட்டும்; நீர் யார்? எங் கிருந்து, என்ன காரியமாக இங்கு வந்தீர்! மானைத் தேடியா? மலர்கள் கொய்யவா? அன்றி விடாய் தணிக் கவா? சொல்லும்." என்று கேட்டாள். யயாதி, "யான் நகுட புத்திரன், யயாதி; வேட்டையாடிக் களைத்து, விடாய் தணிக்கக் கருதியே இங்கு வந்தேன்; வந்த காரிய மும் முடிந்தது; இனி இவ்விடத்தை விட்டுச் செல்கின் றேன்," என்றான். தெய்வயானை, "அரசே! நீர் இனித் தனியாய்ச் செல்வதென்பது முடியாது; இந்த இரண்டா யிரம் தாதிகளோடும், சன்மிஷ்டையோடும் யான் உமக்கு உரியவளாகின்றேன் என்பதை அறியும்; நீர் என் காதற் குரிய நாதனைக் கடவீர்" என்று மெல்லிய குரலால் மொழிந்தாள். சன்மிஷ்டைமீதே காதல் கொண்டிருந்த யயாதி, தெய்வானை இங்ஙனம் கூறியதைக் கேட்டஅளவில், 'இஃதென்ன ஆச்சரியம்!, பெண்களுக்குரிய நாணமின்றியும் இந் நங்கை வெளிப்படையாய் இவ்விதம் கூறுகின்றாள்;' என்று தன்னுள் நினைந்து, சன்மிஷ்டையைப் பார்த்த வண் ணமாகவே தெய்வயானையிடம் பேசத் தொடங்கினான்.

"சுக்கிரர் புத்திரியே! நானோ அரசன்; நீயோ அந்தண குலப் பெண்; நம்மிருவர்க்கும் மணம் எங்ஙனம் பொருந் தும்?" என்று கேட்டான்.

தெய்வயானை: "அரசே! க்ஷத்திரிய குலத்தையும் பிராமண குலத்தையும் சூட்சுமமாய் ஆராய்ந்தால் இரு குலத்துக்கும் ஏற்றத் தாழ்வு அதிகமில்லை" என்றாள்.

யயாதி: திரும்பவும், "நான்கு வருணத்திலும் பிரா மண வருணம் மேலானது ஆதலாற் கூடாது" என்றான்.

தெய்வயானை: "அரசே! நீர் திரும்பத் திரும்பப் பழம் பாடமே படிக்கின்றீர்; நம்மிருவர்க்கும் பாணிக் கிரகணம் முன்னமே நடந்திருக்கிறதென்பதனை மறந்தேதான் நீர் இங்ஙனம் பேசுகின்றீரென்று நினைக்கின்றேன். எவராலும் தீண்டப் பெறாத என் கரத்தை நீர் முன்பு தீண்டியதை மறந்தீரோ? உம்மால் பிடிக்கப்பட்ட என் கைகள், வேறொரு ஆடவனால் தீண்டப் படுமோ?" என்று முன் நடந்த வரலாற்றை மெதுவாகத் தெரிவித்தாள்.

இவற்றை யெல்லாம் கேட்ட யயாதி, மறுக்கமுடியாது ஒருவாறு உடன்பட்டு, "தெய்வயானை! உனது தந்தையோ சாபானுக்கிரக சக்தி வாய்ந்தவர்; அவரது உடன்பாடில் லாமல், உன்னை மணந்தால், அவரது கோபத்துக்கு நான் ஆளாகவேண்டுமே,

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி,

கணமேயும் காத்த லரிது" என்றபடி அவரது கடுஞ் சினத்தைக் கணப் பொழுதும் என்னால் தாங்கமுடியாது

என்று தனது கருத்தை வெளியிட்டான். தெய்வயானை, "அரசே' என் தந்தை என்னை உமக்கு மனப் பூர்வமாகத் தாரை வார்த்துக் கொடுத்தால் நீர் ஒப்புக் கொள்வதில் தடையில்லையே" என்று கேட்டாள். "ஏதும் தடையில்லை" யென்றான், யயாதி. தெய்வயானை உடனே ஓர் தாதியை அழைத்து "நீ போய் என் தந்தையார்க்கு நான் நகுட புத்திரனாகிய யயாதி மன்னனை வரனாக வரித்திருப்பதைத் தெரிவித்து அவர்களை அழைத்துக்கொண்டு வருக" என்று சொல்லி அனுப்பினாள். அவளும் அவ்வாறே சென்று சுக்கிரருக்குத் தெரிவித்தாள். இதனை அறிந்ததும் சுக்கிரர், தெய்வயானை இருக்குமிடத்திற்கு வந்துசேர்ந்தார். யயாதி அவரைக் கைகூப்பி வணங்கி நின்றான். அச்சமயத்தில் தெய்வயானை தன் தந்தையை நோக்கி, "சுவாமிகளே! நகுஷ புத்திரனாகிய இந்த அரசர், நான் முன்பு கிணற்றில் வீழ்ந்து ஆபத்து நிலையிலிருந்தபொழுது முன்னர் யாரும் தொட்டறியாத என் கையைப் பிடித்துக் காத்தார்; ஆகையால் என்னை இவருக்கு மனைவியாகக் கொடுத்தருளுங்கள்; இவ்வுலகத்தில் இனி இவரைத் தவிர வேறு நாயகனை நான் வரிக்கமாட்டேன்;" என்று தாழ்ந்த குரலோடு சொன்னாள்.

தெய்வயானை கூறிய இம் மொழிகளைக் கேட்ட சுக்கிரர் சிறிதுநேரம் யோசித்து நின்று "தெய்வயானையே இத்தகைய சம்பவம் உன் விஷயத்தில் ஏற்பட்டது, கசன் என்பான் முன்பு உனக்கிட்ட சாபங் காரணமாகவே என்று நினைக்கின்றேன். ஆனாலும் குற்றமில்லை; உன் விருப்பப்படியே செய்கின்றேன்" என்று சொல்லிவிட்டுப் பின்பு

யயாதியைப் பார்த்து, அவர் "வீரனே என் பிரிய புத்திரியாகிய இவள், இப்போது உன்னைப் பதியாக வரிக்கின்றாள்; பிராமணப் பெண்ணை ஒருவன் தானாகவே கவர்ந்து கொண்டால் அது, வருணக் கலப்பாக ஆகும்; ஆகையால் பெரும் பாவந்தான்; ஆனால் மனப்பூர்வமாக என்னால் கொடுக்கப்படுகிற இவளை, நீ தேவியாக ஏற்றுக்கொள்வதால், குற்றமொன்றுமில்லை; இப் பெண்ணை நீ உவப்புடன் மணப்பாயாக; இங்கு நிற்கிற ராஜகுமாரியாகிய சன்மிஷ்டையும் உன்னால் எப்போதும் கௌரவத்தோடும் அன்போடும் நடத்தத் தகுந்தவளே இவளையும் உடன் அழைத்துச் செல்; ஆனால் நீ இவளை ஏகாந்தத்தில் அழைத்துப் பேச ஒண்ணாது; தொடவும் தொடாதே; யான் இட்ட இக் கட்டளையை மறந்துவிடாதே; இனித் தாமதமின்றித் தெய்வயானையை விதிப்படி தர்ம பத்தினியாக மணந்துகொண்டு உன் நகரம் செல்வாயாக" என்றார். யயாதி, அப்படியே சுக்கிரரை வலஞ் செய்து வணங்கித் தெய்வயானையை முறைப்படி மணந்து கொண்டான். பின்பு அவன் சுக்கிரரிடம் விடைபெற்றுக் கொண்டு சன்மிஷ்டையோடும் தாதிகளோடும் மகிழ்ச்சியுடன் தன் நகரம் போய்ச் சேர்ந்தான்.

இவ்வாறு நகரம் வந்து சேர்ந்த யயாதி, தெய்வயானையை அந்தப்புரத்தில் இருக்கும்படி செய்து சன்மிஷ்டையை அசோகவனிகை என்னும் சோலையினருகில் தனியாக ஒரு மாளிகை கட்டி அதில் வசிக்கும்படி செய்து, சிறந்த ஆடை ஆபரணங்களும், அன்னபானாதிகளும் கொடுத்து, நன்றாகக் கௌரவித்து வந்தான். தெய்வயானை அந்தப்புரத்தில் கணவனுடன் மிகுந்த அன்புள்ளவளாய் மகிழ்ந்தி

வாழ்ந்து வந்தாள். தெய்வயானையும் யயாதியும் நாடோறும் அசோகவனிகையில் சென்று விளையாடி மகிழ்ந்து வருவது வழக்கம். அச் சமயந்தான் சன்மிஷ்டை யயாதிக்கு எதிரே வரலாம். விளையாட்டு முடிந்தவுடன் சன்மிஷ்டையைத் தெய்வயானை அவளது இருப்பிடத்திற்கு அனுப்பிவிட்டுக் காதலனோடு அரண்மனை வந்து விடுவாள். இங்ஙனமாகப் பல வருடங்கள் நடந்து வந்தது.

தெய்வயானை இதற்கிடையில் யது துர்வசு என்னும் இரண்டு ஆண் மகவுகளைப் பெற்றெடுத்து மகிழ்ந்தாள். யயாதிக்குச் சன்மிஷ்டையின் மீது உண்டாயிருந்த காதல் நாளுக்கு நாள் முறுகி வளர்ந்துகொண்டே யிருந்தது. என் செய்வான்! சுக்கிரர் இட்ட கட்டளை முட்டுக் கட்டையாய்த் தடுத்துக் கொண்டிருந்தது. அதனால் அவன் அடிக்கடி "சீ, என்னைப்போலும் துர்ப்பாக்கியசாலிகள் யாவருளர்? கையில் மதுரமான கனி யிருந்தும் அதனை ருசிக்கும் பாக்கியமில்லாதவனாக விருக்கின்றேன். சன்மிஷ்டையை மனைவி யென்று சொல்லும் பேறு பெற்றிருந்தும், அவளோடு தனித்துப் பேசி மகிழவும் அவளைத் தொடவும் இயலாதவனாக விருக்கின்றேன். தெய்வயானை அழகிலும் புத்தியிலும் எவ்வளவோ சிறந்தவளா யிருந்தும் சன்மிஷ்டையையே என் மனம் நாடுகின்றது; என்ன காரணம்? அந்தோ பாவம்! என்னைக் கணவனாய் மணந்தும் சன்மிஷ்டை என்ன பலனை அடைந்தாள்? அவளைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் முடியாதவனாகவன்றோ விருக்கின்றேன். இப்போது அவளை ஒரு முறை பார்த்துவிட்டாலோ சுக்கிரரிட்ட கட்டளை யெல்லாம் நொடியிற் பஞ்சாய்ப் பறந்துபோகுமென்று

என் நெஞ்சம் அஞ்சுகிறது. என் செய்வேன்! என் வாக்கே என்னை இப்போது கட்டும் பாசமாயிருக்கிறது" என்று பலவாறு பன்முறை சிந்தித்துச் சிந்தித்து மனமாழ்கி யிருந்தான். சன்மிஷ்டையும், தனக்கு அழகிற் சிறந்த ஆடவர் திலகனாகிய யயாதி மன்னன் மணவாளனைக் கிடைக்கப் பெற்றும் மணமக்களுக்குரிய வாழ்க்கையின்றி வாளா இளமையும் நாளும் கழிகின்றனவே என்று இரங்கி வருந்திக்கொண்டிருந்தாள். 'தெய்வயானை மக்களைப் பெற்றாள்' எனத் தெரியவும் அவள் 'அப்பேறு எனக்கில்லையே' என்று மிகுந்த கவலைக்குள்ளானாள்.

இங்ஙனம் கவலைக் கடலுள் ஆழ்ந்திருந்த சன்மிஷ்டை ஒரு நாள் இரவில் கண் துயில் கொள்ளாது, சோகித்து எழுந்து சோலைப் புறத்தில் வந்து, அங்குள்ள விருக்ஷங்களையும், செடிகொடிகளையும் முன்னிலைப்படுத்திப் புலம்புபவளாய் "அசோகமே! நீ, சோகத்தால் தாக்குண்டு உன்னை அடைந்தவர்களுக்கெல்லாம் சோகத்தைத் தீர்த்துத் தெளிவை யளிக்கின்றாய்; அதனாலன்றோ, நீ 'அசோக' மெனப் பெயர்பெற்றாய்; நீ இப்போது என் கணவனை என்னகத்தில் கூட்டி என் சோகத்தையும் போக்கி யருளக் கூடாதா? ஏ! வரவழையே! (சுரபுன்னைமரம்) நீயை உண்டானால் என் நாயகனை என்னிடம் வரவழையே! ஏ! மாதவிப்போதே! என்காதலர்க்கு யான் படும் மாதவிப்போதே; என்று பிரலாபித்துக் கொண்டு "தெய்வயானையை ஓர் நிமிடமும் பிரியாதுறைகின்ற அரசர் தெய்வ சங்கற்பத்தால் இவ்வேளையில் ஈங்கு வாராரா? வந்தால் என் முகத்தை இரங்கிப்பாராரா?" என்றெல்லாம் நினைந்து நைந்து சந்திரோ

தயத்தை எதிர்பார்த்திருக்கும் சகோரம் போல் நின்று கொண்டிருந்தாள்.

இச் சமயத்தில் ஊழ்வினை வந்து உருத்தமையால், யயாதியும் சன்மிஷ்டையை நினைந்து நினைந்து, நித்திரையின்றித் தெய்வயானையின் அந்தப் புரத்தினின்றும் நீங்கி, அசோகவனிகை சோலைப் பக்கமாக வந்தான். தனியாய் வரும் அரசனைக் கண்டதும் சன்மிஷ்டை, மந்தகாசமான முகத்துடன் அரசனெதிர் சென்று கைகளைக் குவித்து வணங்கி "அரசே! உம்மையன்றி வேறெவரையும் என் சிந்தையில் நினையாதிருக்கின்றேன்; நீரோ என்னைச் சிறிதும் நினையாதிருக்கின்றீர்; ரூபத்தினாலும், குலத்தினாலும், ஒழுக்கத்தினாலும் யான் எப்படிப் பட்டவளென்று நீரே அறிவீர். அரசே! இப்போது என் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும்," என்று சொல்லிப் பிரார்த்தித்தாள்.

இவ்வாறு சன்மிஷ்டை கூறியதைக் கேட்ட யயாதி, "பெண்ணே! உனது அழகின் மேன்மையும், ஒழுக்கத்தின் சிறப்பும் குலத்தின் உயர்ச்சியும் முன்னரே நான் நன்கு அறிந்தவைகளே; உன்னை நான் பார்த்த நாள் முதலாக உன்னைக் கணப்பொழுதும் மறந்ததில்லை; 'என்னை நீர் நினையாதிருக்கின்றீர்' என்றனை. அது உண்மையே; உன்னை நான் மறந்திருந்தாலல்லவோ நினைக்கப் போகின்றேன்; சுக்கிராச்சாரியாரிடம் கூறிக் கொண்ட உறுதிமொழிகளாலேயே உன்னை இதுவரை அணுகமுடியாதவனாக விருக்கின்றேன். என் செய்வேன்! பெண்ணே" என்று இரங்கிய மொழிகளால் விடை பகர்ந்தான்.

சன்மிஷ்டை, "அரசே! ஸ்திரீகள் விஷயத்திலும் பிராண ஆபத்துக் காலத்திலும் தன் செல்வம் அழியுங் காலத்திலும் சொன்னசொல் மாறுவதினால் தீங்கில்லை; அது பொய்யாகாது, என்று பெரியோர் சொல்லக் கேட்டுள்ளேன்; ஆகையால் நீர் சுக்கிரரிடம் செய்துகொண்ட உறுதி மொழிகளைச் சிந்திக்கவேண்டாம்" என்றாள்.

யயாதி, "சன்மிஷ்டையே! ராஜ்ஜிய விஷயத்தில் என்ன சங்கடம் வரினும் சொன்ன சொல் திறம்ப மாட்டேன்" என்றான்.

தெய்வயானை, "அரசே! இப்போது என் வேண்டுகோளுக் கிணங்குவதால் எப்படிப் பொய் சொன்னவராவீர்? சுக்கிராச்சாரியரால் தெய்வயானையுடன் உமக்கு நானும் கொடுக்கப்பட்டவள் தானே? தெய்வயானையைப் போல என்னையும் பாதுகாக்க வேண்டுமென்று சொல்லித்தானே சுக்கிரர் என்னைக் கொடுத்தார்? தமது உடம்பில் ஒரு பாதிக்கு இதமும் ஒரு பாதிக்கு அஹிதமும் செய்வாருண்டோ? நீர் வேண்டினோர்க்கு வேண்டியவற்றை எல்லாம் கொடுக்கும் வள்ளன்மையுடையோரா யிருக்கின்றீரே; நான் வேண்டியதை மாத்திரந்தானா கொடுக்கலாகாது" என்று பரிவாக மொழிந்தாள். இச் சொற்களைக் கேட்ட யயாதி இரக்கங்கொண்டு "சன்மிஷ்டை உனக்கு என்ன வேண்டும்? ராஜ்ஜியம் வேண்டுமா? எப்படிப்பட்ட செல்வம் வேண்டும்? எச் செல்வம் வேண்டினும் இப்போதே தரச் சித்தமா யிருக்கின்றேன்" என்று சொன்னான்.

சன்மிஷ்டை, பெண்களுக்குப் "புத்திரர்களும் புருஷனுமே பெறுதற்கரிய செல்வங்கள்."

"பெறு மவற்றுள் யாமறிந்த தில்லை யறிவறிந்த,
மக்கட்பே றல்ல பிற"

'தம்பொருள் என்பதம் மக்கள்'

என்பவை அறவுரைகளன்றோ? ஆகையால் புத்திர செல்வத்தையே பாலித்தருளும்" என்று கேட்டாள்.

பின்பு அரசன் அதனை மறுக்கும் வழி காணாது, ஈதென்ன! "தர்ம சங்கடமானதே;" எனக் கவலைகொண்டு கடைசியாக இசைந்து சுக்கிரர் கட்டளையைத் துறந்து, சன்மிஷ்டையை அவளிஷ்டப்படி ஏற்றுக்கொண்டான். அன்று முதல் இருவரும் தெய்வயானை அறியாதபடி இன்புற்று வாழ்ந்து வந்தனர். நாளடைவில் சன்மிஷ்டை ஆயு, அநு என்னும் இரண்டு புதல்வர்களையும் கடைசியாகப் பூரு என்றொரு புண்ணியப் புதல்வனையும் பெற்று மகிழ்ந்தாள்.

சிறிது காலஞ் சென்ற பிறகு ஒரு நாள் தெய்வயானை யயாதியுடன் அசோகவனிகைக்குச் சென்றாள். அப்போது அவ்வனத்தில் தேவ குமாரர்களைப் போல் அச்சமின்றி விளையாடும் சன்மிஷ்டையின் குழந்தைகளை அவள் கண்டாள். அக் குழந்தைகள் தனது கணவனாகிய யயாதியின் உருவச் சாயலோடு காணப்படுவதை யறிந்து, சந்தேகங் கொண்டு, யயாதியை நோக்கி, "அரசே! இப் பிள்ளைகள் யார்? ஒளியிலும், அழகிலும் உம்மைப்போலவே தோன்றுகின்றார்கள்; உண்மை யென்ன? சொல்ல வேண்டும்" என்று கேட்டாள். அப்போது குழந்தைகளின் செவிலித் தாயார்கள் குழந்தைகளின் அருகில் சென்று, "நாங்கள் ஒரு முனிவரின் புத்திரர்கள் என்று சொல்லுங்

கள்" என்று மெதுவாகச் சொன்னார்கள். தெய்வயானை, குழந்தைகளை அழைத்து விசாரிக்கத் தொடங்கினாள். அக் குழந்தைகள் மறுமொழி பகர்வதற்கு முன்னமேயே செவிலித்தாய்கள், "குழந்தைகளே! ஒரு முனிவர் தாம் எங்களது பிதாவென்று ஏன் சொல்லாமலிருக்கிறீர்கள்?" என்று குழந்தைகள் மறு மொழி கூறவேண்டிய வகையைக் குறிப்பித்தார்கள். குழந்தைகள் "ரிஷியும் வேதாத்தியானம் செய்தவருமான ஒரு துவிஜர்தான் எங்களது தந்தை; அவரை எங்கள் தாய் மூலமாக அறிந்தோம்" என்றார்கள். அதற்குத் தெய்வயானை, "பிள்ளைகளே! உங்கள் பிதாவாகிய அந்தப் பிராமணருக்குப் பெயரும் கோத்திரமும் என்ன? அவர் யார்? எங்கே யிருக்கிறார்? நீங்கள் நல்ல பிள்ளைகள்; உண்மையை உரையுங்கள்" என்று இதமாய்க் கேட்டாள். அதற்குக் குழந்தைகள் அங்கிருக்கும் யயாதி அருகிற் சென்று, "நாங்கள் சொன்ன எங்கள் தந்தையாகிய அந்த முனிவர் இதோ இருக்கின்றாரே இவர்தான்" என்று யயாதியைச் சுட்டிக்காட்டிவிட்டுச் சன்மிஷ்டையினருகிற் சென்று, அவளது முன்தானையைப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். சன்மிஷ்டை நாணத்தால் தலைகுனிந்து விரலால் மண்ணைக் கிளைத்துக்கொண்டு நின்றாள். யயாதி, குழந்தைகள் தன்னைக் காட்டியதைக் கண்டு, ஒன்றும் உரையாது மௌனமாயிருந்தான். இஃதன்றி வேறென்ன செய்வான்! இச்சமயத்தில் தெய்வயானை கொண்ட கோபத்துக்கும் துக்கத்துக்கும் அளவும் உண்டோ? அவள் சன்மிஷ்டையைப் பார்த்து, "அடீ! கள்ளி, முன்பு நீ குழந்தைகளைப் பெற்றாயென்று கேள்விப்பட்டபோது உன்னை அழைத்து விசாரித்ததற்கு நீ, ஒரு முனி சிரேஷ்டரது அநுக்கிரகத்தி

னால் பிள்ளைப்பேறு கிடைத்ததென்று சொன்னாய்; இப்போது அந்த முனிவர் இன்னாரென்று நன்றாக வெளிப்பட்டு விட்டதல்லவா? அடீ! பாதகி! என்னிடம் தாதியாய் அமர்ந்து என் உப்பைத் தின்றுகொண்டே எனக்குக் கேடு நினைந்தாயே! குடியிருந்த வீட்டில் கொள்ளி வைத்தவளன்றோ நீ; உன் அசுர குலத்தின் குணத்தைக் காட்டிவிட்டாயல்லவா? 'குலத் தளவே யாகுமாம் குணம்'. என்னும் மூதுரை பொய்க்குமா," என்று கடுமொழி பகர்ந்தாள்.

அம்மொழிகளைக் கேட்டதும் சன்மிஷ்டை "அம்மணி! நான் ஏதோ பொய் சொன்னேனென்றும் வஞ்சித்தேனென்றும் கருதிக் 'கள்ளி யென்றும், கொள்ளியென்றும் வாய்க்கு வந்தபடி யெல்லாம் பேசுகின்றாயே; முன்பு நீ கேட்டபோது எனக்குப் புத்திரரை நல்கியவர், ஒரு ரிஷி என்றுதானே சொல்லியிருந்தேன்; இந்த யயாதி மகாராஜர் ஒரு ராஜ ரிஷியல்லவோ? இவர் வேதங்களை ஓதியவரன்றோ? துவிஜரன்றோ? நான் சொன்னதில் என்ன பொய் கலந்திருக்கிறது? நான் சொன்ன சொல்லின் பொருளை நீ சரியாய்க் கிரகித்துக் கொள்ளாவிட்டால் நான் பொய் சொன்னவளாக வேண்டுமோ? நன்றாயிருக்கிறது காரியம்; ஏது யயாதி மகாராஜர் உனக்குமாத்திரந்தானோ சொந்தம்? உன்னை இவ்வரசர்க்கு மனையாளாகக் கொடுத்த உன் தந்தையாகிய சுக்கிரர் எவரோ அவர்தானே என்னையும் இவர்க்குக் கொடுத்தார்; எனக்கு மாத்திரம் இவர் நாயகராகாமல் போய் விடுவது என்ன நியாயமோ? தெரியவில்லை. உலகத்தில் ஒரு கண்ணுக்கு வெண்ணெயும், ஒரு

கண்ணுக்குச் சுண்ணும்பும் வைப்பவருண்டோ? இல்லையல்லவா? ஆதலாற்றான், அரசர் உன்னிடம் வைத்த அன்புபோல் என்னிடமும் வைத்தார்; இதில் என்ன குற்றமுள்ளது; உனக்கு இவ்வரசர் விஷயத்தில் எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை எனக்கும் உண்டு என்பதனை இனிமேலாவது அறிவாயாக" என்று மிடுக்காய் விடையிறுத்தாள்.

இவற்றையெல்லாம் கேட்ட தெய்வயானை, சிந்தாகுலமிகுந்து, வேறொன்றும் சன்மிஷ்டையோடு உரையாட முடியாதவளாய் அரசனைப் பார்த்து, "அரசரே! என்ன காரியம் செய்தீர்? உம் குலத்துக்கு மூல புருஷனாகிய சந்திரனுக்கு முன்னமே யிருக்கும் களங்கம் போதாதென்றோ நீரும் இப்போது இக்களங்கத்தைத் தேடியளித்தீர்! நன்றாயிருக்கிறது! 'கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே' என்றபடி உமது மதியீனத்தால் உமக்குப் பெருங் கேட்டைத்தேடிக்கொண்டீர். இனி நான் அரைக்கணமும் இங்குத் தரியேன். இனி நீர் சன்மிஷ்டையோடே சல்லாபித்திரும்." என்று சொல்லிவிட்டுத் தன் தந்தை வீடு செல்லுதற்குப் புறப்பட்டாள். யயாதி 'ஆ! ஆ! என்ன காரியம் செய்தனம்!' என மனத்தில் மிக்க துயருற்று, தான் செய்த குற்றத்தைப் பொறுக்கும்படி பலபடியாக வேண்டியும், தெய்வயானை ஒரே பிடியாய் அதற்குச் செவி கொடாது, சன்மிஷ்டையை எரித்து விடுபவள் போறப் பார்த்துவிட்டு, ஆபரண அலங்காரங்களையெல்லாம் சிதைத்தெறிந்துவிட்டு, கண்ணும் கண்ணீருமாய் அழுதுகொண்டு தந்தையிருப்பிடம் போய்ச் சேர்ந்தாள்.

இவ்வாறு வந்த தெய்வயானையைச் சுக்கிரர் கண்டு மிக்க பரபரப்புடன் "புதல்வி! உற்றதென்ன சொல் சொல்" என்று வினவினார். தெய்வயானை "தந்தையே தர்மத்தை அதர்மம் வென்றுவிட்டது; கீழ் மேலாகிவிட்டது; சன்மிஷ்டை என்னை மிஞ்சிவிட்டாள். எனக்குப் புத்திரர்கள் இருவரே; அவளுக்கோ மூவர் பிறந்துவிட்டனர்." என்று அழுகையொலியுடன் சொன்னாள். சுக்கிரர் அவ்விஷயத்தைக் கேட்டுக் கடல் பொங்கினது போன்ற வெகுளியுடைய வராய் அக்கணமே யயாதி யிருக்குமிடத்தை அடைந்தார்; அவனை நோக்கி, "அடே க்ஷத்திரியப்பதரே! என்ன காரிஞ் செய்தனை? என்னையும் அவமதித்தாயல்லவா? என்னை யாரென்று நினைத்தாய்? நினைத்தால் திரிலோகங்களையும் கணப்பொழுதில் நிலைகுலைவிப்பேன்; நான் அசுர குருவாகிய சுக்கிராசாரியார் என்பதனையும் மறந்தனையோ? நான் இட்ட கட்டளை யென்ன? நீ செய்ததென்ன? அரசனாகிய நீயே இங்ஙனமானால் குடிகள் எங்ஙனமாகார்? மன்னன் எப்படி மன்னுயிரப்படியன்றோ? கட்டளையி னின்றும் பிறழ்ந்தாயல்லவா? இட்டேன் சாபம்; பிடி பிடி; என் அருமந்த புத்திரியின் சுகத்தைக் கெடுத்து, வாய்மையை விடுத்து, எனக்கு மானபங்கத்தைக் கொடுத்து, வழியல்லா வழியை அடுத்து நீ கெட்டனை; இதற்கெல்லாம் காரணமாயிருந்தது உனது இளமைப் பருவமே யன்றோ? இதோ பார் அதனை இப்போதே குலைத்து உன்னை அலைத்துவிடுகின்றேன்; பிடி சாபம்; இன்று முதல் நீ இளமை நீங்கி, முதுமை தாங்கி, க்ஷய நோயால் ஏங்கி உழலக் கடவாய்" என்று உரத்த குரலுடன் உருத்துச் சபித்தார்.

இச்சாப மொழியைக் கேட்ட யயாதி துணுக்குற்று, அஞ்சலியஸ்தனாய் "மும்மூர்த்திகளாலும் புகழப்பட்ட முனிபுங்கவரே! தாங்களிட்ட கட்டளையை மறவாது சன்மிஷ்டையைக் கண்ணெடுத்துப் பார்ப்பதுமின்றியே ஒழுகி வந்தேன். ஒரு நாள் சன்மிஷ்டை நான் தனித்திருந்த போது வந்து தன்னைத்தீண்டும்படி வேண்டினாள்; தகாதெனமறுத்துவிட்டேன். பின்பு ஒரு செல்வம் வேண்டுமென்று வேண்டினாள். நானோ, இல்லையென்று ஒன்றை வேண்டினோர்க்கு இல்லையென்று சொல்லாத சந்திர குலத்திற் பிறந்தவனாதலால், அவள் கேட்பதனை இன்னதெனஅறியாமலே 'அப்படியே தருகின்றேன்' என்று வாக்களித்தேன். பின்னர் அவள் தனக்குப் புத்திரச் செல்வமே நல்க வேண்டுவது' என்று சொன்னாள். இந்த நிலையில் நானென்ன செய்கிறது; அன்றியும், சன்மிஷ்டை இவ்வுலகத்தில் வேறொரு நாயகனை விரும்பாமல் என்னையே நம்பியிருந்தபடியாலும், அவளும் தம்மாலேயே கொடுக்கப்பட்டவளென்பது கொண்டும் அவள் விருப்பப்படியே உடன்பட்டேன். இவையே நான் வாய்மை தவறியதற்குக் காரணம், யானோ இன்னும் இளமையின் பயனை முழுதும் அனுபவியாதவனாக விருக்கின்றேன். சுவாமிகள் கிருபை கூர்ந்து சாப விடை செய்தருளவேண்டும்" என்று விண்ணப்பித்து நின்றான். சுக்கிரர் யயாதியை நோக்கி, "அரசனே!

"நன்மக்கள் சேர்நாத் தழும்பிருக்க நாள்வாயும்
செந்நெறிச் செல்வாரிற் கீழல்லர்;—முன்னைத்தம்
ஊழ்வலி யுன்னிப் பழிநாணி உள்ளுடைவார்,
தீய செயினும் சில."

என்று கூறியபடி ஊழ்வலியாற் செய்யத் தகாதன செயி னும் பின் உணர்ந்து வருந்துகிற நீ, நல்ல நெறியுடையோ னே யாவாய், அநுதாபமுடைய உன் விஷயத்தில் அநுதா பம் கொள்ளவேண்டுவது நியாயமே. எனினும் நான் சபித்துவிட்டாலோ தேவராலும் வேறு யாவராலும் அதனை மாற்றுவது முடியாது. நான் சபித்த நிமிஷமே உன்னை முதுமை மூடிவிட்டதை நீ இப்போது கண்கூடாய்க் காண்கின்றாயல்லவா? ஆயினும் ஒன்று செய்கின்றேன்; உன் மக்களுள் எவரேனும் தம் இளமையைக் கொடுத்து இம் முதுமையை வாங்கிக் கொள்ளலாம்; இஃதன்றி வேறு என்னால் செய்யலாவது ஒன்றுமில்லை'' என்று சொன்னார். யயாதி, சுவாமி, இதுவே போதும், என் மக் களுள் எவனொருவன் தன் இளமையைக் கொடுத்து என் முதுமையை வாங்கிக் கொள்கிறானோ அவனே என் ராஜ்ஜி யத்திற்கு அதிபதியாவான்' எனச் சுக்கிரரிடம் தெரிவித்து விட்டு விடைபெற்று அகன்றான்.

சுக்கிரர் சாபத்தால் முதுமையும் பிணியுமுற்று வருந் துகின்ற யயாதி, தன்னுடைய முதுமைப் பருவத்தை மாற் றிக்கொள்ள நினைந்து, தெய்வயானை, சன்மிஷ்டை இருவ ரிடமும் பிறந்த மக்கள் ஐவரையும் அருகில் வரவழைத்தான்; பின் வந்தவர்களுள் மூத்த குமாரனாகிய யது என்பவனைப் பார்த்து ''மகனே! சுக்கிரர் சாபத்தால் என்னை மூப்புப் பிணி பிணித்துக் கொண்டது; நான் இளமையால் அடை யும் இன்பத்தை முழுதும் அடையவில்லை; இன்னும் சில

காலம் இளமையோடே யிருக்கவேண்டுமென்று விரும்பு கின்றேன். எனது மூப்புப் பிணியை வாங்கிக் கொண்டு உன் இளமையை எனக்குக் கொடு; சில வருடங்கள் கழிந்த பின் உன் இளமையை உனக்குக் கொடுத்து என் முது மையை நான் வாங்கிக் கொள்கிறேன்.'' என்று கேட் டான். அதனைக் கேட்டதும் யது, ''தந்தையே, உமது கூற்று மிக விந்தையா யிருக்கின்றது; உலகத்தில் கிடைத் தற்கரிய செல்வம் இளமையினும் வேறொன்றில்லை; இதனை இழந்து, ரோமங்கள் நரைத்துத் தோல் திரைந்து, பலங் குன்றித் தளர்ச்சி மிகுந்து, கிண் கிண் என்று இருமி, சிறு வர்களாலும் பெண்களாலும் 'இவன் யார்? தொண்டு கிழவன்' என்று இகழத் தண்டூன்றித் திரியும் முதுமையை எவன் விரும்புவான்? இதற்கு யான் உடன்படேன்'' என்று மறுத்துவிட்டான்.

இவ்வாறு யது மறுத்துவிடவே, யயாதி ''யதுவே நீ என் இருதயத்தினின்று பிறந்தும் 'தந்தை சொன் மிக்க மந்திரமில்லை' என்பதை மறந்து, என் விருப்பத்தை நிறை வேற்ற மறுத்துவிட்டாய்; இப்படிப்பட்ட நீயும் உன் சந்ததியும் என் ராஜ்யத்தை அடையாமல் போகக்கடவீர்'' என்று சபித்துவிட்டு இரண்டாவது மகனாகிய துர்வசு என்பானை நோக்கி, யயாதி தன் விருப்பத்தை வெளியிட் டான். அவனும் யது போலவே மறுத்துவிட்டான். உடனே யயாதி அவனையும் ''நீ என் ராஜ்ஜியச் செல்வத் துக்கு அருகனாகாது மிலேச்சதேசத் தாசனாவாய்'' என்று சபித்தான். பின்பு சன்மிஷ்டை புத்திரர் மூவருள் மூத்த

வர்களாகிய ஆயு, அநு என்னும் இருவரையும் கேட்டான். அவர்களுமே தெய்வயானையின் புத்திரர்களைப் போலவே உடன்படாது மறுத்துவிட்டனர். அரசன் அவர்களையும் சபித்துப் பூரு என்னும் புண்ணியப் புதல்வனை அருகில் அழைத்து, "எனதன்பிற்குரிய மகனே! நீயாவது என் விருப்பத்தை நிறைவேற்றுவாயா?" என்று கேட்டனன். உடனே பூரு, "தந்தையே இக்கணமே பெற்றுக்கொள்வீர் என் இளமையை; நீரிற் குமிழி போல் நிலையில்லாத இளமைப் பருவம், உமது விருப்பத்தை நிறைவேற்றுவதாகிய தருமத்தினும் சிறந்ததாமோ? உமது கட்டளையின்படி நடக்க யான் கடமைப் பட்டவனன்றோ" என்று மறுமொழி பகர்ந்தான். அப்போது யயாதி, மகிழ்ந்து, "குழந்தாய்! நன்றாக எண்ணித் துணிந்து சொல்க" என்றான். பூரு "தந்தையே! என் உரையில் அப்படி ஐயம் எதற்கு? என் உடம்பு உம் உடம்பேயாம்; இது யாரால் வந்தது? நான் இவ்வுலகில் உமக்குப் புத்திரனாய்ப் பிறந்து இந்த அற்ப உதவியையேனும் செய்யாவிடின் என் ஜன்மத்தால் பயனென்ன? தந்தையின் முதுமையால் வரும் தளர்ச்சியை மைந்தன் தாங்கவேண்டுவது கடமையும் தகைமையுமன்றோ? ஜடப்பொருளாகிய ஆலமரத்தின் வீழுமன்றோ தன்னை யீன்ற அம் முதுமரம் தளராது தான் தரையில் நிலையாய் நின்று தாங்குகிறது; இவ் வறத்தின் உண்மையை அறியாதவன் அம்மரத்தினும் கடையனன்றோ? இதுபற்றியன்றே,

'சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைக்கண் தோன்றின் தான்பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்' என்றும்

'நைந்தடி யற்ற ஆலம் நடுங்கிவீழ் கின்ற தேன்று
வந்தவீழ் ஊன்றி வீழா வகைநிலை விளக்கு மாபோல்
மைந்தர்கள் தமக்குள் நல்ல அறிவினால் மகிழ்ந்து சேர்ந்து
தந்தையைத் தளரா வண்ணம் தாங்குவர் தவத்தி னென்றான்.'

என்றும், புலவர் பெருமக்கள் பலரும் கூறுவாராயினர். நீர் எத்தனை வருடகாலம் இளமையோ டிருக்கவேண்டும் என்று விரும்புகின்றீரோ, அத்தனை வருட காலம் நான் முதுமையோடிருக்கச் சித்தமாயிருக்கின்றேன், இது என் மனப்பூர்வமான எண்ணம்" என்று யயாதியின் உள்ளம் குளிரும் வண்ணம் சொன்னான். அவ்வளவில் யயாதி தன் முதுமையைப் பூருவினிடம் மாற்றினான். உடனே பூருவின் இளமைத் தோற்றம் யயாதி உடலில் சேர்ந்தது. பூரு முதுமை நோயும் பாயுமாய்ப் பன்னாள் படுக்கையில் கிடந்தான். பின் யயாதி பல வருடங்கள் இளமைப் பருவத்தால் நுகரவேண்டிய இன்பங்களை யெல்லாம் நுகர்ந்தான்.

இவ்வாறு யயாதி வாழ்ந்து வரும் நாளிலே தான் பூருவுக்குக் குறித்த காலம் பூர்த்தியானமையால் ஒரு நாள் பூருவினிடம் சென்று, "உத்தம புத்திர சிகாமணியே! எனக்கு இன்பத்தின் ஆசை யெல்லாம் ஒழிந்தது; இனி நான், 'யான், எனது' என்னும் அகப்பற்று, புறப்பற்றுக்களை அறவே ஒழித்து, வனத்தை அடையப் போகிறேன். நீ உன் யௌவனத்தை வாங்கிக்கொள்;" என்று சொல்லிப் பூருவுக்கு அவனது இளமையைக் கொடுத்தான். பூரு பதினாறு வயதுடைய இளம் புருடனாய் விளங்கினான்.

அப்போது யயாதி, பூருவுக்கு முடியையும், மாலையையும், முத்துக் குடையையும், முரசையும், படியையும் பிற

வற்றையும் வழங்கி, பூருவை நோக்கிப் "புண்ணியப் புதல்வனே! இனி நீயே என்பனிமதி மரபுக்கு முதல்வன்;" என்று மகிழ்ந்து கூறி அவனுக்கு இராஜ்யாபிஷேகம் செய்தான்.

இங்ஙனம் யயாதி பூருவுக்கு அரசாளும் உரிமையை அளித்ததையறிந்த பிரஜைகள், யயாதியிடம் வந்து "அரசே! சுக்கிராசாரியாரின் பேரனும், உமக்கு மூத்த மகனுமாகிய யது இருக்கவும் இளையோனாகிய பூருவுக்கு நீர் அரசியலை அளிப்பது அரசு முறைக்கு அடுத்ததாகுமா? உமது குல முறைப்படி செய்வதே நெறி" என்று முறை யிட்டார்கள். அதற்கு யயாதி அவர்களைப் பார்த்து "நீங்கள் யான் சொல்வதைக் கவனமாய்க் கேட்கவேண்டும்; யது மூத்த குமாரனாக விருப்பினும் அவன் என் விருப்பினுக் கிணங்காது மறுத்து விட்டதை நீங்கள் அறிவீர்கள்; பிதாவுக்கு விரோதமாக நடக்கும் பிள்ளையைப் பிள்ளையாகப் பெரியோர்கள் கருதமாட்டார்கள்; தாய் தந்தையர்மொழியைக் கடவாமல் நடப்பவனும் அவர்களிடம் அன்புடையவனும் அவரது நலங்களைத் தன்னதாகப் பாவித்து அவர்களுக்கு வேண்டியதைச் செய்பவனும் எவனோ? அவனே புத்திரனாவான்; 'புத்' என்னும் நரகம் என்பது, இம்மை மறுமைகளில் ஒருவர்க்குண்டாகும் துன்பந்தான்; தாய் தந்தையர்களை அதிலிருந்து காப்பவன் எவனோ அவனே 'புத்ரன்' என்னும் பெயருக்கு அருகனாவான்; அவனே ஜேஷ்ட புத்திர உரிமைக்கும் உரியவன்; யது முதலியோர் என்னை அவமதித்தனர்; பூரு என்னை மதித்தான்; என் துன்பத்தைத் தாங்கிய சுமை தாங்கியாயினன்; இவன் இளையோனாயினும் இவனையே என் புத்திரனாகவும் மூத்தோனாகவும் கருதுகிறேன்; ஆகையால்

இவனே என் ராஜ்யத்துக்கு அதிபதி. இவ்விஷயத்தைப் பற்றி முன்னரே சுக்கிராச் சாரியாரிடம் தெரிவித்து இம் முறையை யான் கைக்கொள்ளுவதற்கு அநுமதியும் பெற் றிருக்கின்றேன். ஆகையால் நீங்கள் இது குறித்து ஒன்றும் கருதவேண்டாம்'' என்று அவர்களுக்கு எடுத்து மொழிந் தான். அவ்வளவில் குடிஜனங்கள் அனைவரும் 'அரசன் செய் தது நெறியே' யென்று அரசனை வணங்கிச் சென்றார்கள்.

சர்ப்புத்திரனாகிய பூருவும் நற்புத்தியுடன் சந்திரகுல திலகனாய் உலகத்தை ஒரு குடைக்கீழ்ப் பொதுவறப்புரந் தான். யயாதி மனைவிகளுடன் வனத்துக்குச் சென்று தவஞ்செய்து முத்தி யடைந்தான்.

''மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல்''—திருக்குறள்.

# உத்தம மாணவன்.

## கசன்.

---

பண்டைக் காலத்தில், திரிலோகங்களது ஆளுகையைக் குறித்துத் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும் பகைமை மூண்டது. அதனால் அவர்கள் ஒவ்வொருவரும் தாம் தாம் வெல்ல வேண்டுமென்று கருதிப் பல பெரிய யாகங்களைச் செய்யத் தொடங்கினார்கள். அந்த யாகங்களுக்குத் தேவர்கள் வியாழ பகவானையும், அசுரர்கள், சுக்கிராச்சாரியரையும் புரோகிதர்களாக ஏற்படுத்திக்கொண்டார்கள். இக்குருக்கள் இருவரும் ஒருவருக்கொருவர் யுத்தி புத்திகளிலும் ஏனைய வன்மைகளிலும் ஏற்றத்தாழ்வில்லாமல் விளங்கித் தத்தம் சிஷ்யர்களுக்குரிய ஆக்கங்களை விளைப்பதில் முனைந்து நின்றார்கள்.

சின்னாட்களில் தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிருந்த பகை காரணமாகத் தேவாசுரயுத்தம் என்ற ஒரு பெரிய யுத்தம் தொடங்கிற்று. அந்த யுத்தத்தில் தேவர்களுள்ளும் அசுரர்களுள்ளும் பலர் மாண்டனர். அசுரர்களுள் மாண்டோரை யெல்லாம் அசுரகுருவாகிய சுக்கிரர், தம்மகத்திருந்த சஞ்சீவினி என்னும் மந்திர சக்தியினால் எழுப்பிக்கொண்டேயிருந்தார். தேவகுருவாகிய பிரகஸ்பதிக்கு இம் மந்திரம் தெரியாமையினால் தேவர்கள் யுத்தத்தில் மடிந்து மடிந்து குறுகிக்கொண்டே வந்தார்கள். இதை அறிந்த

தேவர்கள் எல்லாம் விசனமுற்று ஒரு நாள் ஒருங்குகூடி, "எவ்வாற்ருலேனும் சுக்கிரரிடமிருக்கிற சஞ்சீவினி மந்திரத்தை நாம் கிரகித்தாலன்றிச் சின்னுட்களுக்குள்ளாகத் தேவர்கள் என்னும் நாமமேயில்லாமல் நம் குலம் அடியோடு அழிந்துபோகும் என்பதில் சந்தேகமில்லை; ஆகையால் நாம் இனிக் காலந் தாழ்க்காது அம் மந்திரத்தைச் சுக்கிரரிடமிருந்து கிரகித்து, நமக்குத் தெரிவித்து, நம்மைக் காப்பாற்ற வல்ல ஆற்றலும் உபகாரமுமுடைய ஒரு புண்ணிய புருஷனை அறியவேண்டும். அப்படிப்பட்டவன் யாரென்று நாம் நாடினுல் நம் குருபுத்திரனுகிய **கசன்** என்பவனன்றி வேருெருவருமிலர்; நாமெல்லாம் இப்போதே அவனிடம் சென்று இக் காரியத்தைச்சாதித்து வரும்படி வேண்டி அவனைச் சுக்கிரரிடம் அனுப்பவேண்டும்" என்று தம்முள் ஆலோசித்து முடிவிட்டுக் கசனிடம் வந்தார்கள்.

கசன் அவர்களை உபசரித்து "வந்த காரியம் என்ன?" என உசாவினுன். தேவர்கள் "குருபுத்திரரே உம்மிடம் வந்த எங்கள் சொல்லை நீர் அங்கீகரித்தருளவேண்டும். நாங்கள் ஓர் உத்தமமான உபகாரத்தை உம்மிடம் நாடி வந்திருக்கிருேம். அவ்வுபகாரமாவது: நீர் அளவற்ற ஆற்றல் வாய்ந்த சுக்கிரரிடம் சென்று, அபூர்வ வித்தையாகிய சஞ்சீவினி மந்திரத்தை விரைந்து கற்றுக்கொண்டு வந்து எங்களைக் காப்பதுவேயாகும். அந்த மந்திரம் சுக்கிரரிடமிருப்பதாற்ருன், அசுரர்களுக்கு ஆக்கமும் எங்களுக்கு அழிவும் உண்டாகிக் கொண்டிருக்கிறது. சுக்கிரர் விடபபருவாவின் சமுகத்தில் எப்போதும் அமர்ந்திருப்பார்; அவர் தனித்திருக்கும் சமயம் பார்த்து அவரைக்கண்டு வணங்கித் தமது பணிவிடையாலும்

புத்திக் கூர்மையினாலும் அவரைச் சந்தோஷிக்கச் செய்து இக்காரியத்தை முடிக்க வல்லுநர், உம்மையன்றி இங்கு வேறொருவருமிலர்; அந்தச் சுக்கிராச்சாரியாருக்குத் தெய்வயானை யென்னும் பெயருடைய குமாரத்தி யொருத்தி யிருக்கின்றாள்; அவளது அபிமானமும் இந்த வித்தையைப் பெறுதற்கு அவசியம் வேண்டும்; அந்தத் தெய்வயானையையும் நல்லொழுக்கத்தாலும், அவள் மனம் போல் நடத்தலாலும், இன்சொற்களினாலும், சாதுரியமான செய்கைகளாலும், அடக்கத்தாலும் சந்தோஷப்படுத்தித் தன் வசப்படுத்துந் திறமையும் உமக்கே உண்டு; நீர் மாத்திரம் இக்காரியத்தை முடிப்பதற்கு உடன்படின் இக்காரியம் சித்தியாவது ஒருதலை'' என்று பலவாறு எடுத்துரைத்து வேண்டிக் கொண்டார்கள்.

இவற்றை யெல்லாம் கேட்ட கசன் "தன்னை நம்பிய ஒரு பெரிய சமூகத்துச் செய்யும் இத்தகையை பேருபகார தர்மம் ஒருவர்க்குக் கிடைத்தல் எளிதன்று; இக்காரியத்தை நான் மேற்கொள்வதனால் அசுரர்களால் எத்தகைய தீங்கு வரினும் வருக.

"களைகணாத் தம்மடைந்தார்க் குற்றுழியும் மற்றோர்
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார்—தளர் நடைய(து)
ஊனுடம் பென்று புகழுடம்(பு) ஓம்புதற்கே
தானுடம் பட்டார்கள் தாம்'' என்பதும்

"ஒப்புரவி னல்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து'' என்பதும்

நீதி நெறியன்றோ?'' என்றெல்லாம் தம்முள் நினைந்து "உங்கள் விருப்பப்படியே இந் நன்றியை யான் ஆற்று

கின்றேன்'' என்று சொல்லி உடன்பட்டான். தேவர்கள் கசனது பெருங்குணத்தைப் பலபடியாகப் பாராட்டிப் போற்றினார்கள்.

இவ்வாறு தேவர்களது வேண்டுகோளை நிரப்புதற்கு ஒருப்பட்ட குரு புதல்வன், தாழ்க்காது புறப்பட்டு விடபருவாவின் நகர்த்தையடைந்து, சுக்கிரரைக்கண்டு வணங்கினான். சுக்கிரர் ''பிள்ளாய்! நீ யார்?'' என வினவினார். கசன் ''குரு சிகாமணியே; நான் அங்கிரஸ முனிவரின் பேரன்; பிரகஸ்பதியின் புதல்வன்; 'கசன்' என்னும் பெயரினன்; நான் சுவாமிகள் பக்கலில் குருகுல வாசஞ்செய்யக் கருதி வந்துள்ளேன். அடியேனை ஏற்றுக்கொள்ள வேண்டும்''. என்று பிரார்த்தித்தான். சுக்கிரர் கேட்டுக் ''கசனே! உன்வரவு நல்வரவாகுக; உன் வேண்டுகோளை நான் ஏற்றுக்கொள்கிறேன்; நீ என்னால் நன்கு கௌரவிக்கப்படத் தகுந்தவனே; உன்னை நான் புறக்கணிப்பின், அது பிரகஸ்பதியை யன்றோ இகழ்ந்ததாய் முடியும்'' என்று அன்புடன் சொன்னார். கசன், சுக்கிரரது அநுமதி கிடைத்தமையால் மகிழ்ந்து, அவரது திருவடியின் கீழ் குருகுலவாசமாகிய பிரமசரிய விரதத்தை மேற்கொண்டான். அவன் தனது விரதசீலங்களாலும், சிஷ்ருஷைகளினாலும் ஆச்சாரியாரை மகிழச் செய்தான். ஆடலாலும் பாடலாலும், புஷ்பங்கள் கனிகள் கொண்டுவந்து கொடுப்பதாலும் ஏவல் செய்வதினாலும் தெய்வயானைக்குத் தன் மேல் அன்புபெருகுமாறு செய்தான். பிரமசரிய விரதத்தில் தவறாத அந்தக் கசனோடு தெய்வயானை அந்தரங்க நட்புரிமை பூண்டு, அவனுடன் விளையாடி உபசரித்தாள். கசன் இவ்வாறு பலவருடங்கள்

பிரமசரிய விரதத்தை நடத்திக்கொண்டு வந்தான். கசனது சாதுரியமான நடக்கையினால் அதுவரை அசுரர்கள் அவனை இன்னானென்றும் இன்னகாரியத்துக்கு வந்துள்ளானென்றும் அறிந்து கொள்ள முடியவில்லை. என்றாலும் நாளடைவில் அசுரர்கள் கசன் இன்னான் என்பதையும் இதன் பொருட்டு வந்தவனென்பதையும் ஆராய்ந்து தெளிந்துகொண்டார்கள்.

இங்ஙனம் தெரிந்துகொண்ட அசுரர்கள் யாவரும் ஒருங்கு சேர்ந்து "நமக்கு நாசகாலனாக வந்திருக்கும் இவனை இனி நாம் காலதாமதமின்றிக் கொன்றுவிடவேண்டும்; இன்றேல் நமது ஜீவாதாரமான சஞ்சீவி மந்திரத்தைக் கவர்ந்து போய் நம் பகைவர்க்கு அறிவித்து விடுவான்" என்று தங்களுக்குட்பேசிக் கசனைக் கொல்லுதற்குச் சமயம் பார்த்திருந்தனர்.

ஒரு நாள் கசன் தன்னுடைய குருவின் பசுக்கூட்டத்தைக் காட்டிற்கொண்டு போய் மேய்த்துக்கொண்டிருந்தான். அசுரருள் சிலர் இதுவே தக்கசமயமென்று கருதிக்கொண்டு, அவனைக் காட்டிற் கண்டு, துண்டு துண்டாக வெட்டிக் கொன்று, நாய்க்குணவாகப் போட்டு விட்டார்கள். பசுக்களெல்லாம் மேய்ப்பனில்லாமலே தொழுவம்வந்து சேர்ந்தன. பசுக்கள் மாத்திரம் வரக் கசன் வரக்காணாத தெய்வயானை, திடுக்கிட்டுத் தன் தந்தையிடம் சென்று "அப்பா! சந்தியாவந்தனப் பொழுதும் கழிந்து விட்டது; சூரியனும் அஸ்தமன கிரியை யடைந்தான்; பசுக்கள் வந்தும் கசன் மாத்திரம் இன்னும் வரவில்லை. அவன் வாராததிலிருந்து அவன் பிறரால் கொல்லப்பட்டிருக்கவேண்டும். அல்லது இறந்து போயிருக்கவேண்டும். இதற்கு ஐயமில்லை;

என தன்பிற்குரிய கசனைக்காணுமல் ஒரு நிமிடமும் உயிர் தரித்திரேன்; உறுதியாய்ச்சொல்லுகிறேன்" என்று துக்கத் தோடு சொன்னாள். அதற்குச் சுக்கிரர், "உனக்கேன் கவலை? கசன் கொல்லப்பட்டிருப்பினும் இறந்திருப்பினும் இப் போது வா என்றழைத்தால் உடனே வந்துவிடுகிறான். நீ சும்மாவிரு" என்று தெய்வயானையைத் தெளிவித்து விட்டுச் சஞ்சீவினி மந்திரத்தை உச்சரித்துக் கசனை அழைத்தார். அவ்வளவில் கசன் நாய்களின் உடல்களைப் பிளந்துகொண்டு விரைவாக வந்து சுக்கிரர் எதிரில் நின்றான். வந்து நின்ற கசனைக்கண்ட தெய்வயானை மகிழ்ச்சியுற்று "அன்ப! நீ இதுவரைவாராது தாழ்த்ததற்கு ஏதுவாக நிகழ்ந்தநிகழ்ச்சி என்ன?"என்று கேட்டாள். அதற்குக் கசன் "நங்காய்! பசுக் களெல்லாம் பசும் புல்லை மேய்ந்து நீர்பருகி மரத்து நிழலை அடைந்த பின் நான் சமித்துக்களையும் தர்ப்பைகளையும் சேக ரித்துக்கொண்டு களைப்பினால் ஆலமரத்து நிழலில் வந்து தங்கியிருந்தேன்; அப்போது அசுரர்கள் அங்கு வந்து என்னை 'நீ யார்'? என்று வினவினார்கள்; என்னை இன்னா னெனத்தெரிவித்தேன்; உடனே அவர்கள், என் உறுப்புக் களை ஒவ்வொன்றாய்க் குறைத்து அரைத்து நாய்க்கிட் டார்கள்; கடைசியாகச் சிரசையும் அரிந்து கொன்றார்கள்; இப்போது நமது குருமூர்த்தி அருள்கூர்ந்து சஞ்சீவினி மந்தி ரத்தை உச்சரித்து என்னை அழைத்தமையால் நான் உயிர்த் தெழுந்து இங்கு வந்தேன்" என்று நடந்தவற்றையெல்லாம் சொன்னான். தெய்வயானை கேட்டு அசுரர்களது தீச்செயலை வெறுத்துக் கசன்மீது மிக்க அன்புடையவளானாள்.

இது நடந்த சின்னாட்களின் பின் ஒரு நாள் கசன் தெய்வயானைக்குப் பூப்பறித்துக் கொணர்வதற்காகப் பூங்கா

வனத்துக்குப் போயிருந்தபோது அசுரர்கள் அவனை முன் போலவே கொன்று, கடல் நீரில் கலக்கிவிட்டார்கள். பூக் கொய்யச்சென்ற கசன் நெடுநேரம் வரை வரவில்லையாகையால், தெய்வயானை அதனைத் தன் தந்தையிடம் தெரிவித்தாள். சுக்கிரர் முன் போலவே சஞ்சீவினி மந்திரத்தால் அழைத்ததும் கசன் உயிர் பெற்று, எழுந்து வந்து, அசுரர் தன்னை வதைத்துக் கடலில் கலக்கிய செய்தியைத் தெரிவித்தான். அசுரர்கள், இப்படிப் பலமுறை கொன்றும் மீண்டும் மீண்டும் சுக்கிரரால் எழுப்பப்படுகிற கசனைச் சுக்கிரர் எழுப்பாமலிருக்கும்படி ஓர் உபாயம் செய்ய எத்தனித்து, ஒரு நாள் கசன் வனத்துக்குப் பசுமேய்க்கச்சென்றிருந்தபோது அசுரர்கள் அவனைக் கொன்று, அவனது தசைகளையெல்லாம் பஸ்மமாக்கி மதுவிற் கலந்து சுக்கிரருக்கே கொடுத்துவிட்டார்கள். சுக்கிரரும் அதனைப் பருகிவிட்டார். பசு நிரைகள் மட்டும் மீண்டு வந்தன. அதனையறிந்த தெய்வயானை முன் போலவே சுக்கிரருக்குத் தெரிவித்துக் "கசனில்லாமல் நான் உயிர் பிழைத்திரேன்" என்று சொன்னாள்.

சுக்கிரர் இவள் உரைத்ததைக்கேட்டதும் கசன் தன் வயிற்றிலிருப்பதை அறியாமல் கசனைக் கூப்பிட்டார். அவன் வரவில்லை; அதனால், சுக்கிரர் தெய்வயானையைப் பார்த்து "புதல்வீ! கசன இறந்தே போனான் என்று தெரிகிறது. நம் வித்தையினால் பலமுறை எழுப்பியும் திரும்பத் திரும்ப இறந்துபோகிறவனாகவே யிருக்கிறான்; இவன் விஷயத்தில் இனி நீ கவலை கொள்ளாதே" என்று சொன்னார். தந்தை இவ்வண்ணம் சொன்னவற்றைக் கேட்டதும் தெய்வயானை, "தந்தையே! கசன் என்ன சாமானியனா? தவ சிரேஷ்டராகிய அங்கிரஸ் மகா முனிவரின் வம்சத்தில் பிறந்

தவனன்ருே? பிரகஸ்பதியின் புத்திரனன்ருே? அவனே நல்ல பிரம்மச்சாரி; தபசையே தனமாகவுடையவன்; இடையருத முயற்சியுடையவன்; கூரியமதியினன்; சாமார்த்தியம் வாய்ந்தவன்; என் மீது நிரம்பிய அன்புடையவன்; இத்தகைய கசனைப்பிரிந்து இனி நான் இவ்வுலகில் இருப்பதென்பது எது? முடியாது; ஆர்வலனுகிய கசன் சென்ற வழியையே நானும் அடையப்போகின்றேன். பேயோடு பழகினும் பின்பு பிரிவது அரிதென்பதனைத் தூயோராகிய தாங்கள் அறியாததா''? என்று துக்கத்துடன் கூறினுள். சுக்கிரர் தெய்வயானை சொன்னவற்றை யோசித்துப் பின்பு தன் மாணவனும் தன் மகளுக்குப் பிரிய மானவனுமான கசனைக் கொல்கின்ற அசுரர்கள் மீது மிகுந்த கோபமுடையவராய் "என்ன விபரீதம்! குற்றமொன்றுமில்லாத பரமசாந்தனுகிய கசனை இந்த அசுரர்கள் கொன்று கொண்டே வருகிருர்கள்; இந்தப் பாவச்செயலுக்கு இவ்வுலகில் பிராயச் சித்தமும் உண்டோ? இவர்கள் என்னை மீறியவர்களாகக் காணப்படுகின்ருர்கள்; விரைவில் என உதவியை இழக்கப்போகிருர்கள்;" என்று தன்னுட் சொல்லிக்கொண்டு உக்கிரத்துடன் எழுந்து "கசன் எங்கிருந்தாலும் இதோ பிழைப்பிக்கிறேன்" என்று உரத்துக்கூறிக் "கசனே வா; கசனே! வா;" என்று அழைத்தார். அதைக் கசன் கேட்டு, சுக்கிரர் வயிற்றினுள் இருந்து கொண்டே பயபக்தியுடன் சில கூறத்தொடங்கினுன்:—

"சுவாமீ! கசன் இங்கிருக்கின்றேன்; காத்தருளவேண்டும்; வந்தனமளிக்கின்றேன்; சுவாமிகள் என்னைத் தங்கள் புத்திரனைப்போலப் பாவிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்

தான். சுக்கிரர், "மாணவா! என் வயிற்றுக்குள்ளேயோ விருக்கின்றாய்? இஃதென்ன விந்தை? எவ்வாறு என் உதரத்துட் புகுந்தாய்? நடந்ததைச்சொல்வாயாக; இப்போதே அசுரர்களை யெல்லாம் தொலைத்துவிடுகிறேன்; அமரர்களிடம் சென்று விடுகிறேன்;" என்று கேட்டார்.

கசன், "குருமணியே! நான் அசுரர்களால் கொல்லப்பட்டு மதுவோடு கலந்து தங்கட்குக் கொடுக்கப்பெற்றேன்" என்று சொன்னான்.

சுக்கிரர், பின் தெய்வயானையைப்பார்த்து, "அருமைப் புதல்வி! இப்போது நேர்ந்திருக்கும் நிலையை அறிந்தனையா? கசனே என்வயிற்றுக்குள் இருக்கின்றான்; நான் அழைத்தாலும் அவன் என்வயிற்றைப் பிளந்துகொண்டு வந்தா லல்லது வேறு வழியால் வரமுடியாது. கசன் பிழைத்து வரவேண்டுமானால் நான் இறக்கவேண்டும்; இவற்றுள் உனக்கெதுவிருப்பம்"? என்றுகேட்டார். தெய்வயானை, "பிதாவே! கசன் உயிர்பெற்று வெளிவராவிடினும் பெருந்துன்பம்; தாங்கள் இறப்பினும் அதனைவிடப் பெருந்துன்பமாகும். என் செய்வேன்? இருவருள் ஒருவரை இழப்பினும் நான் உயிர்வாழேன்; இருதலைக்கொள்ளி எறும்பு போல் தவிப்புக்கிடமாயள்ளதே; என் செய்வேன்" என்று மறுமொழி பகர்ந்தாள்.

இங்ஙனம் தெய்வயானை கூறிய பின் சுக்கிரர், சிறிது நேரம் மௌனமாய் ஆழ்ந்து யோசித்துப் பின்பு. "இன்று

தான் கசனுக்குக் காரிய சித்தியாயிற்று; இனி அவன் அடைய விரும்பிய வித்தையை நாம் கற்பியாமலிருக்க முடியாது. அவனது பொறுமையும் தூய எண்ணமுமே அவனது அருமையான காரியசித்திக்குக் காரணமாயிருந்தன. அசுரர்கள், தீய எண்ணத்தால் கசனுக்குத் தீங்கிழைக்கப் போய்த் தங்களுக்கே அதனை இழைத்தவர்களாயினர். அவர்தம் பேதைமையை என்னென்பது.

'பிறர்க்கின்னா செய்தலின் பேதைமை யில்லை
பிறர்க்கின்னா தென்று பேரிட்டுத்—தனக்கின்னா
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலின்
பித்து முளவோ பிற.'

என்ற ஆன்றோர் வாக்கை இவர்கள் சிறிதும் அறிந்தாரில்லை'' என்று அசுரர்களை வெறுத்துப் பேசிவிட்டுப் பின்னர் "பிரகஸ்பதி புத்திரனே! இன்று தான் உனதெண்ணம் ஈடேறிற்று; உனது விருப்பம் நிறைவேறுதற்குக் காரணமாயிருந்தது, தெய்வயானைக்கும் உனக்கும் இடையில் வளர்ந்த அன்பின் முதிர்ச்சியேயாகும். நீ, வேடம் புனைந்து வந்த இந்திரன் முதலிய தேவர்களுள் ஒருவனாக இல்லாமல் உண்மையாகவே பிராமணச்சிறுவனாயிருந்தால், இதோ நான் உபதேசிக்கும் மந்திரத்தைப் பெற்றுக்கொள். உண்மையாகவே பிராமணச் சிறுவனாக இராவிட்டால் நீ என் வயிற்றுக்குள்ளிருந்து வரமுடியாது. அருமைக் குழந்தாய்! என்னால் நீ பிழைப்பிக்கப்பட்டு வெளிவந்த பின்னர் என் புத்திரனாகவிருந்து இறந்து போகும் என்னை நான் உப-

தேசித்த மந்திர சக்தியினால் உடனே பிழைப்பிக்கவேண்டும்; குருவாகிய என்னிடமிருந்து வித்தையைக் கற்றுக்கொண்ட நீ என்னை வஞ்சித்து விடாதே'' என்று கூறி மந்திரத்தைக் கசனுக்கு உபதேசித்தார். கசன் அவ்வித்தையைக் காதாற் கேட்டுக் கற்றுக்கொண்டு, சுக்கிர் வயிற்றைப் பிளந்து வெளியில் வந்தான். சுக்கிரர் உடனே விழுந்திறந்தார். கசன் குருவின் கட்டளைப்படி தாழ்க்காது அவரைச் சஞ்சீவினி மந்திர சக்தியினால் உயிர்பெற்றெழச் செய்தான். இவ்வாறு வாய்மை தவறாது கசன் சுக்கிரரை எழுப்பாது விட்டிருப்பின் அசுரர்கள் யாவர்க்கும் அன்றே நாசகாலம் அடுத்திருக்கும். சுரர்கள் யாவர்க்கும் நன்மையின்மேல் நன்மை பல விளைந்திருக்கும். கசனோ, குரு பக்தியைப் பிரதானமான சீலமாகக்கொண்ட உத்தம மாணக்கனாதலின் பகைவர்க்கு நெறியல்லா நெறியால் பாதகத்தையும் நண்பர்களாகிய தேவர்கட்குச் சாதகத்தையும் தேடுவது முறையன்று என்று கருதி அத்தீய எண்ணத்தைச் சிறிதும் சிந்திக்கவில்லை.

அதன் மேல் கசன் ஆசிரியரை அணுகி, வந்தனஞ் செய்து, "சுவாமி! வித்தையில்லாதவர்கட்கு வித்தை யென்னும் தீஞ்சுவையமிழ்தைச் செவியிற் பிழிகின்றவர் எவரோ? அவரே ஒருவனுக்குத் தந்தையும் தாயுமாவார்; சுவாமிகள் என் விஷயத்தில் அத்தகைய சீரிய நன்றியைச் செய்தீர்களாதலின் தாங்களே எனக்குத் தந்தையும் தாயுமாவீர்கள். எல்லாச் செல்வங்களிலும் சிறந்த, அழியாத வித்யா செல்வத்தை யளித்த குருசிகாமணியை எவனொருவன் பூஜிக்காமல் அவமதிக்கின்றானோ அவன் மக்கட்பதடியாய்ப் பின்பு

மீளாநரகத்துக்கும் ஆளாவான் என்பது திண்ணம்.'' என்று தன்னுடைய குருபக்தியை வெளிப்படுத்திப் பேசி நின்றான். சுக்கிரர் கேட்டு அவனது நற்குணத்துக்கு வியந்து மகிழ்ந்தார். பின்பு அவர் அசுரர்களைத் தன்னிடம் அழைத்து அவர்களைப் பார்த்து "அசுரர்களே நீங்கள் கசன் சஞ்சீவினி மந்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் அழுக்காறு கொண்டு, அவன் அதனை அடையாது போவதற்கு உங்களாற் செய்யப்பட்ட உபாயமெதுவோ! அதுவே அவன் அதனை இலேசாய்ப் பெறுதற்கு உதவியாயிருந்தது. இதனால் நீங்கள் பேதைகளானீர்கள். கசன் தனது அயர்ச்சியில்லாத முயற்சியினாலும் குருபத்தியாலும் காரிய சித்தியடைந்தான். தேவர்க்கும் அரிதாயிருந்த செய்கையைச் செய்து முடித்தான். அவன் மூவுலகிலும் மகானாய் எனக்கீடாக மதிக்கப்பட்டு விளங்குவான்'' என்று கசனைப் புகழ்ந்து அசுரர்களை இகழ்ந்தார்.

இவ்வாறு கசன் காரியசித்தியுற்ற சின்னாட்களுக்குப் பின் சுவர்க்கலோகம் செல்லுதற்கு விரும்பிக் குருவினிடம் தனது கருத்தை வெளிப்படுத்தினான். அவரும் அவன் வேண்டியாங்கு விடையளித்தனர். சுவர்க்கம் புறப்பட்ட கசன் தெய்வயானையைக் கண்டு, தனது புறப்பாட்டைத் தெரியப்படுத்தினான். அதனைத்தெரிந்த அளவில் தெய்வயானை, கசனை நோக்கி "அங்கிரஸ் மகாரிஷியின் பவுத்திரனே! நீ நல்லொழுக்கத்தினாலும், அடக்கத்தினாலும், இந்திரிய நிக்ரகத்தாலும் இப்போது மேம்பட்டு விளங்கு

கிறாய்; நீ பிரமசரிய விரதமேற்கொண்டு ஒழுகும் நாளிலே நாமிருவரும் குற்ற மற்ற நேயமுடையவர்களாயிருந்தோம்; இப்போது உன்னுடைய பிரமசரிய விரதம் முடிவடைந்தது; நீ என்னை மறந்து இவ்விடம் விட்டகல்வது தர்மமாகுமா? குலத்திலும் ஏனைய நலத்திலும் உனக்குத்தகுதி வாய்ந்த என்னை மனைவியாக மணந்து கொள்வாயாக'' என்று வேண்டினாள்.

அதைக்கேட்ட கசன்:—''தெய்வயானை! என்ன பேசினை? சுக்கிர பகவானாகிய உனது பிதா எப்படி எனக்குப் பூஜிக்கத் தகுந்தவரோ? அப்படியே நீயும் பூஜிக்கத்தகுந்தவள்; நீ இப்போது இங்ஙனம் பேசியது பெரிய வியப்பையும் வருத்தத்தையும் விளைக்கின்றது; நீ எனக்குச் சகோதரி; இனி இத்தகைய தகுதியில்லாத வசனங்களை வசனிக்காதே'' என்றான்.

தெய்வயானை:—''நண்ப! நீயோ பிரகஸ்பதி புத்திரன்; நானோ சுக்கிரர் புதல்வி; நான் உனக்குச் சகோதரி ஆவது எப்படி?'' என்று உசாவினாள்.

கசன்:—''பிதாவென்றால் பெற்றவரை மாத்திரமோ குறிக்குமென்று நினைக்கின்றாய்; குரு ஞானபிதாவன்றோ? ''சார்ந்த சற்குரு ஒரு பிதா'' என்ற பெரியார் நீதி நீ அறியாததா? இதனால் உன் தந்தை என் தந்தையுமாய் நீ சகோதரியாவதை யறிவாயாக. நீ சகோதரி என்பதனை மற்றொரு சிறந்த நியாயத்தாலும் நிரூபிக்கின்றேன்; நீ வசித்த சுக்கிரரது திரு உதரத்தில் சின்னாட்களுக்கு முன் நானும் தங்கியிருந்து வெளிப்பட்டு வந்ததனை நீ மறந்தனையோ?

இதனை நீ இப்போது அறிந்த பின் என்னைச் சகோதரன் என்று எண்ணுவதன்றி வேறு வகையாக நீ எண்ணமாட்டாய் என்று கருதுகின்றேன்" என்றான்.

தெய்வயானை:—"அறிவிற் சிறந்தவனே! ஒரு பெண்ணாகிய நான் உன்னைப் பன்னெடுநாளாக விரும்பியிருந்து கடைசியாக எனது விருப்பத்தை வெளிப்படையாய்ச்சொல்லியபோது நீ என்னைப் புறக்கணித்துப்போகின்றாய்; என்னை வருத்திச்செல்லும் உன்னைச் சபிக்கின்றேன்; நீ பன்னாளாக உழந்து சுக்கிரரிடம் பெற்ற சஞ்சீவினி மந்திரமானது உனக்குப்பயன்படாது போகக்கடவது" என்று சாப வார்த்தையை வெளியிட்டாள்.

கசன்:—"நான் உன்னைக் குரு புத்திரி யென்று கருதி உன் விருப்பத்திற் கிணங்கவில்லையே யன்றி, வேறுகருதியன்று. நீ இன்னும் என்னை எத்தனை முறை சபிக்கவேண்டுமானாலும் சபிப்பாயாக. பெரியோர்களாற் கூறியுள்ள தர்மநெறி தவறுதற்கு அஞ்சியே உன் வேண்டுகோளை மறுக்கின்றேன். நீ தர்மமுறையினாலன்றிச் சிற்றின்பம் பற்றி என்னைச் சபித்தாய்; அநீதியாய்ச் சபித்த உன்னை நானும் சபிக்கின்றேன். உன்னுடைய விவாக சம்பந்தமான இவ்விருப்பம் நன்முறையில் நிறைவேறாமல் போகக்கடவது. ரிஷிபுத்திரன் எவனும் உன்னை மணஞ்செய்யமாட்டான்" என்று எதிர்ச்சாபம் கொடுத்து விட்டுப் பின்பும் அவளைப் பார்த்து "நீ 'உனக்குக்கற்ற வித்தை பயன்படாது போகட்டும்' என்று சபித்தாய்; அப்படியே அது எனக்குப் பயன்படாது போயினும் போகட்டும்; அதனை யான் யார்க்கு உப

தேசிப்பேனே அவர்கட்குப் பயன்படுமன்றோ? அதுவே போதும்" என்று உத்தம குணம் வாய்ந்த கசன் தெய்வயானையை நோக்கிக் கூறிவிட்டு அப்போதே புறப்பட்டுச் சுவர்க்கலோகம் போய்ச் சேர்ந்தான்.

கசன் வந்ததை யறிந்த இந்திராதி தேவர்கள் எதிர்சென்றுபசரித்து வரவேற்று மகிழ்ந்தார்கள். பின்பு கசன் காரியசித்தியோடு வந்ததை யறிந்ததும் அவர்கள், கரைகாண அரிதான உவகைக் கடலுள் மூழ்கிக் கசனை நோக்கி "ஐய நீ, எங்களுக்கு வேண்டிய அரும் பெருங் காரியத்தைச் செய்து முடித்து வந்தமையின் உனது கீர்த்தி இவ்வுலகத்தில் என்றும் நின்று நிலவும்" என்று வாயாரப் போற்றிப் புகழ்ந்தார்கள். பின்பு கசன் தான் கற்று வந்த சஞ்சீவினி மந்திரத்தை முறைப்படி தேவர்களுக்குக் கற்பித்தான். அவர்களும் அதனைக் கற்றுக் காரிய அநுகூலமுற்றுத் துன்பமற்று இன்பம் பெற்று இனிதாய் வாழ்ந்திருந்தனர்.

# பரீக்ஷித்து.

## (ஊழின் வலி)

---

சந்திர குலத்தரசருள் 'வில்லுக்கு விஜயன்' என்னும் சொல்லுக்கு இலக்கான அர்ச்சுனனுக்குக் கண்ணபிரானது தங்கை சுபத்திரை வயிற்றில் தோன்றியவன்' அபிமன்யு என்னும் அரசர் பெருந்தகை. இவன் விராடராஜன் புத்திரி உத்தரை என்பவளை மணந்து வாழ்ந்து வந்தான். அபிமன்யு அக்காலத்தில் நடந்த பாரத யுத்தத்தில் உயிர்துறந்தான். கருவுற்றிருந்த உத்தரை பூரண கர்ப்பிணியாவதற்கு முன்னரே அகாலத்தில் ஒரு பிள்ளையைப் பெற்றாள். அக்குழவி பிறக்கும்பொழுதே இறந்து பிறந்தது. இதனைத் தெரிந்த கண்ணபிரான், அக்குழந்தையை அபிமன்யு பாட்டியாகிய குந்திதேவியின் மடிமீது வைத்து "இக் குழந்தையைப் பிழைப்பிக்கிறேன்" என்று சொல்லித் தன் காலின் கட்டை விரலால் தொட்டார். அவ்வளவில் அக்குழந்தை உயிர் பெற்று விளங்கிற்று. பின்பு, குலமெல்லாம் பரீக்ஷணம் (அழிவு) அடைந்த பின் பிறந்தபடியால், அப் பிள்ளைக்குப் 'பரீக்ஷித்து' எனப் பெயரிட்டார்கள். பரீக்ஷித்து வளர்ந்து அரசர்க்குரிய கலைகளனைத்தையும் முற்றக் கற்றுச் சிறந்த மதி மாண்புடன் விளங்கி அரசியல் பெற்று, அஸ்தினபுரத்தைத் தம் முன்னோரான உதிட்டிரன் முதலியோர் போல நெறி தவறாது செங்கோலோச்சிவந்தான்.

இவன் இங்ஙனம நாட்டை யாதொரு தீதும் அணு காது புரந்து வருநாளிலே ஒரு சமயம் நாட்டில் வன சரங்களாகிய மிருகங்களால் குடிகளுக்குப் பெரு நஷ்டம் உண்டாயிற்று. பரீக்ஷித்து

"மாநிலங்கா வலனவான் மன்னுயிர் காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ?"

என்ற அரச நீதியை நன்கறிந்தவனாதலாலும் இயற்கையாகவே வேட்டை விருப்பம் உடையோனாகையாலும் காட்டிற்கு வேட்டமாடப் படைகளுடன் புறப்பட்டுச் சென்றான். சென்றவன் பல கொடிய விலங்குகளை வேட்டமாடிக் கொன்று, கடைசியாகக் கலைமானொன்றைக் கண்டு அதனைத் தன் கணையாலெய்தான். கணையேறுண்ட படியே ஓடிய அம் மான் கணத்தில் மாயமாய் மறைந்தது. மானைக் காணாத பரீக்ஷித்து, பலவிடங்களிலும் தேடியும் அதனைக் காணமல் இளைத்துக் களைத்து வனத்தில் நடந்துகொண்டிருந்தான். அப்போது அவ்வனத்துள் ஓரிடத்தில் ஒரு மாட்டுக் கொட்டிலுக்கருகில் பாலுண்ட பசுங் கன்றுகளின் வாயிலிருந்து ஒழுகும் பால் நுரைகளையே புசிக்கும் முனிவர் ஒருவர் யோகத்தில் அமர்ந்திருந்தார். அம் முனிவரைப் பரீக்ஷித்து பார்த்து அவரை அணுகி "ஓ முனிவரே! நான் அபிமன்யு புத்திரன்; 'பரீக்ஷித்து' என்னும் அரசன்; என்னால் அம்பேறுண்ட மானொன்று ஓடி மறைந்துவிட்டது; அதனை யான் எங்கும் தேடியும் காணவில்லை; நீர் கண்டதுண்டாயின் சீக்கிரம் சொல்லுமின்" என்று வினவினான்.

மௌன யோகத்திலிருந்த முனிவர், அரசன் வினவுக்கு விடை பகரவில்லை. அதனால் பரீக்ஷித்து 'இம் முனிவனுக்கு இவ்வளவு அகந்தையா?' என்று முனிவர் பெருமையை அறியாமல் அவர்மேல் முனிவு மிகுந்து, பக்கத்தில் செத்துக்கிடந்த பாம்பு ஒன்றைத் தன் வில்லின் நுனியால் எடுத்து முனிவர் கழுத்தில் மாலை போல் தொங்கவிட்டுத் தான் செய்தது தகாத செய்கை என்று நினையாமல் முனிவரைப் பரிகசித்துத் தன் நகரம் போய்ச் சேர்ந்தான். முனிவர் அதனை அறிந்தும் அவர்

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

என்ற நீதியை ஓதியுணர்ந்த உத்தமராதலின், அடாச் செய்கை செய்த அரசனை வெகுண்டு சபிக்காமல் பொறுமையுடன் வாளா இருந்துவிட்டார்.

இம் முனிவர்க்குச் சிருங்கி என்னும் பெயர் வாய்ந்த புத்திரர் ஒருவரிருந்தார். அவர் இளம் பருவமுடையவர்; கூரிய புத்தி மிகுந்தவர்; அவர் பிரமதேவரை அடுத்து ஒவ்வொரு காலத்திலும் நியமத்துடன் அவரை உபாசித்து வந்தார். பின்பொருநாள் அவர் பிரமதேவரிடம் விடைபெற்றுத் தம் தந்தையின் ஆச்சிரமத்துக்கு வந்துகொண் டிருந்தார். வரும் வழியில் வனத்தில் அவரது நண்பனாகிய கிருசன் என்னும் முனிபுத்திரன் சில சிறார்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். சிருங்கி அங்குச் சென்று அவர்களுடன் சில பேசத் தொடங்கினார். அப்போது கிருசன் சிருங்கி

யை நோக்கி "சிருங்கியே! நீயும் முனி புத்திரன் போல் எங்களுடன் கலந்து பெருமிதமாக உரையாடத் தொடங்குகின்றாயா? உனக்கும் எங்களுடன் இனிப் பேச்சு உண்டோ? உனது கர்வத்தை இன்று முதல் விட்டுவிடு. தவத்திற் சிறந்தவரென்று சொல்லப்படுகின்ற உனது பிதாவைப் போய்ப் பார். தோளில் சவத்தைச் சுமந்துகொண்டிருக்கின்றார். சவத்தைச் சுமப்போருடைய புதல்வனாகிய நீயும் ஓர் ஆண் பிள்ளையா?" என்று பரிகசித்துச் சிருங்கியின் மனம் புண்ணாகும்படி சொன்னான். இவற்றைக் கேட்ட சிருங்கி கோபத்தால் மனம் அழன்று கிருசனை நோக்கி, "நண்ப! மன்னுயிர்கட்கு நன்னயத்தையே செய்பவரும் அல்லும் பகலுமாகிய எப்போதும் அமலனாகிய இறைவனது அடிப் போதையே மனப் போதில் சுமக்கும் தவத்தையுடையவருமாகிய என் தந்தை, சவத்தைச் சுமப்பவரானது எப்படி? அதனை விளங்கச் சொல்வாயாக" என்று கேட்டார். அதற்குக் கிருசன், "வேட்டையாடித் திரிந்த பரீக்ஷித்து, செத்த பாம்பை எடுத்து உன் தந்தை தோளில் போட்டிருக்கின்றான். போய்ப் பார்" என்றான். சிருங்கி "அந்தக் கொடியோனாகிய அரசனுக்கு என் தந்தையார் இழைத்த தீங்கென்ன! அதனை மாத்திரம் விரைவாகச் சொல். அதன் பின் என் தவ வலிமையைப் பார்" என்று சொல்லி வினவினார். கிருசன், "பரீக்ஷித்து வேட்டையாடி ஓர் மானைத் துரத்திக் காணாது களைத்துக் கோப சிந்தையனாய் வந்து உன் தந்தையை அம் மானைப்பற்றிப் பல முறை வினாவினான்; அதற்கு அவர் மறுமொழியொன்றும் வழங்கிற

ரில்லை; அது பற்றி அவன் கோபங்கொண்டு செத்துக் கிடந்த அரவமொன்றை வில்லால் தூக்கி உன் தந்தையின் தோளிலிட்டுச் சென்றான்'' என்று சொன்னான்.

இவ்வாறு கிருசன் சொன்னவற்றைக் கேட்ட அளவில் சிருங்கி, பரீக்ஷித்து மன்னன் மீது அடங்காக் கோபங் கொண்டு, அப்போதே ஆசமனஞ் செய்து "அரசனென்னும் எந்தப் பாவி, விருத்த பருவம் உடையவரும், மௌன விரதத்தையே கருமமாகக்கொண்டவருமான என பிதாவின் தோளில் இறந்த சர்ப்பத்தை எடுத்துப் போட்டானோ? அந்தப் பாவி—முனிவர்களை அவமதிக்கும் அந்த மூர்க்கன்—குருவம்சத்திற்கு அபகீர்த்தியை விளைத்த அந்த அயோக்கியன், இன்று முதல் ஏழு நாட்களுக்குள் விஷமிகுந்த தக்ஷகனென்னும் சர்ப்ப ராஜனாற் கடியுண்டு யமலோகத்தை அடைவானாக'' என்று உக்கிரத்துடன் சபித்தார்.

சிருங்கி, இவ்வாறு பரீக்ஷித்தைச் சபித்துவிட்டுப் பாம்பைத் தோளிற் சுமந்தபடியே தவத்திலிருக்கும் தந்தையிடம் விரைவாகச் சென்றார்; சென்றவர் தந்தையிருக்கும் அலங்கோலத்தைக் கண்டு, முன்னையினும் பன்மடங்கு அதிகமான கோபமும் தாபமுங் கொண்டு, துக்கித்துக் கண்ணீர் விட்டுப் பிதாவைப் பார்த்து, "பிதாவே! அந்தத் துஷ்டனாகிய பரீக்ஷித்து செய்த அவமானத்தைக் கேட்டுக் கோபத்தாற் பொறாமல், குரு வம்சத்திற்கே பெரிய பழியைத் தேடிய அவனுக்கு உக்கிரமான சாபத்தைக் கொடுத்துவிட்டேன்; அவன் இற்றைக்கு ஏழாம் நாள் தக்ஷக

னால் கடியுண்டு யமலோகம் சேர்வது திண்ணம்'' என்று சொன்னார்.

பரீக்ஷித்து மன்னனைச் சபித்துவிட்டேனென்று சிருங்கி சொன்ன மொழிகளைக் கேட்ட மாத்திரத்தில் சமீகர் என்னும் அம்முனிவர் ''குழந்தாய்! என்ன காரியஞ் செய்து விட்டாய்? நீ செய்தது எனக்குச் சிறிதுந் தகுதியானதென்று தோன்றவில்லை; தவத்தோர்க்கு இதுபோன்ற செய்கை சால்புடையதன்று; நாம் அந்த அரசனது நாட்டில் வாழ்கின்றோம்; இதுகாறும் யாம் யாதொரு இடையூறும் எய்தாவண்ணம் அவனால் பாதுகாக்கப்பட்டோம்; உலகத்தில் அரசரில்வழித் தவத்தோர் காரியம் சரியாய் நடைபெறாது; 'தவமும் அரசியலில்வழி யில்லை' 'மாதவர் நோன்பும் மடவார் கற்பும், காவலன் காவல் இன்றெனில் இன்றாம்' என்பவை அறிஞரது அறவுரையன்றோ? உலகம் ஒழுங்கினமாய் நடக்குங் காலத்தில் அரசர் தமது தண்டத்தால் அதனை நன்னெறிப்படுத்துகின்றார்கள்; எல்லாத் தர்மங்களும் அரசர்களாலேயே நடைபெறுகின்றன; அவர்கள் புரியும் வேள்வி முதலான புண்ணிய கருமங்களாலேதான் மழை பொய்யாது பெய்யப் பயிர் பச்சைகள் செழித்து, உலகம் இன்புற்று வாழ்கின்றன. அரசர்களே உலகத்துயிர்கட்கு ஆதாரமாக விளங்குபவர்கள். இத்தகைய அரசர்கள் சில சமயங்களில் மக்கட்கு இயல்பாகவுள்ள முக்குண வசத்தால் முறை பிறழ்ந்து விடுதலுங் கூடும். நம் போன்றோர் அதனை

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு என்றபடி பொறுத்து, நன்மையே செய்யாவிடின் நமது அறிவின் பயன்றான் என்னே? பொறுமையைக் காட்டிலும் இம்மை மறுமைக் குரிய இன்பத்தைத் தரவல்ல நற்குணம் வேறென்னவிருக் கின்றது? பரீக்ஷித்து மன்னனோ குற்றமொன்று மில்லாத கோமகன்; அரசற்குரிய இயல்களையெல்லாம் இயல்பாகவே யுடையவன். அவன் காட்டில் அலைந்து தாகித்துச் சோகித்திருந்தான். அதனால் ஏற்பட்ட குணபேதத்தால் இச்சிறிய குற்றத்தைச் செய்துவிட்டான்; அவன் விஷ யத்தில் நீ பொறுமையை மேற்கொள்ளாது கடுமெனப் பெருஞ் சாபத்தை இட்டது பற்றி நான் மிக வருந்துகின் றேன்" என்று பரீக்ஷித்துப் பக்கலில் பரிந்து கூறினார்.

தந்தையினது இந்த உபதேசத்தைக் கேட்ட சிருங்கி, "பிதாவே நான் செய்த இக்காரியம் நன்கு ஆலோசியா மலே செய்ததாயினும், தங்களுக்கு விரும்பத் தக்கதாயி னும், விரும்பத்தகாததாயினும் நான் சொன்ன சொல் பொய்த்தல் கூடாது. அதுவே எனது முக்கிய நோக்கம். இச்சொல் தவறாது. நான் சொல்வதைக் கேட்டருளுங்கள். நான் விளையாட்டிலும் பொய் சொல்வதில்லை; இப்படிப் பட்ட என்னால் இடப்பட்ட சாபம் பொய்யாவதேது"? என்று சொன்னார். அதனைச் சமீகர் கேட்டுப் "பிள்ளாய்! நீ அளவற்ற ஆற்றல் உடையவனென்பதையும் சத்திய சீலன் என்பதையும் உன் தந்தையாகிய நான் நன்கறிவேன்; நீ வெகுண்டு கூறிய நிறை மொழி மறை மொழிதான்; ஆயி னும் இப்போது உனக்கு நான் சில சொல்லியதெல்லாம்

புத்திரர்கள் தக்க பருவமடைந்தவர்களாயினும் அவர்களுக்கும் பெற்ரோர், உறுதி பயக்கும் விஷயங்களை அவ்வப்போது எடுத்துக்கூறவேண்டும் என்னும் நீதி பற்றியேயென்று அறிவாயாக. தவ ஒழுக்கமுடையோர் கோபத்தை அடக்கினுற்ருன் பொறிகளை அடக்கியதின் பயனையடையலாகும். பொறுமையே பொன்ருத செல்வம்; நீ எப்போதும் சாந்தத்தையே கடைப்பிடித் தொழுகவேண்டும்; அதுவே சத்துவ குணமாகும். இப்போது என்னுல் இயன்ற ஒரு காரியம் செய்யப்போகிறேன்: சிருங்கியே! உன்னுல் சபிக்கப்பட்ட பரீக்ஷித்து மன்னனுக்கு 'அரசே எனது இளங் குமரன், எனக்கு உன்னுல் நேர்ந்த அவமானத்தைப் பொறுக்கமுடியாது, உனக்கு மரண வேதனை உண்டாகும்படி உன்னைச் சபித்துவிட்டான்; ஏழு நாளுள் உனக்குச் சர்ப்ப விஷத்தால் மரணம் சமீபிப்பது திண்ணம்; அதற்கு முன் நீ அரணம் செய்துகொள்' என்று ஒரு நிருபம் எழுதி விடுக்கப் போகின்றேன்" என்று சிருங்கியை நோக்கிக் கூறிவிட்டு; அவ்வாறே ஒரு நிருபம் தீட்டி அதனைத் தம் சிஷ்யருள் ஒருவராகிய கௌரமுகர் என்பவரிடம் கொடுத்துப் பரீக்ஷித்து மன்னனிடம் சேர்க்கும்படி அனுப்பினுர்.

அந்தக் கௌரமுகர், விரைவாகச் சென்று பரீக்ஷித்து மன்னனைக் கண்டு, சிருங்கியின் சாபத்தைக் கூறிச் சமீகர் எழுதிய நிருபத்தைக் கொடுத்து "இவ்வாபத்தினின்றும் தப்புதற்குரிய உபாயம் எதுவோ அதனை நீ விரைவிற் றேடிக்கொள்வாயாக; சமீகரே என்னை உன்னிடம் அனுப்பியுள்ளார்" என்று கூறினுர்.

இப்படிக் கௌரமுகர் சொன்ன செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் பரீக்ஷித்துக்குண்டான துக்கத்திற்கோ அளவில்லை. அவன் தனக்கு மரணம் வரப்போகிறதே யென்று பயந்து சிறிதும் வருந்தினனில்லை. மௌன விரதத்தி லிருந்தபெரியாரின் பெருமை யுணராது செய்த தீச் செயல் குறித்தே பெரிதும் வருந்தினன். "வேட்டை விநோதங் களிற் செலுத்திய விருப்பினாலன்றோ இத்தகைய கேட்டை யாமடைய நேரிட்டது" என்று மீண்டும் மீண்டும் சிந்தித் துக் கையற்று நின்றான். பின்பு அவன் கௌரமுகரை நோக்கி "முனி சிரேஷ்டரே! சமீக மகா முனிவரை யான் திசை நோக்கித் தொழுகின்றேன்; தாமத குணத்தால் யான் செய்த தவற்றைப் பொறுத்தருளும்படி அவரைப் பிரார்த்திக்கின்றேன்; இதனை அவர்க்குத் தெரிவித்திடுக" என்று அநுதாபத்துடன் பகர்ந்து, கௌரமுகருக்கு விடை கொடுத்தான். கௌரமுகரும் விடை கொண்டு சமீகர் ஆச்சிரமம் போய்ச் சேர்ந்தார்.

அக் கௌரமுகர் போன பின்பு, அரசன் மனத்தில் அச்சம் அதிகரித்தது. அதனால் அமைச்சர்களை அழைத்துச் சிருங்கியின் சாபத்தினின்றும் தப்புதற்குரிய உபாயம் என்னவென ஆலோசனை செய்தான். பாதுகாப்புக்காகச் செய்யப்படவேண்டுமென அவர்களால் ஆலோசித்து அறுதியிட்டபடி கம்பியர் ஒற்றைத்தூணை நாட்டி அதன்மீது ஒரு மாளிகையை நிருமித்தார்கள். பெரிய காவல்களை ஏற்படுத்தினார்கள். அமைச்சர்கள், வைத்தியர்களையும் ஔஷதங்களையும் மந்திர சித்தியுள்ள பெரியோர்களையும் நியமித்து வைத்தார்கள். இத்தன்மையாக அமைத்த அம்மாளிகையில்

பரீக்ஷித்து அமர்ந்து இராஜ்ய காரியங்களை நடத்தத் தொடங்கினான். அரசனிடம் யாரும் செல்லலாகாதெனத் திட்டம் செய்யப்பட்டது. காற்றும் உள்ளே புகும்போது தடுக்கப்பட்டதென்றால் அம் மாளிகையின் காவற் கடுமையைச் சொல்லவும் கூடுமோ?

இவ்வாறு பரீக்ஷித்து முற்காப்பாகச் செய்த நற்காவலுள்ள மாளிகையிலிருந்து வருங்கால், இவனுக்கேற்பட்டுள்ள சாபத்தைக் காசியபர் என்னும் முனிபுங்கவர் கேள்வியுற்றார். அவர் ஔஷதங்களிலும் விஷத்தைப் போக்கும் மாந்திரீகங்களிலும் இணையற்ற சக்தி வாய்ந்தவர். அவர் 'சிருங்கியின சாபப்படி பரீக்ஷித்தைக் கொல்லுதற்குத் தக்ஷகன கடித்தால் அப்போதே அவ்விஷத்தை இறக்கிப் போக்கி அரசனை இறவாமல் ஆக்கி அவனிடம் சிறந்த பரிசிலைப் பெற்று வருவேன்' என்று கருதி அஸ்தினாபுரத்துக்குப் பரீக்ஷித்து அரசனிடம் புறப்பட்டு வந்துகொண்டிருந்தார். அப்போது பரீக்ஷித்து மன்னனைத் தீண்டுதற்குப் புறப்பட்டு வந்துகொண்டிருந்த தக்ஷகன், ஒரு கிழப் பிராமணவேடம் பூண்டு காசியபரைச் சந்தித்து "சுவாமி! எதற்காக எங்கு போகிறீர்கள்"? என்று வினவினான். அதற்குக் காசியபர் "குரு குல திலகனாகிய பரீக்ஷித்து மன்னனை இன்று தக்ஷகன் தன் விஷத்தால் எரித்துக் கொல்லப்போகிறான்; அப்படித் தக்ஷகன் கடித்தவுடன் அரசனுக்குச் சிறிதும் துன்பம் அணுகா வண்ணம விஷ சிகிச்சை செய்வதற்கு அரசனிருப்பிடம் நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறேன்; நான் விஷ வைத்தியத்தில் ஒப்பற்றவனென்று உலகத்தாரால் புகழப்பெற்றவன், எப்படிப்பட்ட விஷத்தையும் நிமிஷத்

தில் இறக்கிவிடுவேன்" என்று விடை பகர்ந்தார். அதனைக் கேட்ட தக்ஷகன் "அந்தணரே, நான் தான் அந்தத் தக்ஷகன்; பரீக்ஷித்ராசனை விஷத்தால் தகிக்கத்தான் இப்போது போய்க்கொண்டிருக்கிறேன்; என்னால் கடிக்கப் பட்டவனுக்குச் சிகிச்சை செய்ய உம்மால் முடியுமோ? முடியாது; ஆகாத காரியத்தில் என் தலையிட்டு வீணாக அலைகின்றீர்? உமது இருப்பிடத்துக்குத் திரும்பிச் செல்லும்" என்று சொன்னான். அதற்குக் காசியபர், "தக்ஷக, உன்னால் கடிக்கப்பட்ட எவனையும் கணப்பொழுதில் மரண ஆபத்தினின்றும் நீக்கிச் சுகப்படுத்திவிடுவேன் என்பதனை மற்றும் ஒரு முறை உனக்குத் திடமாய்ச் சொல்கிறேன்; பரீக்ஷித்து விஷயத்தில் உன்னால் இயன்றதைச் செய்" என்றார். தக்ஷகன் முனிவரைப் பார்த்து "பிராமணரே, நான் கடிக்கும் எந்த உயிரையும் பிழைப்பிக்கச் செய்யும் ஆற்றல் உமக்கு உண்டானால் இதோ நிற்கிற ஆலமரத்தை நான் கடிக்கிறேன்; இந்த மரத்தை உமது மந்திர சக்தியால் பிழைக்கும்படி செய்யும் பார்க்கலாம்" என்றான். காசியபர், சர்ப்பபதியே! உனக்கு இவ்வளவு கர்வமிருக்குமானால் உனது பற்கள் எல்லாம் உடையும்படி அவ்வளவு வன்மையாய் வேண்டுமானாலும் கடி. உன்னால் கடிக்கப்படும் இம்மரத்தை உடனே தழைத்துப் பிழைக்கச் செய்கிறேன் பார்" என்றார். அது கேட்ட தக்ஷகன், உடனே ஆலமரத்தருகிற் சென்று அதனை அதிவேகமாகக் கடித்தான். கடித்தவளவில் பல்லிலிருந்து ஒழுகிய விஷம் மரமெங்கும் பரவ, மரம் ஒரு நொடியில் எரிந்து கரிந்து பொடியாகிப் பூமியில் விழுந்தது.

அதன்மேல் நாகராசன் காசியபரை நோக்கி "முனிவரே எப்படியும் முயன்று இம்மரத்தைப் பிழைக்கச் செய்யும்" என்றான். காசியபர் தக்ஷகன் விஷத்தால் நீறாய் நிலத்தில் விழுந்த மரத்தின் சாம்பரை யெல்லாம் ஒருங்கு குவித்துத் தமது மந்திர சக்தியினால் முதலில் முளையையும் பின்பு இலைகளையும் கிளைகளையும் உண்டாக்கினார். மரம் வானுற வோங்கி வளர்ந்து திகழ்ந்தது. இவ்வாறு மரம் பிழைப்பிக்கப்பட்டதைப் பார்த்த தக்ஷகன் "இம் முனிவரது மந்திர சக்தியின் முன்னர் நம் விஷ வலிமை ஒரு சிறிதும் நிற்கமாட்டாது. இவரைப் பரீக்ஷித்தினிடம் செல்லவிடாது எவ்வாற்றாலேனும் தடுத்துவிடவேண்டும்" என்று தன்னுள் ஆலோசித்துக் காசியப முனிவரை அணுகி "முனி புங்கவரே! நீர் இக்காரியத்தைச் செய்துவிட்டது ஓர் ஆச்சரியமன்று; இப்போது இவ்விஷயத்தில் நீர் வெற்றிபெற்றுவிட்டாலும் பரீக்ஷித்து விஷயத்தில் நீர் வெற்றிபெறுவது ஒருதலையன்று; ஏனெனின் பரீக்ஷித்தோ ஐம்பொறிகளையும் அடக்கிய அருந்தவர் சாபத்தால் ஆயுள் குறைந்தவனாயிருக்கின்றான். இச்சமயத்தில் அருந்தவர் சாபவாற்றலை மாற்றுவது யாராலாகும்?

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி" என்ற ஆன்றோர்

வாக்கை ஆன்றோராகிய தாங்கள் உள்ளத்திற் கொள்வீராக. நீர் இந்தச் சந்தேகமான காரியத்திற் றலையிட்டு உமது பெருமையை யிழந்துவிடவேண்டாம். எக் காரியத்தையும் எண்ணியே செய்யத் துணிய வேண்டும். இல்லா

விடில் இழுக்குண்டாவது துணிவு. நீர் பரீக்ஷித்துக்கு விஷ சிகிச்சை செய்து அவனைப் பிழைப்பித்துப் பரிசில் பெறுவதென்பது நிச்சயமன்று; உமக்குப் பொருளில் விருப்பமிருப்பின் அப்பொருளை நான் தருகிறேன்; பெற்றுக்கொண்டு உமதிருப்பிடத்துக்குத் திரும்பிச் செல்லும்'' என்று பலவாறு பகர்ந்து காசியபரைப் பரீக்ஷித்திடம் செல்லாமல் தடுக்க முயன்றான்.

காசியபர் இவ்வாறு தக்ஷகன் உரைத்தவற்றையெல்லாம் கேட்டுப் பின்பு பரீக்ஷித்து மன்னனது ஆயுளளவைக் குறித்துச் சிறிது சிந்தித்துப் பார்த்தார். அவனுக்கு ஆயுள் நாள் குறுகிவிட்டதை யறிந்தார். அதனால் தாம் போகும் காரியம் பயன்படாதென்று நினைந்து தக்ஷகனைப பார்த்து ''நான் விரும்புவது பொருளே; அதனை நீ கொடுத்தால் நான் என் இருப்பிடத்துக்குச் சென்றுவிடுகிறேன்'' என்றார். தக்ஷகனும் அவ்வாறே அவர் விரும்பிய தனத்தைக் கொடுக்க முனிவர் பெற்றுக்கொண்டு மீண்டு சென்றார்.

பிறகு தக்ஷகன் அஸ்தினபுரத்தை நோக்கி விரைவாகப் புறப்பட்டுச் சென்றான். பரீக்ஷித்து விஷங்களைப் போக்கும் சிறந்த மந்திர ஔஷதங்களோடும், காற்றும்உட்புகாக் காவல்களோடும் கவனமாகக் காக்கப்பட்டுவருதலை இடைவழியில் கேள்வியுற்றான். அதனால் உடனே அந்த நஞ்ச நெஞ்சுடைய வஞ்சகனாகிய தக்ஷகன், ஓர் கபடமான உபாயஞ் செய்யத் தொடங்கி, அநேக சர்ப்பங்களை அழைத்து ''நீங்கள் பல முனிவர்களது வேடந்தாங்கிப் பழவர்க்கங்களையும் பத்திர தாம்பூலங்களையும் எடுத்துக் கொண்டு பரீக்ஷித்து மன்னனிடம் சென்று கொடுப்பீர்

களாக என்று கட்டளை யிட்டான். சர்ப்பங்கள் அவ்வாறே செல்லுகையில் தக்ஷகன் தானோர் பழத்தில் புழு உருவமாய் உட்புகுந்து கொண்டான். முனிவர்களான சர்ப்பங்கள் அரசனைக் காண அவனிருப்பிடம் சென்றனர். காவலாளர், அரசர்களது நலங்களை நாடும் முனிவர்களைத் தடுப்பது தகாதென்ற முறையால் மாய முனிவர்களைத் தடை செய்யாது உட்செல்ல விட்டனர். உட்சென்ற முனிவர்களை அரசன் உபசரித்து வரவேற்றான். முனிவர்கள் தாங்கள் கொண்டு சென்ற பழவர்க்க முதலானவற்றை அரசன் கரத்தில் கொடுத்தனர். அரசன் அவற்றை ஏற்று, முனிவர்களை வணங்கி அனுப்பிவிட்டான்.

அதன் மேல் பரீக்ஷித்து தனது நண்பர்களையும் மந்திரிகளையும் அழைத்து "ரிஷிகள் கொண்டுவந்த இந்த இனிய கனிகளை என்னுடன் உண்ணுங்கள்" என்று சொல்லி, அவர்களுடனிருந்து உண்ணத் தொடங்கினான். விதிவசத்தால் பரீக்ஷித்து, தக்ஷகன் புகுந்திருந்த பழத்தையே எடுத்துண்டான். அப் பழத்துள்ளிருந்து குறுகிய வடிவமும், கறுத்த கண்ணும், சிவந்த வெண்ணிறமுமுள்ள ஒரு புழு வெளிப்பட்டது. அரசன் அவ்விநோதமான புழுவைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு மந்திரி முதலானவர்களை நோக்கி, "சூரியன் அஸ்தமனமாகப்போகின்றான்; இன்றோடு முனிவர் சாபப்படி எனது உயிர் இறுதியடையும் ஏழாம் நாள் முடிவடைகின்றது; இனி எனக்கு விஷ பயமில்லை; அந்த முனிவர் வாக்கும் பொய்யாகாமலிருக்கட்டும்; புழு கடிப்பதனால் ஒரு தீங்கும் உண்டாகப்போவதில்லை; இது கடிப்பதனால் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனது போல ஒரு

பரிகாரமாக ஆதலும் கூடும்" என்று சொன்னான். மந்திரி முதலானவர்கள் அவன் உரைக்கு ஒருப்பட்டனர். பரீக்ஷித்து, ஊழ்வினை பலிக்கும் காலம் கிட்டிவிட்டமையான் புத்தி கெட்டு, அப்புழுவை எடுத்துத் தன் கழுத்தில் வைத்துக்கொண்டு நகைத்தான்; நகைக்கும்போதே புழுவாயிருந்த தக்ஷகன் பெரும் பாம்பாய் உருக்கொண்டு, தன் உடலால் பரீக்ஷித்துவின் உடல் முழுவதையும் சுற்றிக்கொண்டு பேரிரைச்சலுடன் அரசனைக்கடித்தான். அந்தோ! பரீக்ஷித்து எத்துணையோ முற்காப்புடனிருந்தும் இவ்விடருக்குள்ளானான் என் செய்வது!

"விரிநிற நாகம் விடருள தேனும்
உருமின் கடுஞ்சினம் சேணின்றும் உட்கும்
அருமை யுடைய அரண்சேர்ந்தும் உய்யார்
பெருமை யுடையார் செறின்"

என்ற சான்றோர் வாக்குப் பொய்க்குமோ? இங்ஙனம் தக்ஷகனால் சுற்றப்பட்டுக் கடியுண்டதைக் கண்டு அங்கிருந்தோர் யாவரும் கண்ணீருங் கம்பலையுமாய்க் கதறி, விடத்தின் வெம்மையைப் பொறுக்க வொண்ணாது அவ்விடத்தை விட்டு ஓடினர். அரசனிருந்த மாளிகையும் எரிந்து பாழாயிற்று. அரசன் விடம் தலைக்கேறி மயக்குற்று மாண்டு விண்ணிடம் புகுந்தான். அப்பால் சுற்றத்தினர் பலவாறு கவன்று அரசன் உடலை முறைப்படி தகனஞ் செய்து, சரம கிரியைகளைச் செய்வித்து முடித்தனர்.

அதன்மேல் மந்திரி முதலாயினோர் பரீக்ஷித்துவின் குமாரனாகிய ஜனமேஜயனுக்குப் பட்டாபிஷேகம் செய்

தனர். ஜனமேஜயன் அரியணையிலமர்ந்து இனிதாக இராஜஜிய பரிபாலனம் செய்து வந்தான்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்—திருவள்ளுவர்.

பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபின்
ஆர்க்கும் அருவி அணிமலை நன்னாட
பேர்க்குதல் யார்க்கும் அரிது—நாலடியார்.

# குருகுல வாசம்.

## ஆருணி, உபமந்யு, பைதன்.

முற்காலத்தில் தவுமியர் எனப் பெயர் வாய்ந்த முனி புங்கவர் ஒருவர் இருந்தார். அவர் இரும்புபோன்ற பற்களை யுடையவராயிருந்தமையால் அவர் 'அயோதர்' என்றும் அழைக்கப்படுவார். அம்முனிவர் அக்காலத்தில் தம்மிடம் குருகுலவாசஞ் செய்யவரும் மாணவர்கட் கெல்லாம் வேத வேதாங்கங்களை அன்புடன் போதித்து வந்தார். அவரு டைய சிஷ்யர்களுள் முதன்மையானவர்கள் ஆருணி, பைதன், என்பவர்கள். இவர்களுடன் உபமந்யு என்னும் ரிஷிபுத்திரனும் சேர்ந்து குருகுல வாசஞ் செய்துவந்தான். மாணவர்கள் குருவுக்கு வேண்டிய பணிவிடைகளைப் புரிந்து உற்றுழியுதவியும், உறுபொருள் கொடுத்தும், ஆணை நெறி நின்று ஒழுகி நிற்பதே குரு குல வாசத்தின் முறைமை யாகும் நோக்கம். இந் நெறி நின்று ஒழுகுவதால் விளை யும் நலமோ கணிக்கமுடியாததாயிருக்கும்.

இம் மூவரும் சேர்ந்து நெறி தவறாது குருகுல வாசஞ் செய்து வருநாளில் ஒரு நாள் தவுமியரது கழனியிலுள்ள தண்ணீரெல்லாம் மடையை உடைத்துக்கொண்டு வெளியிற் போயிற்று. அது தெரிந்து தவுமியர் தம் மாணவருள் ஆருணி என்பவனை நோக்கி, "ஆருணியே! நம் கழனியின் தண்ணீ ரெல்லாம் மடை வழியாய் உடைத்துக்கொண்டு போகிற தாம். நீ விரைவாகச் சென்று அவ்வுடைப்பை அடைப்

பாயாக" என்று கட்டளையிட்டார். ஆருணி உடனே சென்று உடைத்தோடும் மடையை அடைப்பதற்குப் பல வாறு முயன்றான்; முடியவில்லை. அதனால் குருவின் கட்டளையை நிறைவேற்ற இயலாததற்கு மனவருத்த முற்றுச் சிறிது சிந்தித்து நின்றான். நின்றவன் "நன்று, உடைப்பை அடைப்பதற்கு உபாயந் தெரிந்துகொண்டேன்; அதற்கு இனி வருந்த வேண்டியதில்லை. நானே தண்ணீரைக் கட்டும் வரம்பாய் உடைப்பில் குறுக்காகப் படுத்துக்கொள்கிறேன்" என்று, தன்னுள் நினைந்து, அவ்வண்ணமே உடைப்புவாயில் படுத்துக்கொண்டான். தண்ணீர் வெளிச் செல்லாது தடைப்பட்டது.

ஆருணி இவ்வாறு குருவின் கட்டளையை கழனியிடத்தில் நிறைவேற்றிக் கொண்டிருக்க, தவுமியர் ஆருணிக்குத் தாமிட்ட கட்டளையை மறந்து, அவனைக் காணாதிருந்தமையால், சிஷ்யர்களை நோக்கி 'ஆருணி எங்கே போனான்' என வினவினார். அதற்குச் சிஷ்யர்கள் "குரு சிகாமணியே! ஆருணி தங்களது கட்டளையாற் கழனி மடையை யடைப்பதற்குச் சென்றுள்ளான்" என்று விடையளித்தார்கள். தவுமியர் அங்ஙனம் உரைத்த சிஷ்யர்களைப் பார்த்து, "ஆருணி சென்று நெடு நேரமாயிற்றே; அவன் வாராது தாழ்த்ததற்குக் காரணம் தெரியவில்லை. நாம் சென்று அவனைத் தேடி வரலாம் என்று சொல்லி அவர்களுடன் கழனிப் பக்கம் சென்றார். அங்கு ஆருணி மடைக்கு வரம்பாய்ப் படுத்திருந்தமையால் அவனைக் காணாது "ஆருணியே! எங்

கிருக்கிருய்? குழந்தாய்! வா''என்று அழைத்தார். அதனைக் கேட்ட மாத்திரத்தில் ஆருணி ''சுவாமியே! அடியேன் இங் கிருக்கிறேன்'' என்று சொல்லி எழுந்து முனிவாருகில் வந்து ''கட்டளைப்படியே கழனிமடையைக் கட்டுதற்கு மிக முய ன்றும் முடியவில்லை; பின் ஜல முழுதும் வெளிப்போவதால் மடையிலேயே படுத்துக் கொண்டிருந்தேன்; இப்போது சுவாமிகள் அழைத்தமையால் எழுந்துவந்தேன்'' என்று சொல்லி நமஸ்கரித்துக் ''குரு மூர்த்திகள் இனி இடுங் கட் டளை எதுவோ அதனைச் செய்யச் சித்தமாய் இருக்கிறேன்'' என்முன். இவற்றை யெல்லாம் கேட்ட தவுமியர் அவன் மீது அன்பு மிகுந்து அவனை நோக்கி, ''அன்ப உபாத்தி யாயர் கழனி மடையை அடைப்பதற்கு இட்ட கட்டளை யை நீ இவ்வண்ணம் வகித்த ஞாபகம் என்றுமிருப்பதற் காக நீ இது முதல் 'உத்தாலகன்' என்னும் நாமத்தையடை யக்கடவாய்'' (உத்தாலகன்—மடையைப் பிளக்கிறவன்) உனக்குள்ள குருபத்தி விசேடத்தால் நீ எல்லா தர்ம சாஸ் திரங்களையும் வேதங்களையும் தெளிந்து ஞானபாநுவாய் விளங்குவாய்'' என்று ஆசீர்வதித்தார். பின்பு குருவின் அருளை நிரம்பப் பெற்ற ஆருணி, குருவினிடம் விடை பெற்றுத் தன்னிருப்பிடம் சென்று கிருகஸ்தாச்சிரமத்திற் புகுந்தான்.

இது நடந்த சின்னுளின் பின்னர் அயோத தவுமியர் மற்ருெரு மாணவனுகிய உபமந்யுவைப் பார்த்து ''அன் பனே! நீ தினந்தோறும் பசுக்களை யேய்த்து வருக'' என்று

கட்டளையிட்டார். உபமந்யுவும் அப்படியே ஒவ்வொரு நாளும் காலம்பெறவே பசுக்களைப் பசும்புலங்களில் ஓட்டிச் சென்று அவைகளை வயிறுர மேய்த்துத் தண்ணீர் குடிப் பித்து மாலை நேரங்களில் முனிவரகத்துக்கு ஓட்டி வந்து சேர்த்துவிட்டுக் குருவை வணங்கி நிற்பான். இவ்வாறு தவருது உபமந்யு செய்துவருநாளிலே ஒரு நாள் உபாத்தி யாயர் அவன் தேக புஷ்டியாயிருப்பதைப் பார்த்து, அதற் குக் காரணம் அறிய விரும்பி, உபமந்யுவை அருகில் அழைத்து "மாணவ! உபமந்யுவே! நீ எதைக்கொண்டு ஜீவனஞ்செய்துவருகிருய்? நீ மிகவும் புஷ்டியாய் இருக்கின் ருயே?" என்று கேட்டார். அதற்கு உபமந்யு "ஐயா! நான் தினம் எடுக்கும் பிக்ஷையினுல் ஜீவனஞ்செய்து வருகிறேன்" என்று விடை அளித்தான். உபாத்தியாயர், மறுபடியும் அவனைப்பார்த்து "உபமந்யுவே நீ பெற்றுவரும் பிக்ஷையை எனக்குக் காண்பியாமல் இனி உண்ணுதல் கூடாது" என்று கட்டளையிட்டார். அவன் "சுவாமிகளே! அவ்வண்ணமே செய்கிறேன்" என்று சொல்லித் தொழுது பின்பு மறுநாள் பிக்ஷ பெற்றவுடனே அவற்றைக் குருவினிடம் கொண்டு வந்து காண்பித்தான். அவர் அவன் கொண்டுவந்த பிக்ஷ உணவு முழுதையும் எடுத்துக்கொண்டார். உபமந்யு அதற் குச் சிறிதும் வருத்தமின்றி மனமகிழ்ச்சியுடன் வழக்கம் போல்பசுக்களைமேய்த்துக்கொண்டுவந்து குருவை வணங்கி வந்தான். பின்னரும் அவன் புஷ்டியாகவே யிருப்பதைப் பார்த்து முனிவர் "உபமந்யு! உன்னுடைய பிக்ஷ முழு தையும் மிச்சமின்றி நான் எடுத்துக்கொள்கிறேன். நீ இப் போது எதனுல் ஜீவித்து வருகிருய்" என்று கேட்டார். அதற்கு மாணவனுகிய உபமந்யு, "எனது கண்கண்ட தெய்

வமாகிய உங்களுக்கு முதற் பிச்சையைச் சமர்ப்பித்துவிட்டு இரண்டாமுறை பிச்சை எடுத்து உண்டு வருகிறேன்'' என்று மறுமொழி பகர்ந்தான். முனிவர் அதனைக்கேட்டு ''மாணவ! நீ இங்ஙனம்செய்வது நியாயமான குருகுல வாசமாகாதே; இந்தச் செய்கையால் நீ இரந்துண்ணும் வறிஞர்களுக்கு இடைஞ்சல் செய்தவனாவாய்'' என்று கூறினார். உபமந்யு கேட்டு ''அப்படியானால் இனி நான் இச் செய்கையை இது முதல் செய்வதில்லை'' என்று சொல்லித் தன் பணிகளை எப்போதும் போலவே குறைவின்றி நடத்தி வந்தான். பிச்சை யெடுத்துண்ணுதலை நிறுத்தியும் அவன் புஷ்டியாகவேயிருந்து வருவதைக் கண்ணுற்ற ஆசாரியர் மாணவனைப் பார்த்து ''மாணவ! நான் உன்னுடைய பிச்சை முழுவதையும் வாங்கிக்கொள்கிறேன். இரண்டாம் முறை நீ பிச்சை எடுப்பதும் இல்லை. இப்படியிருந்தும் நீ புஷ்டியாகவே யிருக்கிறாய் அது எதனால்?'' என்று வினவினார். உபமந்யு, முனிவரைப் பார்த்து ''ஐய! நான் கன்று உண்ட பின்னர் தானாகச்சுரக்கும் இப் பசுக்களின் பாலால் ஜீவித்து வருகிறேன்'' என்று சொன்னான். உபாத்தியாயர் ''மாணவ! நன்றாயிருக்கிறது உன செய்கை; பாலை நீ உண்ண நான் அநுமதி கொடுக்கவில்லையே; அப்படியிருக்க நீ இப்படிச் செய்து வருவது தகுதியாமோ''? என்று சிறிது கோபித்துக் கூறினார்.

உபமந்யு அது கேட்டு ''இனி ஆசிரியருக்குச் சம்மதமில்லாத இச்செயலைச் செய்வதில்லை'' யென்று கூறிவிட்டுப் பசு நிரைகளை மேய்த்து வந்தான். மீண்டும் ஒரு நாள் குருவாகிய தவுமியர், ''உபமந்யு! நீ பிச்சையெடுத் துண்ப

துமில்லை; இரண்டாமுறை பிச்சை யெடுப்பதுமில்லை; பசுக்களின் பாலைப் பருகுவதுமில்லை: இங்ஙனமிருந்தும் நீ இன்னும் புஷ்டியாகவே யிருக்கின்றாய்; அது எவ்விதத்தால்?" என்று கேட்டார். இவ்வாறு முனிவர் கேட்டதற்கு உபமந்யு, "ஐயா! இப்பசுக்களின் கன்றுகள் தாய்ப் பசுக்களிடம் பாலுண்டபிறகு அவற்றின் கடைவாயினின்றும் தரையில் ஒழுகுகின்ற பால் நுரைகளை உண்டு அடியேன் ஜீவித்துவருகின்றேன்" என்று விடையிறுத்தான். தவுமியர் கேட்டு "இந்தக் கன்றுகள் இயல்பாகவே தம் பாலைப் பிறர்க்குக் கொடுப்பதில் தயை மிகுந்தவை; உன்னிடத்திலோ அவைகள் இன்னும் விசேடமான அன்பும் தயையும் வாய்ந்தவைகளாயிருக்கும். அவைகள், நீ உண்ணவேண்டுமென்று கருதித் தாய் மடுவில் சுவையும் பால் முழுவதையும் கடை வாயில் ஒழுகவிட்டுத் தாம் பட்டினி கிடக்கவும் நேரும். அதனால் நீ இப் பசுங்கன்றுகளின் ஆகாரத்துக்கு இடையூறு செய்தவனாகின்றாய். இனி நீ நுரையையுங்கூடப் பருகலாகாது" என்று ஆணை தந்தார். உபமந்யு, "இனிப் பால் நுரையையும் உட்கொள்வதில்லை" என்று உறுதி கூறி அவ்வுறுதியில் வழுவாது பசுக்களைக் காத்துவந்தான். பசி வேளை வந்தபொழுதெல்லாம் காட்டிலுள்ள எருக்கிலைகளைத் தின்று வயிற்றை நிரப்பிவந்தான். இப்படி உப்பும், கைப்பும், காரமும் முருடும் வெம்மையும் மிகுந்த எருக்கிலைகளையே தின்று வந்தமையால், அவன் அஜீரணத்தால் வருந்தியதே யன்றிக் கண்ணும் கெட்டு அந்தகனானான். அந்தோ பாவம்! கண் கெட்டுத் தட்டுண்டு தடுமாறியும் ஆசாரிய கைங்கரியத்தை விடாப்பிடியாய்ச்

செய்துகொண்டே வந்தான். இங்ஙனம் செய்து வரும் நாளில் ஒரு நாள் பாழ்ங் கிணற்றில் தவறி வீழ்ந்து விட்டான். சூரியனும் அஸ்தமனமானான். அதுவரை உபமந்யு வீட்டுக்கு வாராததை யறிந்த தவுமியர் சிஷ்யர்களை நோக்கி "உபமந்யு இன்னும் வாராததற்குக் காரணம் தெரியவில்லையே? என்னவாக விருக்கலாம்"? என்று வினவினார். அவர்கள் "பசுக்களை மேய்ப்பதற்கு வனம் போனவன்றான் இன்னும் வாரமலிருக்கின்றான்" என்றார்கள். அதன்மேல் தவுமியரான ஆசிரியர், "உபமந்யுவை எல்லா விஷயங்களிலும் மறுத்துவிட்டேன்; அது கருதியே அவன் என மீது கோபமுற்று வாரமலிருக்கின்றான் போலும். ஆதலால் அவனை நாம் தேடிப்பார்த்தல் வேண்டும்" என்று சொல்லிச் சிஷ்யர் குழாத்துடன் காட்டுப்பக்கம் சென்று "அன்புள்ள உபமந்யுவே! எங்கிருக்கின்றாய்? குழந்தாய் விரைந்து வா விரைந்து வா!" என்று சத்தமிட்டழைத்தார். உபமந்யு, கிணற்றுக்குள்ளிருந்தபடியே உபாத்தியாயர் குரலைக் கேட்டு "இங்குக் கிணற்றுக்குள் வீழ்ந்து கிடக்கிறேன் சுவாமி" என்று உரத்து மறுமொழி கொடுத்தான். ஆசிரியர் கேட்டுக் கிணற்றருகில் விரைந்து சென்று "அப்பா உபமந்யு இக்கிணற்றுள் எப்படி வீழ்ந்தாய்?" என்று வினவினார். அதற்கு அவன் "சுவாமி! பசிக்கும் போதெல்லாம் எருக்கிலைகளையே தின்றுவந்தேன்; அதனால் கண் கெட்டுப்போயின. கண்ணொளி குன்றிவிட்டமையால் இன்று நடந்துவரும்பொழுது இக்கிணற்றுள் வீழ்ந்து விட்டேன்" என்று நடந்ததைக் கூறினான். இவற்றைக் கேட்டறிந்த தவுமியர் உபமந்யு பக்கலில் மிகுந்த அன்பு பெருகியவராய் அவனது ஆசாரிய பக்திக்கும் சொன்ன

சொற்றவருதவாய்மைக்கும் வியந்து இரக்கமிகுந்து, உபமந்யுவை நோக்கி "மாணவ! நீ தேவ வைத்தியர்களான அசுவினி தேவர்களை உனது தூய வாயால் துதித்திடுவாயாக; அப்படிச்செய்யின் அவர்கள் உனக்கு முன்தோன்றி, உனது கண்களுக்கு மீளவும் ஒளியைக் கொடுப்பார்கள்" என்று உபமந்யுவுக்குக் குருட்டுத் தன்மை நீங்குதற்கேற்ற உபாயத்தைத் தெரிவித்தார்.

இவ்வாறு ஆசிரியர் கூறக் கேட்ட பின்பு உபமந்யு அவரது உத்திரவுப்படியே அசுவினி தேவர்களை மந்திர ரூபமான வாக்கியங்களால் பல விதமாக நாத் தழும்பேறத் துதித்துக் கடைசியாக "அசுவினி தேவர்களே! உங்களது நற்குணங்களையும் நற்கீர்த்திகளையும் நாவாரத் துதிப்பதற்கு நான் சக்தனல்லன்; கண்ணொளி குன்றியமையால் இவ்வாழமான கிணற்றில் வீழ்ந்துகிடக்கின்றேன்; இவ்வேளையில் நீங்கள் வந்து கண்ணொளியீந்து என்னைக் கைதூக்கியருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

இவ்வாறு உபமந்யு வருந்தித் துதிப்பதை யறிந்த அசுவினி தேவர்கள் அவன் அருகில் வந்து "உபமந்யு; நாங்கள் உன்மீது நிரம்ப அன்புள்ளவர்களாகவிருக்கிறோம்; நீ பயப்படவேண்டாம்; நீ நெடுநாளாகப் பட்டினி கிடக்கின்றாய்; இதோ உனக்குச் சுவைமிக்க பக்ஷணம் கொண்டு வந்திருக்கின்றோம்; இதனை உண்ணுவாயாக" என்று சொன்னார்கள். அவர்கள் இங்ஙனம் கூறலும் உபமந்யு கேட்டு "மாண்பு மிக்க பெரியோர்களே! உங்கள் கட்டளையை யான் கடக்கக்கூடாதாயினும், குருவுக்குத் தெரியாமலும் அவரது அநுமதியின்றியும் இதனை யான் சாப்பிட

மாட்டேன்'' என்று மொழிந்தான். அதற்கு அசுவினி தேவர்கள் அவனை நோக்கி, "அன்ப! பன்னாள்கட்குமுன்னர் ஒருமுறை உன் குருவும் இவ்வாறே எங்களைத் துதித்த போது நாங்கள் கொண்டுவந்து கொடுத்த பக்ஷணங்களை அவர் அவரது ஆசாரியருக்குத் தெரியாமலே சாப்பிட்டார். ஆகையால் உன் உபாத்தியாயர் செய்தது போலவே நீயும் செய்யலாம். இதனாற் குற்றமொன்றுமில்லை'' யென்று சொன்னார்கள். அதற்கு உபமந்யு அவர்களைப் பார்த்து, "தேவ வைத்தியர்களே! நானோ குருவின் ஆணையில் அணுவும் பிசகாது நடப்பவன்; இப்படி நடப்பதினால் எத்தகைய கஷ்டங்கள் வரினும் அவற்றைப் பொருட்படுத்தேன்; இக்காரியந்தவிர வேறு நீங்கள் எதனை ஏவினாலும் செய்யச் சித்தமாயிருக்கின்றேன். இச்சொல்லை மாத்திரம் மீண்டும் சொல்லவேண்டாம்'' என்று கேட்டுக்கொண்டான். அசுவினி தேவர்கள், உபமந்யுவின் வைராக்கியமான குரு பக்தியைக்கண்டு வியந்து "உபமன்யு! உனது உறைப்பான குரு பக்தியை யறிந்து யாங்கள் மெச்சுகின்றோம். உன் குருவின் பற்களோ இரும்பாகவிருக்கின்றன; உன் பற்களோ பொற்பற்களாகட்டும்; இழந்த புறக்கண்களிரண்டோடு கலை ஞானங்களாகிய அகக் கண்களையும் நீ அடைவாயாக'' என்று வரமீந்து சென்றனர்.

பின்பு உபமந்யு, உபாத்தியாயர் முன்பு தனக்கிட்ட கட்டளையே அசுவினி தேவர்களது அநுக்கிரகத்துக்கு ஆதாரமாயிருந்ததற்கு அகமகிழ்ந்து, அயோத தவுமியாகிய ஆசிரியனை அடைந்து அவரது அடிகளைப் பணிந்து

நின்றான். உபாத்தியாயர் அவன் மீது அன்பு கூர்ந்து, "அசுவினி தேவர்கள் அருளியபடியே நீ சகலகலா வல்லவனாகவும் வேத பாரங்கதனாகவும் விளங்குவாய்" என்று அநுக்கிரகித்து அனுப்பினார். உபமன்யு தன் இருப்பிடம் சென்று உலகத்தில் உயர்ந்த ஞானவானாய் விளங்கினான்.

பிறகு அயோத தவுமியர், பைதன் என்னும் சிஷ்யனை நோக்கி, "பைதனே! நீ என் கிரகத்தில் நான் சொல்லுகிற பரியந்தம் பணிகளை யெல்லாம் செய்துகொண்டிருக்கவேண்டும்; அதனால் நீ விரும்பின வித்தை கைகூடும்" என்று சொன்னார். அங்ஙனமே பைதனும் மகிழ்ச்சியுடன் பல வருடங்கள் பணிகள் நன்காற்றிக் குருகுல வாசம் செய்து வந்தான். எருது போலச் சுமைகளை யெல்லாம் சுமந்தான். வெப்பம், பசி, தாகம் முதலிய கஷ்டங்களை யெல்லாம் பொறுத்து, ஊழியத்தை விடாது புரிந்து வந்தான். வெகு காலம் சென்ற பின் குருவுக்கு அவனிடம் சந்தோஷம் பிறந்தது. குருவின் பிரீதியினாலே பைதன், ஈடும் எடுப்பு மற்ற கல்வியறிவையுடையவனாய்ப் பிரகாசித்தான். அதனால் தவுமியர் பைதனை நோக்கி "உனது விருப்பம் நிறைவேறிற்று; இனி நீ செல்லலாம்" என்றார். அதன்மேல் பைதன் குருகுல வாசத்தை முடித்துக் குருவினிடம் விடைபெற்று வணங்கிப் போய்க், கிருகஸ்தாச்சிரமத்திற் புகுந்து பல சிஷ்யர்களுக்குக் குருவாக விளங்கி இருந்தான்.

# பீமன் வல்லபம்.

குரு வம்சத்திற் பிறந்து விளங்கிய பாண்டு மகாராஜன் காட்டில் வேட்டை யாடும்போது மானுருவெடுத் திருந்த கிந்த மாமுனியை அம்பெய்து கொன்ற சமயத்தில் அம் முனிவர் அவனுக்கிட்ட சாபத்திற்குப் பயந்து, அச்சாபம் தன்னைப் பீடியாமலிருத்தற் பொருட்டுத் தன் மனைவிகளா கிய குந்திதேவியோடும் மாத்திரியோடும் வனத்திற்குச் சென்று வானப் பிரஸ்தனுப்த் தவ விரதங்களை நோற்றுக் கொண்டிருந்தான். அங்ஙனமிருந்தும் இந்த மாமுனியின் சாபத்தால் பாண்டு சின்னாளில் இறந்து சுவர்க்கம் புகுந் தான். அவன் இறந்து போவதற்கு முன்னரே குந்திதேவி, துருவாச முனிவரிடம் பெற்ற மந்திர பலத்தினுல், யமன், வாயு, இந்திரன் என்பவர்களைத்தன்னகத்துக்குவரவழைத்து, அவர்களது அநுக்கிரகத்தினுல் முறையே உதிஷ்டரன், பீமன், அர்ச்சுனன் என்னும் மூன்று புத்திரர்களைப் பெற்றி ருந்தாள். சககளத்தியான மாத்திரியும், குந்தியிடமிருந்து பெற்ற மந்திர உபாசனையால் தேவ வைத்தியர்களான அசு வினி தேவர்களை அழைத்து அவர்களது அநுக்கிரகத்தால் நகுல சகாதேவ ரென்னும் இரட்டைப் பிள்ளைகளைப் பெற் றிருந்தாள். பாண்டு விண்ணுலகம் புகுந்தபின் அவன் புத் திரர்களைப் பரிபாலிப்பாரின்மையினுல் அங்கிருந்த முனிவர் சிலர் பிள்ளைகளையும் குந்தி மாத்திரி இவர்களையும் அஸ்தினு புரத்தில் அரசு செய்திருந்த பாண்டுவின் தமையனுகிய திரு தராஷ்டிரனிடம் கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

தம்பியின் மக்களைக்கண்ட திருதராஷ்டிரன் அவர்கள் வேறு தன் மக்கள் வேறு என்று கருதாமல் பாண்டு புத்திரர்களை நன்கு போற்றி வளர்த்துவந்தான். பாண்டவர்கள் வளர்ந்து விளையாடும் பருவமுற்று திருதராட்டிரன் புத்திரர்களான துரியோதனுதியரோடு சேர்ந்து வீதிகளில் விலாசமுற்று வந்தனர். அவர்கள் திருதராட்டிர புத்திரர்களை விடச் சிறுவர்க்குரிய விளையாட்டுக்களில் முதன்மையுற்று விளங்கினர். பீமன், விரைவிலும், குறித்த பொருளை ஓடி முதலில் எடுப்பதிலும், புழுதியிலிழுப்பதிலும் போஜனத்திலும் துரியோதனன் முதலியோரைத் தாழ்த்தி மேன்மை பெற்று விளங்கினுன். விளையாடும்போது அவன் துரியோதனனையும் அவன் தம்பிகளையும் உச்சிக்குடுமிகளைப்பிடித்து ஒருவர் தலையோடு மற்ெறுருவர் தலையை மோதுவான்; அவர்கள் கதறும்படி அவர்களது கால்களைப் பிடித்துத் தரையில் முதுகு தேயக் கரகரவென்று இழுப்பான்; குளத்தில் விளையாடும் தருணங்களில் துரியோதனன் தம்பிகள் பதின்மரை ஒரே தடவையில் பிடித்துக்கொண்டு மூச்சுவிட முடியாமல் திண்டாடும்படி நெடுநேரம் தண்ணீர்க்குள் அமிழ்த்தி வைத்துப் பின்னர் விடுவான்; அவர்கள் மரத்து மேலேறிப் பழங்கள் பறிக்கும்போது பீமன், மரத்தின் அடியைக் காலால் மிதித்து மரத்தை அசைத்து மரத்திலிருக்கும் சிறுவர்களும் பழங்களும் கீழே விழும்படி செய்வான். விளையாட்டு வகைகளிலும், விளையாட்டுச் சண்டைகளிலும் பீமனை வெல்லுதற்குத் துரியோதனனும் அவனது தம்பிகளும் பலவாறு முயன்றும் முடியவில்லை. பீமன் பகைமைக் குணமில்லாமலே பாலப் பருவத்திற்குரிய குறும்பினுலேயே இத்தகைய செயல்களைச் செய்து வந்தான். திரு

தாரட்டிரன் புத்திரர் நூற்றுவருள் துரியோதனன் மாத்திரம் உடல் பருமனிலும் வலிமையிலும் ஒரு சிறிது பீமனோடு ஒத்தவன். இவன், பீமனுக்கு இளமைப் பருவத்திலேயே அவனது பராக்கிரமச் செய்கைகளால் புகழும் மதிப்பும் பெருகுவதைக்கண்டு சிறிதுசிறிதாகப் பீமன் மீது பொறாமையும் பகைமையும் கொள்ளத் தலைப்பட்டான். அதனால் அவன், "பிற்றை நாளில் பீமனைத்துணைக்கொண்டு உதிட்டிரன் நமதுதந்தையின் ராஜ்ய முழுதுக்கும் அதிபதியாகக் கூடும். நாம் அவன் அடிக் கீழ் அடிமையாய் வாழ வேண்டிவரும்" என்று விடாது சிந்தித்துக் கவலையுற்றிருந்தான். இப்படியிருந்த துரியோதனன் பின்பு "இனிக்காலந் தாழ்க்காது பீமனைச் சீக்கிரத்தில் தொலைத்துவிடவேண்டும் நாட் செல்லின் அவனை வெல்லல் என்பது

" இளைதாக முண் மரங்கொல்க, களையுநா
கைகொல்லும் காழ்த்த விடத்து"

என்ற பெரியோர் அமுத வாக்கின்படி அரிதாகவே முடியும். என்று தன்னுள் ஆலோசனைசெய்து பீமனைச் சதிப்பதற்குரிய சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதன்மேல் துரியோதனன் தான் யோசித்தபடி செய்வதற்குத் தக்க உபாயமாக ஒரு நாள் கங்கையில் ஜலக்கிரீடை செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தான். அதற்குத் தன் தம்பிகளையும் பாண்டவர்களையும் அழைத்துச் சென்று கங்கையில் நீந்தி விளையாடி விளையாட்டு முடிவில் பாண்டவர்களோடு போஜனம் செய்தான். போஜனம் ஆனபின் பீமன், ஒரு கூடாரத்துள் சென்று, விளையாடிய அயர்ச்சியினால் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தான்;

அச்சமயம்பார்த்துத் துரியோதனன் பீமனைக் கொடிகளால், இறுகக் கட்டிக் கங்கையாற்றில் ஆழமான இடத்தில் போட்டுவிட்டான். ஆற்றில் விழுந்த பீமன், அக்கட்டுக்களை உடனே அறுத்துக் கொண்டு நீந்திக் கரையேறி, இது துரியோதனன் செய்த சூழ்ச்சி யென்பதை ஓராமலே 'யாரோ விளையாட்டாகச் செய்த தாகும் இச்செய்கை' என்று கருதி மறுபடியும் படுத்து நித்திரை போனான். நடுயாமத்தில் மீளவும் பழைய இடத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் பீமனைத் துரியோதனன் கண்டு, ஆச்சரியமும் கவலையும் கொண்டு, பல விஷப்பாம்புகளைப் பிடாரர்கள் மூலம் கொண்டுவரச்செய்து, பீமனைக் கடிக்கும்படி செய்தான். அப்போது பீமன் தன்னைக் கடிப்பவை மூட்டுப்பூச்சிகளென்று எண்ணி, எழுந்திராமலே அவற்றைக் கைகளால், நசுக்கி எறிந்துவிட்டுப் பின்பு எழுந்தான். இவ்வாறு பீமனைக் கொல்லுதற்குத் துரியோதனன் செய்த உபாயங்கள் சிறிதும் பயன்படாமற்போயிற்று; போகவே பின்பு ஒரு நாள் துரியோதனன், தன் மாமன் சகுனியோடு ஆலோசனை செய்து, ஒருமுறை பீமன் உண்ணும் உணவில் 'காளகூடம்' என்னும் நஞ்சைக்கலந்து உண்ணும்படி செய்தான். பீமன் உண்ட நஞ்சமும் அவனைக் கொஞ்சமும் ஊறு செய்யாது வயிற்றிலேயே அற்றொழிந்தது. பின்பு ஒருமுறை துரியோதனன் ஒரு தடாகத்தில் கழுக்களை நட்டுவைத்துப் பீமனை அழைத்துப்போய் அக்கழுக்களுக்கு நேராகக் குதிக்கும்படி ஏவினான். அப்படியே குதித்த பீமன் அக்கழுக்களுக்கு மேல் தண்ணீரில் பல வண்டுகள் தெய்வச் செயலாக மொய்த்துக் கொண்டிருந்தமையால் அவ்விடத்திற் குதித்தால் அவை இறந்துபோமெனக் கருதிச் சிறிது தாண்

டிக் குதித்து, யாதொரு கஷ்டமுமின்றி எழுந்து வந்தான். அதனால் அப்போதும் துரியோதனன் செய்த அத் தீய சூழ்ச்சி பயனற்றதாயிற்று. அதன்மேல் துரியோதனன் மற்றுமொருமுறை பீமனை அவனது சகோதரர்களினின்றும் தனியே பிரித்துச் 'சிற்றுண்டி உண்டு களிக்கலாம்' என்று ஓர் சோலைக்கு அழைத்துச்சென்று உண்டிகளில் முன்போலவே காளகூட விஷத்தை மிகுதியாக இட்டு வைத்துப் பீமனை உண்ணும்படி செய்தான். உண்டு கொண்டிருக்கும்போதே பீமன் அறிவழிந்து மயங்கினான். அப்போது துரியோதனன், விடத்தினால் அறிவழிந்த பீமனைத் திடத்தினாற் சிறந்த கிங்கரர்களைக்கொண்டு வடத்தினாற் பிணித்துக் கங்கையின் வெள்ளத்திடத்திலே வீழ்த்தும்படி செய்தான். வெள்ளத்துள் வீழ்த்தப்பட்ட பீமன், பிலத்துவார வழியாய்ப் பாதாள உலகிற்போய் வீழ்ந்தான். வீழலும் அவ்வுலகில் வசிக்கும் நாகர்களது குட்டிகள், கட்டுண்டபடி வீழ்ந்த பீமனைச் சூழ்ந்துகொண்டு தங்களது கூரிய பற்களால் கடித்ததன; கடித்தலும் முன் அவனதுடம்பிற் பட்டிருந்த விஷம் பின் நாகக்குட்டிகள் கடித்த விஷம் படுதலும் முழுதும் நீங்கிவிட்டது. அதனால் பீமன் தெளிவுற்றுத் தன்னைப் பிணித்திருந்த வடங்களை அறுத்துக்கொண்டு பால சூரியன்போல் ஒளியுடன் விளங்கினான். பின்பு புதியனாகிய பீமனது வரவை அறிந்த நாகர் தலைவனாகிய வாசுகி, அவனை அழைத்துவரச் செய்து, தங்களுக்கு முக்கிய உணவாகிய வாயுவின் புத்திரனென்பதைத் தெரிந்து, அவனது விடக்களைப்புவிடப் பத்துக்குட அமிர்தத்தைக் கொடுத்து உண்ணும்படி செய்தான். பீமன் அமிர்த குடங்களை உண்டவுடன் கோடை வெயிலால் வாடிய

பயிர்கள் மழைத்தாரையால் எவ்வாறு செழிப்புற்று விளங்குமோ அவ்வாறு, விடநுகர்ந்து நிறங்கெட்ட அவனது உடல், அமுதம் அருந்தியதால் அழகு மிகுந்து, பதினாயிரம் பட்டத்து யானைகளின் பலத்தையும் பெற்று விளங்கிற்று. பின்பு எட்டு நாள் வரை அவன் அந்நாகலோகத்தில் வாசுகி அரண்மனையில் விருந்தாகத் தங்கியிருந்தான்.

இவன் இங்கு இவ்வாறிருக்க, அஸ்தினாபுரத்தில் குந்தி தேவி பீமனை இராப்பொழுது வந்தும் காணாமையால் இரா முழுதும் ஊண் உறக்கமின்றி வருந்தினாள். 'பீமன் எங்குச் சென்றான்?' என்று உதிட்டிரன் முதலிய பீமனது துணைவர்கள், வேறுவேறு பக்கங்களில் ஓடிக் காடு, ஆறு, மலை முதலிய இடங்களில் தேடி, காணாது 'இனி என் செய்வ' தென்று நாடி நடுங்கினார்கள். காற்றில்லாத ஏனைய நான்கு பூதங்களையும்போல் பீமனை இழந்த பாண்டவர்கள் மனம் சுழன்று வருந்தினார்கள். வருந்தியவர்கள் 'கூற்றையொத்த துரியோதனனே பீமனது ஆற்றலில் அழுக்காறுற்றவன்; அவனே பீமனுக்கு ஏதேனும் கேடு சூழ்ந்திருக்கவேண்டும்' என்று ஐயுற்றார்கள். பின்பு அவர்கள், சில நன்னிமித்தங்களை அறிந்த பெரியோர் "பீமன் ஆபத்தின்றி வருவான்" எனத் தேற்ற ஒருவாறு தேறியிருந்தார்கள்.

வாசுகியின் அரண்மனையிலிருந்து இளைப்பாறிய பீமனை நாகர்கள் தூக்கிக்கொண்டுவந்து கங்கைக் கரையில் சேர்த்தனர். பீமன், சூரிய கிரணத்தால் மலர்ந்த தாமரை மலர் போல் முகமலர்ந்து, சிம்மேறுபோல் அஸ்தினாபுரத்திற் புகுந்து, குந்தி தேவிக்கும், துணைவர்கட்கும் வீடுமன் விதுரன் முதலிய பெரியோர்க்கும் அந்நகரத்திலுள்ள வேதி

யர்க்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தான். ஞாதியாகிய துரியோதனன் முதலியோர்க்கு மகிழ்ச்சியைக் கெடுத்தான். அதனால் அவர்கள் பீமன்மீது முன்னையினும் அதிகமான உட்பகைமை பூண்டு மனம் புழுங்கியிருந்தார்கள்.

சின்னாட்கழிந்தபின், பாண்டவர்களும், துரியோதனாதியரும் கிருபர் என்னும் மறையவரிடமும், பின்பு துரோணரிடமும் வில்வித்தை முதலிய போர்த்தொழில் பயின்றார்கள். இப்பயிற்சியிலும் பீமனும் அவனது துணைவருமே முதன்மைபெற்று விளங்கினார்கள். இங்ஙனம் விளங்கி வரும் நாளில் பீமனது தமையனாகிய உதிட்டிரனது நற்குண நற்செய்கைகள் நாட்டினருடைய உள்ளங்களைக் கவர்ந்துகொண்டன. அதனால் அவர்கள் யாவரும் 'இனிக் குரு நாட்டுக்குத் தகுந்த அரசன் உதிட்டிரனே யன்றி வேறொருவருமிலர், என்று கருதி, திருதராட்டிரனிடம் சென்று உதிஷ்டிரனுக்கு இளவரசுப்பட்டம் கட்டும்படி வேண்டினார்கள். திருதராட்டிரனும் 'அவ்வாறு செய்வதே உத்தமம்', என்று நல்லோரையில் உதிட்டிரனைக் குருநாட்டுக்கு இளவரசனாக்கினான். இதனைக் கண்ட துன்மதியுடைய துரியோதனன் மனம் உடைந்து, திருதராட்டிரனிருக்கும் தனி இடத்தை அடைந்து, கொதித்துத் தபித்து அவனிடத்தில் தன் மனத்துயரை வெளியிடத் தொடங்கினான்:—

"பிதாவே! அயோக்கியர்களான நகரத்து ஜனங்களுடைய பேச்சைக்கேட்டு என்ன காரியஞ் செய்து விட்டீர்?

நீரே ராஜ்யத்துக்கதிபதி; உமது புத்திரன் நான்; நானிருக்க உதிட்டிரன் பட்டத்துக்குரியவனாவது எப்படி? உமக்குள்ள அந்தகத்தன்மையால், பாண்டுவே ராஜ்யாதிபதி; அவனுக்குப்பின் உதிட்டிரனே அதற்குரியவன்' என்றால், பாண்டுவும் அரசியலுக்கொவ்வாத பாண்டுரோகம் உடையவன்றானே? அவன் அரசியலுக்கு அருகனாயின் நீரும் அருகாதற்குத் தடையென்னை? இவ்வரசியல் மூத்தோராகிய உம்முடையதே; அதனால் நானே இளவரசனாதற்கு உரிமையுடையவன்; உதிட்டிரன் இளவரசனானால், உமது மைந்தர்களாகிய நாங்கள் எங்கள் சந்ததியுடன் அவமதிக்கப்பட்டுப் பாண்டவர்களுக்கு அடிமைகளாய் வாழநேரிடுமென்பது ஒருதலை. பாண்டவர்கள் இடும் கைப்பிடி அன்னத்திற்கு நாங்கள் ஏக்கமுற்றுக் காத்திருக்க வேண்டுவதுதான். அரசர்க்கரசராகிய உமக்கு நாங்கள் மக்களாய்ப் பிறந்தது இந்த அடிமை நிலையை அடைவதற்குத்தானோ"? என்று பலவாறு சொல்லிக் கண் பிசைந்தழுது கண்ணீரால் கால் கழுவ நின்றான்.

இவ்வாறு தன் புத்திரன் சொல்லிய சொற்களைக் கேட்ட திருதராட்டிரன், துரியோதனனை நோக்கி "மைந்த என்ன கூறினை? நீதியில்லா நெறியைக் கருதுகின்றாய்; இது அடாது; இந்த இராஜ்யத்தில் பாண்டுவின் அரசியல் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது; ஆதலால், அவனுக்குப் பின் அவன் மகன் உதிட்டிரனே அரசியல் வகிக்கத் தகுந்தவன்; அதுவே மநுநீதியுமாகும்; பாண்டவர்களுடன் சேர்ந்தே இவ்விராஜ்யத்தை நீங்கள் ஆளவேண்டும்; உதிட்டிரனை இள

வாசுப் பதவியினின்றும் இறக்கிவிடுதல் முடியாது; நகரமாந்தர்களெல்லாம் அவனே தங்கட்கு அரசனாய்வரவேண்டுமெனப் போவாவுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்; மந்திரிமாரும் சேனாபதிகளும் உதிட்டிரனிடத்தில் பேரபிமானமுள்ளவர்களாயிருக்கிறார்கள்; பீஷ்மர், துரோணர், விதுரன், கிருபர் முதலிய பெரியோரெல்லாம் உதிட்டிரனிடத்தில் மாறாத அன்புள்ளவர்கள்; விஷயம் இங்ஙனமிருப்பதால் உதிட்டிரனைப் பட்டத்தினின்றும் நீக்குவதும், அதனை உனக்கு ஆக்குவதும் சிறிதும் இயலாத காரியம்; இம்முறையிலிருந்தும் நான் பிறழ்ந்தால் நமக்கு உலகோர்பழியும், அழிவும் வருவது திண்ணம்; இத்தகைய இடர்ப்பாடுகளிருக்கும் இக் காரியத்தில் உனதெண்ணம் எவ்வாறு ஈடேறும்? ஈடேறுதற்குரிய உபாயந்தான் என்ன இருக்கின்றது?" என்று துரியோதனனது கருத்துக்கிசையாது கூறினான். துரியோதனன் கேட்டு "தந்தையே! தாங்கள் உதிட்டிரனுக்குப் பலருடைய அபிமானமும் துணையும் சாலவும் உள்ளதாகக் குறிப்பிட்டீர்கள்; நம் பக்கலில் என்ன? ஒருவருமில்லையா? சதியாலோசனையிற் சிறந்த சகுனியும்; வண்மையில் மிக்க கன்னனும் எனக்கு ஆருயிர்த்துணைவர்களாக விளங்குகிறார்கள்; பீஷ்மரோ ஒரு பெருந்துறவி; அவர் ஒருவர் பக்கமும் சேரார்; அசுவத்தாமா என் மீது நிரம்பிய பக்ஷமுடையவர்; ஆதலால் அவரது தந்தை துரோணர், நம்மை விட்டுப் பாண்டவர் பக்கம் சேரார்; இவர்களைப் பார்த்துக் கிருபரும் நம்மை விட்டகலார்; விதுரர் ஒருவருமே எதிரிகளான பாண்டவரிடம் அந்தரங்க நேயமுடையவராயிருக்கின்றார்; இருப்பினும் அவர் நம்முடன் வெளிப்படையில் எதிர்த்து ஒரு காரியமும்

செய்யார்'' என்றெல்லாம் தான் இராஜ்ஜிய பதவி பெற்ருல் அதனை வகித்தற்கிருக்கும் உபபலங்களை எடுத்துக் காட்டித் தன் தந்தையைத் தன் பக்கம் திருப்ப முயன்ருன்.

இவ்வாறு துரியோதனன் இரங்கிய குரலுடனும் பரிபவத்துடனும கூறக் கேட்டதும் திருதராட்டிரனுக்குப் பாண்டவர்கள் மீதிருந்த அன்பெல்லாம் மாறி வன்பாகத் தொடங்கிற்று. மகனுகிய துரியோதனன் மீது இரக்கமும், வாஞ்சையும், அவன் கருத்தை நிறைவேற்றவேண்டுமென்ற எண்ணமும் விஞ்சியது. உலகத்தில் புத்திர வாஞ்சை யென்பது முற்றுத் துறந்த ஞானிகளையும் பிணிக்குமியல்பினதென்ருல், பெற்ற பிள்ளையாகிய துரியோதனன் துக்கமேலீட்டால் ஓலமிட்டழக் கேட்ட அந்தகனுகிய திருதராட்டிரனது உள்ளம் பேதுற்று இங்ஙனமானது ஒரு வியப்போ? மனந்திரிந்த திருதராட்டிரன், பின்பு துரியோதனனோடு கன்னன் சகுனி இருவரையும் அழைத்து, அன்று இராப்போதில் தனித்தோரிடத்திலிருந்து, பாண்டவர்களை நகரத்தை விட்டுப் போக்குதற்குரிய உபாயத்தை ஆலோசித்தனர். அவர்களெல்லாரும் அன்று இரா முழுதும் யோசித்துக் கடைசியாக "வாரணவதத்தில் தற்சமயம் பிரமோற்சவம் நடைபெறுகின்றது; அதனையே வியாசமாகக் கொண்டு அங்கு போய்ச் சின்னுளிருந்து சுவாமி தரிசனம் செய்து வாருங்களென்று நாம் அவர்களை அனுப்பி விடுவதே தக்கது'' என்று தம்முள் முடிவிட்டார்கள். இராப்போது புலர்ந்ததும் திருதராட்டிரன், பீஷ்மன் விதுரன் முதலியோரை அழைத்து அவர்களிடத்தில் "பாண்டவர்களது வாழ்வுக்குப் பொருமல் என் மக்க

ளாகிய துரியோதனன் முதலியோர் பகைமை பாராட்டி வருகின்றார்கள்; இப்போதே இருதிறத்தாருள்ளும் அதிக மாகப் பிளவு ஏற்பட்டிருக்கின்றது; இன்னும் இவர்கள் நெருங்கி உறைவார்களானால் இவர்களுள் பகைமை முதிர்ந்து பேரிடர்கள் உண்டாகும்; 'கிட்டவிருந்தால் முட்டப் பகை' என்பது பழமொழி; ஆதலால் பாண்ட வர்களைக் கவுரவரிருக்கும் இடத்தை விட்டு அயலிடத்தில் சிறிது நாள் பிரித்து வைக்கக் கருதியுள்ளேன்; இது பற்றி உங்கள் கருத்தென்ன"? என்று உசாவினான். அதற்கு அவர்கள் "இது விஷயமாக நாங்கள் ஏதேனும் சொன்னால் உன் மக்கள் எம் சொல்லைக் கேளார்; நாங்கள் சொல்வதிற் பயனொன்றுமில்லை; உனது இஷ்டம் எப்படி யோ அப்படியே செய்க" என்று சொல்லி அவ்விடம் விட் டகன்றார்கள்.

## அரக்கு மாளிகை.

அதன்மேல் திருதராட்டிரன் தனக்குரியாரோடு மீண் டும் ஆலோசித்துப் பாண்டவர்களை வாரணாவத நகரத்துக் கனுப்பி அவ்விடத்திலேயே அவர்களை முடித்துவிடக்கருதி அவர்கள் அங்கு வசிப்பதற்கு அமைக்கும் மாளிகையை அரக்கு, குங்கிலியம், துணி முதலிய பொருள்களாலேயே கட்டும்படி செய்தான். அவ்வாறே அரக்கு மாளிகை கட்டி முடிந்ததும்' திருதராட்டிரன் பாண்டவர்களைத் தனியாக அழைத்து, வாரணாவத நகரத்தின் மகத்துவத்தை எடுத் துக்கூறி "அங்கு நீங்கள் சென்று, சந்திரசேகரனாகிய சிவபெருமானைத் தரிசித்து வணங்கி, அத்தலத்திலேயே சின்னாள் தங்கியிருந்து பின்னர் இங்கு வாருங்கள்" என்று சொல்லி அவர்களை உடன்படுத்தி ஏவினான். அவர்களும்

பெரிய தந்தையின் கட்டளையைச் சிரமேற்கொண்டு, தங்களுக்கு வேண்டிய பரிவாரங்களுடன் புறப்பட்டு, வாரணாவத நகரஞ் சேர்ந்தனர். பாண்டவர்களையும் அவர்கள் வாழும் அரக்குமாளிகையையும் சமயம் பார்த்துத் தீக்கிரையாக்குதற்குத் திருதராட்டிரன் முதலியோரால் நியமித்திருந்த புரோசனன் என்னும் கெடுமந்திரியும் பாண்டவர்களுடன் புறப்பட்டுச்சென்றிருந்தான். அரக்குமாளிகையை அடைந்த பாண்டவர்கள் அம்மாளிகையின் அமைப்பை ஊன்றிப் பார்த்து, 'இம்மாளிகை ஏதோ ஓர் விரகினுற் செய்யப் பெற்றுள்ளது' என்று அறிந்துகொண்டார்கள். அதனுல் தங்களுடன் உறையும் புரோசனனை நம்பாது அவனுல் அளிக்கப்படும் உண்டி, உடை, அணி முதலியவற்றை ஆராய்ந்தே உண்டும் அணிந்தும் வந்தார்கள். பகலெல்லாம் வேட்டையாடியும் இரவெல்லாம் நித்திரையின்றி விழித்தும் புரோசனனைப் பிரியவிடாதும் வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு இவர்கள் அரக்குமாளிகையில் வாழ்ந்து வர, அஸ்தினபுரத்திலுள்ள விதுரன், முன்பு அரக்கு மாளிகை கட்டப்பட்ட நாளில் தன்னுல் அனுப்பப்பட்டுப் பாண்டவர்கள் ஆபத்துக் காலத்தில் அம்மாளிகையினின்றும் தப்பித்துப் போவதற்குச் சுரங்கம் அமைத்து வைத்தவனுகிய தபதியை அழைத்துப் பாண்டவர்களிடஞ் சென்று அவர்கட்கு அரக்குமாளிகையின் இரகசியங்களையெல்லாம் விளக்கமாகத் தெரிவித்து வரும்படியாக அனுப்பினுர். அவனும் வாரணாவதம் சென்று, பாண்டவர்களைக் கண்டான். கண்டவன் பீமனை மாத்திரம் தனியாக ஓரிடத்திற்கு அழைத்துப்போய் அரக்கு மாளிகையைத் துரியோதனனுகியோர்

வஞ்சகக் கருத்தோடு புரோசனனைக் கொண்டு கட்டி முடித்திருக்கும் இரகசியத்தையும், அம் மாளிகை கட்டிய காலத்தில் தான், ஒருவரு மறியாவண்ணம் விதுரன் ஏவலால் சுரங்கம் அமைத்து வைத்திருப்பதையும் தெரிவித்து, "அச்சுரங்கம் கானகம் வரை சென்று முடியும்படிசெய்து, வைத்திருக்கிறேன்; அச்சுரங்கத்தை ஒருவரும் தெரிந்து கொள்ளாயலிருத்தற்கு ஒரு பெரிய தூணையும் அதன்மேல் நாட்டி மறைத்து வைத்துள்ளேன்; அதனை உன்னால் மட்டுமே பிடுங்க முடியும்; ஆதலால் உங்களுக்கு ஆபத்துற்ற காலத்தில் தூணைப் பிடுங்கி அவ்வழியாகப் புகுந்து, காட்டுக்குட் சென்று தப்பித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிமுடித்தான். இவற்றையெல்லாம் கேட்ட பீமன், அவன் செய்த நன்றியை வியந்து, அந்நன்றியறிதலுக் கறிகுறியாக மிகுந்த திரவியங்களை அவனுக்குக் கொடுத்து, முகமனுரைத்து அனுப்பிவிட்டு அன்று முதல் 'புரோசனன் என்னும் தீ மந்திரி இம்மாளிகையில் என்று தீக்கொளுவுவானோ?' என்று அதனையே கருத்தாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

சில நாள் கழிந்ததும் பீமன் 'புரோசனன் இம் மாளிகையில் தீ இடுவதை நாம் குறிகொண்டு பார்த்துக் கொண்டிருப்பதை விட, நாமே அவனுக்குமுன் ஆபத்துக்கிடமாயுள்ள இம்மாளிகையை அக்கினிக்கிரையாக்கி விடுவது நலம்' என்று சிந்தித்தான். அதன்மேல் ஒரு நாள் புரோசனனை அரசியற் காரியங்களைப்பற்றி உசாவுதற்கு அழைப்பான்போல் அழைத்து, நீண்ட நேரம் அவனோடு பேசிக்கொண்டிருந்து, அவனை அவ்விடத்திலேயே துயிலும்படி

செய்து, சகோதரர்களோடு தானும் தூங்குபவன் போல் காட்டி விழித்துக்கொண்டே யிருந்தான். புரோசனன் அயர்ந்து நித்திரை போகும் சமயம் பார்த்துப் பீமன், அரக்குமாளிகையைத் தன் தந்தை தோழனாகிய அக்கினிக்குக் கொடுத்துவிடக் கருதி, நடு நிசியில் அரக்கு மாளிகையின் வாயிலிலும், நாற்புறங்களிலும் தீயைக் கொளுத்தி விட்டுச் சுரங்கத்தை மறைத்திருந்த தூணைப்பிடுங்கித்தள்ளி விட்டுத் தாயையும், சகோதரர்களையும் தோளிலும் முதுகிலும் கைகளிலும் தூக்கிக்கொண்டு, விரைந்து சுரங்கத்திற் புகுந்து, வாயு வேகம் மனோ வேகமாய் வனத்தையடைந்து மரங்களெல்லாம் தான் செல்லும் வேகத்தினால் முறிந்து வீழும்படி அதிவேகமாகச் சென்றான். அரக்கு மாளிகையை, அக்கினி இடி யிடித்ததுபோல் வெடிபடச் சிரித்தெழுந்து, எரித்துச் சாம்பராக்கினான். ஊரினர் எல்லாம் அது தெரிந்து, "அந்தோ! தம்பியின் பிள்ளைகள் என்பதையும் பாராமல் அவர்களை வஞ்சனையால் கொன்ற திருதராட்டிரனது கன்னெஞ்சை என்னென்று கூறுவது? அவனது கண்போல புந்தியும் குருடாயிற்றே! ஆ! ஆ! பாண்டவர்கள் எரிந்தார்களே!" என்று பலவாறு புலம்பி அக்கினி பற்றி யெரியும் அரக்கு மாளிகையின் நாற்புறத்திலும் சுற்றிச் சுற்றி ஓடிவந்தார்கள்.

வனத்தை அடைந்த பாண்டவர்கள் சிறிது தூரஞ் சென்றதும் கங்கையாற்றின் கரையைச் சேர்ந்தார்கள். அரக்குமாளிகையினின்றும் தப்பித்து வரும் பாண்டவர்

களைக் கங்கையாற்றில் கடத்துவதற்கு விதுரர் முன்னரே ஒரு தூதுவனைக் கப்பலுடன் கங்கைக் கரையில் இருக்கும்படி செய்திருந்தார். பாண்டவர்கள் கங்கையாற்றை அடைந்ததும் அத்தூதுவன் வந்து அவர்களைக் கப்பலேற்றி அக்கரை சேர்த்தான். அதன்மேல் பாண்டவர்கள் தாயுடன் தென் திசையை நோக்கி அதிவேகமாகப் புறப்பட்டுச் சென்றார்கள்.

அரக்கு மாளிகை எரியும்போது 'பாண்டவர்கள் எரிந்தார்களே' யென்று வருந்தி நின்ற நகரத்து ஜனங்களெல்லாம் சூரியோதயமானவுடன் எரிந்துகொண்டிருக்கும் மாளிகையைத் தம் கண்ணீராலும், தண்ணீராலும் அவித்துப் பாண்டவர்களுடைய உடலைத் தேடினார்கள். பாண்டவர்கள் இம் மாளிகையில் வசிக்குங் காலத்தில் தேனில் விஷத்தைக் கலந்து கொடுத்துப் பாண்டவர்களைக் கொல்லும்படி துரியோதனனால் அனுப்பப்பட்டு மாளிகையின் ஒருபுறத்திலிருந்த ஒரு வேடச்சியும், அவளது மக்கள் ஐவரும் அன்று அரக்கு மாளிகையின் நெருப்பால் எரிந்து கரிந்து கிடந்தார்கள். பாண்டவர்களைத் தேடிய ஜனங்கள், இந்த அறுவரதுஎரிந்த உடலைக் கண்டமாத்திரத்தில் 'குந்தியும் பாண்டவர்களுமே இங்ஙனம் எரிந்து கிடக்கின்றவர்கள்' என்று நிச்சயித்து அளவிறந்த துக்கமடைந்தார்கள். உடனே அவர்கள், "பாண்டவர்கள் தம் தாயுடன் அரக்கு மாளிகையில் அக்கினியில் மாண்டுபோனார்கள்" என்று அஸ்தினபுரத்திலிருக்கும் திருதராட்டிரனுக்குச் செய்தியனுப்பினார்கள். அதனைத் திருதராட்டிரனும் துரியோதனனாதி

யோரும் தெரிந்து "இனிப் புவி முழுதும் நமதேயாகும்" என்று மனதுட்கருதி, ஆழமான குளம், கோடை வெயிலால் மேலே வெம்மையையும் உள்ளே தண்மையையும் கொண்டிருப்பதுபோல் திருதராட்டிரனும் அவனது புத்திரர்களும் பாண்டவர்கள் பிரிவுக்கு மிக வருந்துவது போற் பாசாங்கு செய்து, தாங்கள்செய்த சூழ்ச்சி நற்பயனளித்ததே என்று உள்ளுக்குள் அளவிலா ஆனந்தமுற்றிருந்தனர்.

"பொன்னலங்கொள மெழுகினல் ஆலயம் புனைந்து
துன்னு வெங்கதைப் படைமருச் சுதனையே சுடுவான்
என்ன ஆண்மைகொல் எண்ணினன் எண்ணினும் சுடுமோ
வன்னி தன்பெயர் மருச்சகன் என்பதும் மறந்தே"

பின்பு திருதராட்டிரன் "பாண்டவர்கள் தம் தாயுடன் இறந்துபோனதினல் இன்றுதான் என் தம்பி பாண்டு முடிவாக இறந்தவனானன்; வாரணவத நகரத்துக்குப் பரிவாரங்களையும் பெரியோர்களையும் அனுப்பி ராஜபுத்திரியாகிய குந்தி தேவியையும், பாண்டவர்களையும் ராஜ மரியாதையோடு அடக்கஞ் செய்யவேண்டும்; என் வம்சத்தை விருத்தி பண்ணுதற்கிருந்தவர்களாகிய பாண்டவர்கள் அந்தோ! எரிந்துபோனர்கள்; அவர்களுக்கு எவ்வளவு தனங்களினல் என்னென்ன சடங்குகளைச் செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம் செய்யவேண்டும்" என்று சொல்லித் தான் மிக்க துக்கமுற்றதுபோல் நடித்தான். அப்பால் திருதராட்டிரனும் அவனது புத்திரர்களும் ஆபரணங்களையும் உத்தரீயம் தலைப்பாகைகளையும் களைந்தெறிந்துவிட்டு ஒற்றை வஸ்திரத்துடன் சுற்றத்தார் சூழக் கங்கைக் கரைக்குச் சென்று ஜலதர்ப்பணம் செய்தார்கள். அப்போது சுற்

றத்தாருள் சிலர் உண்மையாகவே பாண்டவரது பிரிவாற் ருது புலம்பி அழுதார்கள். விதுரர் மாத்திரம் விசனமுற் ருரில்லே. எனினும் துரியோதனனுதியோர் சந்தேகப்படாம லிருத்தற்குத் தாமும் விசனமுற்றதுபோல் பாவனைசெய்து, துரியோதனுதியோர் துர்ப்புத்தியை வெறுத்துப் 'பாண்ட வர்கள் இதற்குள் எவ்வளவு தூரம் சென்றிருப்பார்களோ' என்று பாண்டவர்களைப் பற்றிய சிந்தனையாகவே யிருந் தார். பீஷ்மர், பாண்டவர்களும் குந்தியும் இறந்தது உண் மையென்றே கருதிப் புலம்பி மிக நைந்தார். அப்போது விதுரர் அவரை அணுகி, இரகசியமாகப் பாண்டவர்கள் அரக்கு மாளிகையினின்றும் தப்பிப் பிழைத்த வரலாற்றை விளக்கிச் சொன்னுர். அதனைக்கேட்டதும் அவர் துக்கம் நீங்கி அமைதியுற்றிருந்தார்.

திருதராட்டிரனும் துரியோதனன் முதலியோரும் கிரி யைகளை முடித்துவிட்டு நகரத்துட் சென்று "இடையூருயி ருந்த பாண்டவர்கள் இன்ருேடு இறந்தொழிந்தனர்; இனி இவ்விராஜ்ய முழுதும் எம்முடையதே" என்று நினைத்து மகிழ்ந்திருந்தனர். விதுரரும், பீஷ்மரும "தீயோர்கள் செய்த தீச்செயலினின்றும் பாண்டவர்கள் தப்பி உய்ந்தது எம் தவப்பயனே" என்று உவந்திருந்தனர். நகரத்து மாந் தருட் சில அறிவுடைய பெரியோர் "அசகாய சூரர்களான பாண்டவர்கள் கேவலம் அரக்கு மாளிகைத் தீயினுலே அழிந்து, கூற்றுவன் கைப்பட்டனர் என்னும் கூற்றுச் சிறிதும் பொருந்தாக் கூற்ருகவே தோன்றுகிறது" என்று

சொல்லித் தேறியிருந்தனர். சாதாரண ஜனங்கள் யாவரும் இச்செய்தியை நம்பி வருந்திக் கொண்டிருந்தார்கள்.

வனத்திற் புகுந்த பீமன், தன் தாயை முதுகிற் சுமந்தபடியே சகோதரர்களுடன் சண்டமாருதக்காற்றுப் போற் கடுகி நடந்தான். அவ்வேகத்தால் மரங்களும், செடி கொடிகளும் சாய்ந்து விழுந்தன. பீமன் சென்ற விரைவினுல் அவனோடு தொடர்ந்து செல்ல முடியாமல் பாண்டவர்கட்கு மூர்ச்சை உண்டாகி விட்டது. சூரியனும் மேற்றிசைக் கடலுள் மூழ்கி விட்டான். அவ்வளவில் பீமன், வனத்திலுள்ள ஓர் ஆலமரத்தினடியில் தாயார், சகோதரர்களை அமரும்படி செய்து, அருகிலிருந்த பொய்கைக்குச் சென்று தாமரை இலைகளில் தண்ணீர் மொண்டு கொண்டு வந்தான். அதற்குள் மரத்தடியிலிருந்தவர்கள் வழிநடந்த அயர்ச்சியினுல் தரையில் படுத்து நித்திரை போயினர். பஞ்சணையில் படுத்து உறங்குதற்குரிய அவர்கள் தரையையே சயனமாகக் கொண்டு உறங்குவதைக்கண்ட பீமன், பலவாறு கவன்று புலம்பி அவர்களைக் கண்ணிமையாது பார்த்துக் காத்துக் கொண்டிருந்தான்.

## இடிம்பன் வதம்.

இவ்வண்ணமாக இவர்கள் இங்கிருக்குங்கால் சமீபத்திலுள்ள ஓர் ஆச்சா மரத்தில் ஓர் அரக்கன் ஏறிக்கொண்டிருந்தான். அவன் மனிதர்களைக் கண்டால் ஒரே பிடியாய்ப் பிடித்துத் தரையில் புடைத்துத் தின்று விடுவான்; மிகுந்த பலமுள்ளவன்; காளமேகம் போல் இருண்ட நிறமுடையவன்; செக்கர்வானம்போற் சிவந்த தலைமயிரையுடையவன். அவன் நடந்துவந்தால் அவன் வருமுன் அவன் தொந்தி

தரையை உந்தி முந்தி வரும்; அத்தொந்தி வயிற்றில் புகுந்த உயிர்களை எண்ணுவதென்றால் அவனைப் படைத்த அயனுக்கும் ஆகாது; கழுத்து, பருத்த மரத்தின் தூர்போல் உரத்திருக்கும்; காது முறம்போல் விரிந்திருக்கும்; மூக்கு மலைக்குகைபோலிருக்கும்; பற்கள் பிறைபோல் வளைந்து வெளியிற்றோன்றும். இத்தகைய அரக்கன் பெயர் இடிம்பன் என்பது. இவனுக்குப் பாண்டவர்களது வாசனை தட்டிவிட்டது. அதனை நன்றாக மோந்து பார்த்து, 'யாரோ நரர்கள் வந்திருக்கிறார்கள்' என்று நினைத்துத் தன்னுடைய சாட்டைத் தலைமயிரைக் கையால் தட்டிக் கொட்டாவி விட்டு, 'இன்று நமக்கு நல் விருந்து கிட்டிற்று' என்று மகிழ்ந்து தன் தங்கையான இடிம்பி என்பவளைநோக்கி, "தங்கையே! வெகு காலத்திற்குப் பின் இன்றுதான் எனக்கு நல்லுணவு கிடைத்திருக்கிறது; வாசனையை முகர்ந்துபார்க்கும்போதே என் வாய் ஊறுகிறது; எனது கூர்மையான எட்டுப் பற்களையும் நெடுநாளைக்குப் பின் இன்றுதான் நல்ல தசையில் அழுந்தப் பதிக்கப்போகிறேன்; வந்திருக்கும் நரர்களுடைய கழுத்தைப் பிடித்துக் கடித்துச் சூடான புதிய இரத்தத்தை உறிஞ்சப்போகிறேன்; அதோ மரத்தடியில் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களிடம் விரைந்து செல்; யார் என்று அறி; அவர்களைத் தாழ்க்காது என்னிடம் பிடித்துக் கொண்டு வா; அவர்கள் மாமிசத்தை நாமிருவரும் நன்றாய் வயிறாரப் புசித்து ஏப்பமிட்டுத் தாளம்போட்டுக் கூத்தாடுவோம்; தாமதிக்காதே; விரைவாகச் சென்று நரப்பூச்சிகளைப் பிடித்துவா" என்று கட்டளையிட்டான். இடிம்பி உடனே குதித்தோடிப் பாண்டவர்கள் படுத்திருக்கும் இடத்தை அடைந்தாள். தூங்குகின்ற பாண்டவர்கள்

நால்வரையும் குந்தி தேவியையும் விழித்துக்கொண்டிருக்கும் பீமனையும் கண்டாள். சிங்கம்போற் கம்பீரமான தோற்றத்தோடு பருத்துயர்ந்து, ஆஜானுபாகுவாய்த் தோன்றும் பீமனைக் கண்டமாத்திரத்தில் இடிம்பி, வந்த காரியத்தை மறந்து அவன்மேல் காதல் கூர்ந்தாள். "இவனே எனக்குற்ற நாயகன்" என்றாள்; "என் சகோதரன் கட்டளையை இனி நான் செய்யேன்; செய்யேன்; சகோதர வாஞ்சையினும் கணவன் காதலே சிறந்தது" எனக் கருதினாள். இவர்களைக்கொல்வதினால் ஒரு நாளை இன்பம்; இவர்களுள் இவனை நாயகனாகப் பெறுவதினால் பலநாளை யின்பம்" என்று சிந்தித்தாள். இவ்வாறு சிந்தித்து நின்ற இடிம்பி 'இந்த இராக்கத வடிவோடு சென்றால் இவன் நம்மை விரும்பான்' என்று நினைத்து ஓர் அழகிற் சிறந்த மானிடப் பெண் வடிவம் எடுத்துக்கொண்டு, மெல்ல மெல்லப் பீமனை அணுகினாள். இவ்விதம் ஓர் பூங்கொடி ஒசிந்து நடை கற்பதுபோல் நடந்து வருகின்ற அவளைப் பீமன் கண்டு, "இவ்வனத்தில் அழகு நிறைந்த இப் பெண்மணி தனித்து வருகின்றாளே! இவள் யாரோ?" என்று ஐயுற்று அவளது அழகை வியந்து நின்றான்.

பீமனை நெருங்கிய இடிம்பி, நாணத்தால் தலைகுனிந்து, புன்முறுவல் பூத்து, "புருஷோத்தமரே! நீர் யார்? எங்கிருந்து வந்திருக்கிறீர்? இவ்விடத்தில் நித்திரை போகின்ற தேவர்களென்று சொல்லத்தகும் இவர்கள் யார்? மடந்தைப் பருவமுடையவளாய்ப் படுத்திருக்கின்ற இப்பெண்களிற் சிறந்தவள் உனக்கு எம்முறையினள்? இது கொடிய இராக்கதர்கள் வாசம் செய்யும் இடமென்று நீங்

கள் அறியீர்களோ? இங்குப் பாவ சித்தமுள்ள இடிம்பன் என்னும் என் தமையன் ஒருவன் வசிக்கிறான்; அவன் உங்கள் வருகையைத் தெரிந்துகொண்டு உங்களைத் தின்னுவதற்குக் கொண்டு வரும்படி என்னை அனுப்பி யிருக்கிறான்; அவன் ஏவலால் அக்காரியத்திற்கு வந்த நான், உம்மைக்கண்டதும் உம்மையன்றி எனக்கு வேறு கணவன் இல்லையென்று நிச்சயித்து விட்டேன்; நியாயம் தெரிந்த நீர் ஓர் பெண்ணின் விருப்பத்தை நிறைவேற்றவேண்டுவது முறையாகும்; இதனில் நீர் தவறிவிடாது நடந்து கொள்ளும்; என்னை நீர் அங்கீகரியாவிடில் இவ்விடத்தில் உம் முன்னிலையிலேயே என்னுயிரை நான்மாய்த்துக்கொள்வது திண்ணம்; இப்போது நீங்கள் என் தமையனை விட்டுத் தப்புவது அரிதாகும். எனினும் நான் அவ்வாபத்தினின்றும் உங்களைக் காப்பேன். என்னை மணந்து கொள்ளும்; நீர் சிறந்த இன்பத்தைப் பெறுவீர்" என்றெல்லாம் விரிவுரையாகப் பேசி நின்றாள்.

இவற்றையெல்லாம் செவியுற்ற பீமன், அவளை இராக்ஷசியென்று தெரிந்துகொண்டு, அவளுக்குச் சில மறுமொழி கொடுக்கத் தொடங்கினான். "ராக்ஷசியே என்ன சொல்லினை? உன் சொற்கள் பெரிதும் தகுதியற்றனவாகவிருக்கின்றன; நான் சொல்வதைக் கேள்; எனது தமையனே இன்னும் ஒரு பெண்ணை மணந்துகொள்ளவில்லை; ஓர் குடியில் அண்ணன் விவாகம் செய்யாமலிருக்கத் தம்பி முன்பு மணமுடித்தல் முறையன்று. அஃதன்றியும் தாயையும் சகோதரர்களையும் இந்நிலையில் விட்டுவிட்டு எவன் மனைவி இன்பமே பெரிதெனக்கருதி மனைவியைப் பின்

தொடர்பவனிருக்கின்றான். எனக்கு விருப்பமில்லாத இம்மொழிகளை நீ பேசாதே; இப்போதே இவ்விடத்தினின்றும் நீங்கிப்போய்விடு." என்று சொன்னான். அதற்கு இடிம்பி, "வீரரே! உம் தாயாருடன் சகோதரர்களையும் எழுப்பும்; வேறிடம் கொண்டுபோய் உங்களைக் காப்பாற்றுகின்றேன்; சிறிது நேரம் தாழ்த்தால் இடிம்பன் வந்துவிடுவான்" என்றாள். பீமன் அதுகேட்டு, "இடிம்பியே களைப்பினால் நல்ல நித்திரை செய்கிறவர்களை எழுப்புதல் கூடாது; நீ இவ்விடத்தில் நிற்கவேண்டாம்; வேண்டுமானால் உன் தமையனை இங்கு அனுப்பு; முடிந்தால் அவன் எங்களை உணவாகக் கொள்ளட்டும்" என்று சொன்னான்.

இங்ஙனம் இவர்களிருவரும் உரையாடிக் கொண்டிருக்குங்கால், இடிம்பன், 'இடிம்பி போய் நீண்டநேரமாயிற்றே இன்னும் வாராதகாரணமென்ன?' என்று கோபங்கொண்டு, பாண்டவர்களும் இடிம்பியும் இருக்கும் இடத்திற்கு விரைந்து வந்தான். அப்போது இடிம்பி, தன் தமையன் கோபத்துடன் வருவதைப் பார்த்து, பீமனை நோக்கி "வீரரே, நரபக்ஷணியாகிய இடிம்பன் இதோ வந்துவிட்டான்; இனி நீங்கள் அவனை விட்டுத் தப்பிப்பிழைப்பதரிது; உம் சகோதரர்களும் தாயும் இரையானாலும் உம்மை மட்டுமாவது தப்புவிக்கின்றேன்; என் ஒக்கலில் உட்கார்ந்துகொள்ளும்; தூக்கிக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ப் போய்விடுகிறேன்" என்று சொன்னாள். பீமன், "பேதையே! உன்னால் நான் காப்பாற்றப்பட வேண்டியதில்லை; அவன் இங்கேவரட்டும்; ஓரே அறையில் அவனை யமலோகத்துக்கு அனுப்பிவிடுகின்றேன்" என்று சொல்லி இடிம்பனோடு

பொருதற்குச் சித்தமானான். அதிவேகமாய் ஓடிவந்த இடிம்பன், தன் தங்கை ஓர் அழகிய நங்கைவேடத்தோடு நிற்பதைக்கண்டு, அவள் கருத்தை அறிந்துகொண்டு வெகுண்டு, "பேதையே! நீ வந்த காரியமென்ன? அதனை நீ மறந்து இந்த மனிதப்பதர்களைக் காதலித்து நிற்கின்றாய்; இதனை நான் அறிந்துகொண்டேன்; நம் குலத்துக்கு அடாப்பழியைத் தேடத்தொடங்கினையா? நன்றாயிருக்கிறது! புலிப் பிணவு மான்கலையை விரும்புவதும் உண்டோ? இராக்கத குலப் பெண்ணாகிய நீ இம்மானிடப் பதர்களையா விரும்புவது? குலத்தைக்கெடுத்த உன்னையும் இவர்களுடன் சேர்த்துக் கொன்று தின்கின்றேன்" என்று இடிபோல முழங்கிப் பற்களைக் கடித்து நாவை அதுக்கிப் பாண்டவர்களைக் கொல்லுதற்கு நெருங்கினான். பீமன் உடனே அவனை நித்திரையிலிருப்போரிடம் அணுகவிடாது ஓடி எதிர்த்தான். இருவரும் பல சபதமொழிகள்பகர்ந்து, ஒட்டித் தோள்கொட்டி இறுக கையாற்கட்டி மற்போர் தொடங்கினார்கள். பின்பு மரங்களையும் மலைகளையும் பிடுங்கி ஒருவரையொருவர் மோதினர். இங்ஙனம் இருவரும் வெல்லலும் தோற்றலுமின்றி நெடுநேரம் சமர் புரிந்தனர். இச்சமயத்தில் நித்திரையிலிருந்த சகோதரர்களும் தாயாரும் விழித்து நித்திரை தெளிந் தெழுந்தார்கள். எழுந்தவர்களுள் அர்ச்சுனன் பீமனைப் பார்த்து "அண்ணா, இந்த அற்பனைக் கொல்வதற்கு ஏன் இவ்வளவு காலதாமிதம்? சூரியோதயமாகப் போகின்றது; சீக்கிரம் இவனை முடித்து விடுங்கள்; நாம் செல்லவேண்டும்; உங்கட்குக் களைப்பு மேலிட்டிருந்தால் என்னிடம் விடுங்கள்" என்றான். அவ்வளவில் பீமன், யுகாந்த காலத்துச் சண்டமாருதம் போல் பலமிகுந்து,

இடிம்பனைத்தாக்கிப் பிடித்துப் பலமுறை சுழற்றிப் பூமியில் அறைந்தான். அறையவும் அவன் ஓர் மலை உருள்வது போல் உருண்டு புரண்டு உயிர் துறந்தான்.

அப்பால் சிறிது நேரஞ் சென்ற பின்னர் சூரியன், இடிம்பனது உடலை அக்காட்டிலிருந்து வாழும் பருந்து முதலிய பிராணிகட்கு விருந்திடுவதற்கு எடுத்த விளக்குப் போல் உதயமானான். குந்தியும், தருமன் முதலிய சகோதரர்களும் "பீமன் எதிர்காலத்தில் நம்பகைவர்களைக்களைந்து நமக்கு நல்வாழ்வளிப்பான்" என்று மகிழ்ந்து, அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள். இடிம்பியும் அவர்களை விடாது பின்பற்றித் தொடர்ந்து சென்றாள். இவ்வாறு தொடர்ந்து வரும் இடிம்பியையும் பீமன், கொல்லுதற்கு முற்பட்டான். அப்போது குந்திதேவியும் தருமனும் "பெண்கொலை புரிதல் பெரும்பாவம்" என்று கூறித் தடுத்தார்கள். அங்ஙனம் தன்னைப்பற்றி இரக்கமிருந்த இருவரையும் இடிம்பி அடிவணங்கி, குந்தியைப் பார்த்து "பெருந்தேவியே! உனது மக்களுள் இதோ நிற்கிற புருஷசிரேஷ்டனாகிய பீமனை நான் கணவனாக வரித்திருக்கிறேன்; இவனை நான் அடையாவிடில் எனது உயிரை உன்முன்னிலையிலேயே போக்கிக் கொள்வேன்; நீ கருணை கூர்ந்து என் கணவனாகிய இந்த உன்புத்திரனோடு சேர்த்துவை; என்னை இராக்கதப் பெண்ணென்று நினைக்கவேண்டாம்; உங்களுக்கு வேண்டிய அடித்தொண்டுகளையெல்லாம் ஆற்றிக்கொண்டிருப்பேன்; இந்த வனத்தைக் கடப்பதற்கும் உங்களுக்கு நல்ல உதவியாகவும் இருப்பேன்" என்று பலவாறு கூறிக் குந்தியைத் தொழுது நின்றாள்.

இவ்வாறு வருந்தி நிற்கும் இடிம்பியைக் கண்ட குந்தியும் தருமனும் பீமனுக்குப் பல நீதிகளை எடுத்துமொழிந்து

ஓர் புத்திரன் பிறக்கும் வரை இடிம்பியை மனைவியாகக் கொள்" என்று வேண்டினர். பீமனும் அதற்கிசைந்து இடிம்பியை மணந்தான். நியதி கழிந்ததும் இடிம்பியை அவளிருப்பிடம் அனுப்பி விட்டனர். இடிம்பி தன் வயிற்றிற் பிறந்த கடோற்கசனோடு தனது வாசஸ்தானம் போய்ச் சேர்ந்தாள்.

பாண்டவர்களும் தாயும் அவ்விடத்தை விட்டகன்று, சாலிகோத்திர மஹரிஷியின் ஆச்சிரமத்தை யடைந்தனர். அம்மஹரிஷியினால் அங்கு அவர்கள் நன்கு உபசரிக்கப்பட்டபின், முனிவரது கட்டளையின்படி அவர்கள், தங்களைப் பகைவர் அறியாதிருப்பதற்கு அந்தணர்களுக்குரிய வேடம் புனைந்து, வேதங்களையும் பல சாஸ்திரங்களையும் அவரிடை ஓதியுணர்ந்தார்கள். அங்கு சின்னாள் இவ்வாறு தங்கியிருந்து, பின்னர் அவர்கள் முனிவரிடம் விடைபெற்றுப் புறப்பட்டுப் பல காட்டுப் பிரதேசங்களைக் கடந்து சென்றுகொண்டிருந்தார்கள். இங்ஙனம் சென்று கொண்டிருக்கும் போது இடைவழியில் தங்கள் குலமுதல்வராகிய வியாசமஹா முனிவரைக்கண்டார்கள். கண்ட அவர்கள் முனிவரைத்தொழுது, தங்கள் கவலை யெல்லாம் நீங்கப் பெற்றவர்களாய் மகிழ்ந்து நின்றார்கள். வியாசர் அவர்களை வாழ்த்தி, "குருகுலசிகாமணிகளே! உங்களைக்கண்டு உங்களுக்குத்தேறுதல் கூறவே இங்கு இப்போது நான் வந்தேன்; இனி நீங்கள் வருந்தவேண்டாம்; நீங்கள் விரைவில் பல நலங்களை அடையப் போகிறீர்கள்; இவ்வனத்துக்குச் சமீபத்தில் வேத்திரகீய மென்றும் ஏகசக்கிர மென்றும் சொல்லப் படுகின்ற ஓர் ஊர் இருக்கிறது; நீங்கள் அவ்வூரையடைந்து சில நாள் என்

வரவை எதிர்பார்த்து வாழ்ந்திருங்கள்" என்று சொல்லி, அவர்களை வேத்திரகீயத்துக்கு அழைத்து வந்து, ஓர் அந்தணன் வீட்டில் குடியிருக்கும்படி செய்து விட்டுத் தாம் செல்லுமிடத்துக்குச் சென்றார்.

பாண்டவர்கள் தங்கி யிருந்த வீட்டிற்குரிய பிராமணன், அவர்கள்மீது மிகுந்த அன்பு பூண்டு உபசரித்து வந்தான். பீமன் முதலிய இளைஞர் நால்வரும், தருமனையும் குந்தியையும் வீட்டில்வைத்து விட்டுத் தாங்கள் அந்தணர்களது இல்லங்கள் தோறுஞ்சென்று பிச்சையெடுத்து வந்து தாயாரையும் அண்ணனையும் உண்பித்து வந்தனர். பிரமசாரிகளாய்ப் பிச்சை யெடுக்கும் அவர்களைக் கண்ட நகரத்து ஜனங்கள், "ராஜபோக்கியங்களை அநுபவிப்பதற்குரிய சுகுமாரமான தேகத்தையும் அரசர்கட்குரிய அங்க இலக்கணங்களையு முடைய இவர்கள் உண்மையில் பிராமணர்களல்லர்; இவர்கள் ஏதோ ஓர்காரியார்த்தமாக இந்நிலையை யுடையவர்களாகக் காணப்படுகின்றார்கள்" என்று சொல்லிச் சந்தேகித்தனர். நகரத்துப் பெண்டிர்கள் இனிய பக்ஷணங்களையும் உணவுகளையும் பாண்டவர்களது பிச்சைப் பாத்திரத்தில் அன்போடு இட்டு நிரப்பினார்கள். குந்திதேவி தன் மக்கள் பிச்சை யெடுத்துத் திரும்பி வரும்வரை விசனத்தினால் தரையைக் கையால் கீறிக் கண்ணீர்விட்டுக் கொண்டிருப்பாள். அவர்கள்வந்ததும் அவர்கள் கொண்டுவந்த உணவை இரண்டாகப் பகிர்ந்து, ஒருபாதியைப் பீமனுக்குக் கொடுத்து விட்டு, ஒருபாதியை மற்றப்பிள்ளைகளும் தானுமாக உண்பாள். இப்படிப் பகிர்ந்து கொடுக்கும் பாதி உண

வும், பீமனுக்குச் சுவாலித்தெரியும் பெருநெருப்பில் வீழ்ந்த ஒருசொட்டு நெய்போல் சிறிதும் போதாமலிருந்தது. அதனால் அவன் மிகுந்த உணவைச் சேகரிப்பதற்கு ஒருபெரிய பாண்டம் பெறக்கருதி, ஒரு குயவனைச் சிநேகம் பிடித்து, அவனுக்கு ஆயிரக்கணக்கான மண்சுமைகளைச் சுமந்தும், அவன் ஏவும் பணிகளைச் செய்தும் குயவனை மகிழ்வித்து அவனிடமிருந்து மிகப்பெரிய மிடா ஒன்றை நன்கொடையாகப் பெற்றான். பின்பு அதனை அவன் எடுத்துக் கொண்டு வீடுகள் தோறும் வருங்கால் கண்ட பெண்கள் அனைவரும், நகைத்துப்பரிகசித்து அப்பெருமிடாவில் சித்திரான்னங்களையும் பக்ஷணங்களையும் மிகுதியாகப் பெய்தார்கள். அவற்றை உண்டும் பீமனுக்கு அரைவயிறும் நிரம்பாமலேயிருந்தது.

இவ்வாறு இவர்கள் வாழ்ந்துவரும் நாளில் ஒரு சமயம் தருமனும் தம்பிகளும் வெளியே போயிருக்கப் பீமன் மாத்திரம் தன் தாயுடன் வீட்டிலிருந்தான். அப்போது பிராமணனது வீட்டினுள் துக்ககரமான ஓர் பேரொலி கேட்டது. அதனைச் செவியுற்ற குந்தி, பீமனை நோக்கி, “துக்கமயமாக இப்போது கேட்கிற அழுகையொலி நமக்கு உறைவிட முதலிய உதவிய பிராமணனது குடும்பத்துக்கு ஏதோ ஓர் ஆபத்துச் சம்பவித்திருக்கிறதென்பதைப் புலப்படுத்துகின்றது. நமக்குச் சிறந்த உதவி புரிந்த இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இவ்வாபத்து நம்மால் நீக்கக்கூடுவதாயிருந்தால், நாம் அதனை முயன்று உடனே நீக்கவேண்டும்; நீக்காவிடில் நாம் செய்நன்றி கொன்ற பாவிகளாவோம்; உலகத்தில் எல்லா அறச்செயல்

களிலும் செய்நன்றி போற்றுதலைப்போல் சிறந்ததோர் செயலுமில்லை; அந்நன்றியை மறத்தலினும் மிக்க பாவமுமில்லை.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு'

என்பது அறநூல் விதியாகும்; ஆதலான் இவ்வமையத்தில் இவர்களுக்குற்றதை வினவியறிந்து நாம் நம்மாலியன்றதைச் செய்தே தீரவேண்டும்''என்று இரக்கமிகுதியாற் கூறினாள். பீமன் அதனைக் கேட்டு, ''தாயே இப்பிராமணனுக்கு எவ்வித இடுக்கண் யாரால் நேர்ந்ததென்பதை மாத்திரம் விசாரித்துச்சொல். அது எவ்வளவு அசாத்தியமானதெனினும் ஒரு நொடியில் நீக்கிவிடுகிறேன்'' என்று பெருமிதத்தோடு பேசினான்.

இவ்வாறு இவர்கள் இருவரும் சம்பாஷித்துக்கொண்டிருக்குங்கால், மறுபடியும் வீட்டினுள் அழுகையொலி கேட்டது. உடனே குந்தி விரைவாக வீட்டினுள் சென்றாள். அவ்வமையம், பிராமணன் தன் மனைவியைப் பார்த்து, ''பெண்ணே, எது க்ஷேமமான இடமோ அங்கே போய் விடலாமென்று முன்னமே உனக்குச் சொன்னேனே; அதனை நீ கேட்டாயில்லை; இப்போதோ கடக்க முடியாத ஆபத்து நேரிட்டுவிட்டது: இனி என் செய்வது? ஊாலுக்குள் அகப்பட்டுக்கொண்டு உலக்கைக்குப் பயப்படுவதால் ஆவதென்ன? ஆபத்துக்கிடமான இந்த நகரத்தை விட்டு விடலாமென்ற காலத்தில் நீ, 'இது பிறந்த ஊர், வளர்ந்த ஊர், தாய் தந்தை சுற்றத்தாரையெல்லாம் விட்டு எப்படிப்

பிரிகிறது' என்றெல்லாம் சொல்லிப் புறப்படமாட்டேனென்றாய்; இப்போது எனக்கோ என் மகனுக்கோ மரணம் வந்திருக்கிறது, நம்மகனுக்கு அம்மரணம் வராதிருத்தற்கு நானே அம்மரணத்துக்கு இலக்காவேன்; பெண்களுக்குரிய குணநலம் நிரம்பிய உன்னை இப்போது இழப்பதென்றாலோ அது முடியாது. நமக்கு மகளும் ஒருத்தியே; அவளும் பிதிர்க்கடனாற்றுதற்குரிய தௌகித்திரர்களைப் பெறுதற்குரியவள்; அஃதன்றியும் அவள் அவளது மணவாளனுக்குச் சுதந்தரமானவளா; ஆகையால் அவளையும் இழக்க முடியாது; இவ்வாபத்துக்கீடாக நான் வேறு எந்தப்பந்துவையும் இழத்தல் முடியாது; கடைசியாக முன் துணிந்தபடியே என் ஆத்மாவையே தியாகம் செய்வேனென்றால் என் பிரிவினாலும் பாதுகாப்பாரின்மையாலும் நீங்கள் உயிர் வாழ்ந்திருக்க மாட்டீர்கள்; என் செய்வேன்! இறப்பதற்குத் துணியினும் அதிலும் சங்கடமிருக்கிறதே அந்தோ! இனிச் செய்வது என்ன" என்று மிக்க விசனத்தோடு சொல்லிப் புலம்பினான். அதற்கு அவளது மனைவியாகிய பார்ப்பனி, "பிராணநாயகரே! தாங்கள் வருந்துவது தகாது. தங்களைப் பிரிந்து நான் இருப்பதில் ஒரு சுகமுமில்லை; உலகத்தில் பிறந்தோரெல்லாம் இறந்தவர்களே; நானோ ஓர் மகனையும் மகளையும் பெற்று என் கடனை நிரப்பிவிட்டேன்; அப்பிள்ளைகளைக் காப்பதற்கு நீர் அவசியம் உயிரோடிருக்கவேண்டும்; நானே இப்போது வந்திருக்கும் ஆபத்துக்குப் பாத்திரமாகிறேன்; தம் உயிரையும்விட்டு நாயகர்களுக்கு நலம் செய்யவேண்டுவதே பெண்களுக்குரிய முக்கிய தர்மமாகும். அப்படிச் செய்வது பரலோகத்துக்குரிய கர்மமும், இவ்வுலகத்துக்குரிய புகழுமாகும்; உலகத்தில் கணவனையிழந்து

பெண்டிர்கள் ஜீவித்திருப்பதால் வரும் பழிப்பும் இன்னல்களும் எண்ணிறந்தன; அதனாலேயே

'காதலர் இறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது'
இன்னுயி ரீவர் ஈயாராயின்
நன்னீர்ப் பொய்கை நளியெரிபுகுவர்.' என்றான், ஓர்பத்தினிப் பெண்ணும். ஆகையால் தாங்கள் இல்லாத இவ்வுலகில் நான் உயிர் வாழ்ந்திரேன்; அந்தப் பாவியிடத்தில என்னையே அனுப்புங்கள்; நான் போனால் அந்தத் துன்மார்க்கன் ஸ்திரீ ஜாதியென்று ஒருவேளை என்னை விட்டுவிடவும் கூடும்; ஆடவரானால் அவனிடம் சென்றவர் மீள்வது அரிது." என்று பெருந்துக்கத்துடன் சொன்னாள். அதனைக் கேட்ட பார்ப்பனன், "பெண்ணே! ஆருயிரனைய உன்னை என் கண் முன்னர் எவ்வாறு இழக்கச் சகிப்பேன்" என்று சொல்லித் துக்கித்தான். இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அவர்களுடைய குமாரத்தி பெற்றோர்களை நோக்கி, "அம்மையே, அப்பாவே, ஏன் நீங்கள் அநாதைகள்போல் அழுது புலம்புகிறீர்கள்; சிறியாள் சொல்வதைச் சிறிது செவி கொடுத்துக் கேட்கவேண்டும்; பெருவெள்ளத்தைத் தெப்பத்தால் தாண்டுவதுபோல் இவ்வாபத்தை என்னாலேயே தாண்டுங்கள்; பெற்றோர்கள் பிள்ளைகளை விரும்புவது தங்கள் துன்பங்களைத் தாங்குவதற்காகவுந்தான்; பிள்ளைகள் பெற்றோர்க்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்வதற்கே இப்போது உங்களை வேண்டுகின்றேன். எனது அருமைத் தம்பியையேனும் உங்களில் ஒருவரையேனும் அரைக்கணமும் பிரிந்திருக்க முடியாது; நானே அத்துன்

பத்தைத் தாங்கவேண்டும்'' என்று பெற்ேறார் முன்னிலையில் சொல்லி நின்றாள். தாயும் தந்தையும் அவளைக் கட்டித் தழுவிக் கொண்டு அழுது புலம்பினார்கள். இப்படி இவர்கள் அழுது புலம்புவதைக் கண்ட அந்தணனது இளங்குமரன் மலர்ந்த கண்களுடன் மதுரமான மழலை மொழிகளினால் "அப்பா அழாதே! அம்மா, அழாதே! அக்காள், அழாதே!'' என்று சொல்லிக்கொண்டு அவர்கள் ஒவ்வொருவரிடமும்போனான். பின்பு அவன் ஆங்குக் கீழேகிடந்த ஒரு வைக்கோல் துரும்பை எடுத்துக் கொண்டு "மனிதரைத்தின்கின்ற அந்த ராக்ஷசனை இதனால் கொன்றுவிடுகிறேன். நீங்கள் பயப்படவேண்டாம்?'' என்று சத்தமிட்டுச் சொன்னான். இதனைக் கேட்கவும் பெருந்துக்கத்தில் மூழ்கிக் கண்ணீர்விட்டுக் கொண்டிருந்த அவர்கள் துக்கமெல்லாம் மாறி நகைக்கத் தொடங்கினார்கள். குந்திதேவி இங்ஙனம் இவர்கள் நகைப்பதைப் பார்த்து இதுவே இவர்களுடன் பேசுவதற்குத் தக்க சமய மென்று கருதி, பிராமணனை நோக்கி, "இந்தத் தாங்கமுடியாத துக்கம் எக்காரணத்தினால் உண்டானது? இதனை நன்றாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்; தெரிந்த பிறகு அதனைத் தீர்ப்பதற்கு முடியுமானால் தீர்க்கவும் செய்வேன்'' என்று சொல்லி வினவினாள்.

அதற்குப் பிராமணன், "தபோதனையே, நீ இச்சமயத்தில் பெரியோர்கட்கு இயற்கையான சொல்லைச் சொல்கின்றாய்; அதனை நீ சொல்ல வேண்டியதுதான். ஆனால் நாங்கள் கொண்டுள்ள இப்பெருந்துன்பத்தை மானிடராயுள்ளவரெவராலும் தீர்த்தற்கு முடியாது. ஆயினும் அதனை அறிந்துகொள்ள விரும்புகிறபடியால் சிறிது சொல்கிறேன்;

அன்பிற் சிறந்தவளே கேட்பாயாக. இந்த நகாத்துக்குச் சிறிது தூரத்தில் யமுனா நதியின் உற்பத்தி ஸ்தானத்தில் ஒரு குகை இருக்கின்றது; அதில் பகாசுரன் என்னும் ஓர் கொடிய அசுரன் வசிக்கிறான்; அவன் மனிதர்களை அடித்துத்தின்பதில் மிக்க விருப்புடையவன்; இந்த நகாத்துக்கு அரசனிருந்தும் அவ்வசுரனே அரசனாகவிருக்கின்றான்; அவன் ஆணையை எவராலும் கடக்க முடியாது; அவனது உடல் மாமிசத்தினாலேயே வளர்க்கப்பட்டிருக்கிறது; நினைத்த நினைத்த ரூபமெல்லாம் எடுக்கும்வன்மையுடையவன்; இந்த நகரம் அவனால் பிடிக்கப்பட்டு இன்றோடு பதின்மூன்று வருடங்களாகின்றன; அவன் நினைத்த போதெல்லாம் இந் நகரத்துட் புகுந்து இஷ்டப்படி ஆண், பெண், பாலர், விருத்தர் அனைவரையும் கொன்றும் தின்றும் செல்வான். அவன் அப்படித் திடீரென்று ஊரினுட் புகுந்து, பலரைக் கொல்வதைப் பொறாத இந்நகரத்தார்கள் பயந்து அசுரனோடு இவ்விஷயத்தில் ஓர் நியதி செய்து கொள்ள ஆலோசித்து அவனைக்கிட்டி "அசுரபதியே! நீர் உமக்கு உணவாக வேண்டியதற் கதிகமாகவும் அனாவசியமாகவும் எங்களைக் கொல்லவேண்டாம்; நாங்கள் ஒவ்வொரு வீட்டாரும் ஒவ்வொருநாளும் பலவகைக் கறிகளுடன் சேர்ந்த சிறந்த ஒரு வண்டிச் சோற்றை இரண்டு எருமைக் கடாக்களைப் பூட்டி ஒரு ஆளை ஓட்டி வரும்படி செய்கிறோம்; நீர் அச்சோற்றையும், எருமைகளையும் ஆளையும் உணவாக உண்டுகொள்ளும்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு அவ்வசுரன் உடன்பட்டுக்கொண்டான். அன்று முதல் உடன்படிக்கையின்படி தவறாது ஒவ்வொரு வீட்டாரும் ஒரு வண்டிச் சோற்றையும் தம் வீட்டு ஆட்களுள் ஒருவனை

யும் அனுப்பிவருகிறார்கள்; இந்த உடன்படிக்கையைத் தடுக்க எவரேனும் முற்பட்டால் அசுரன் அவர்களை அடியோடு நாசமாக்கி விடுகின்றான்; எங்களுக்கு ராஜனிருந்தும் அவன் வெறும் பொம்மை ராஜா வாகவே யிருக்கின்றான்; ஒருவன் சுகவாழ்க்கையை அடையவேண்டுமானால் தன் குடைக்கீழ் வாழுங் குடிகளுக்கு ஐவகையாலும் வருந்தீங்கு அணுகாவண்ணம் காக்கும் அரசனை முதலில் அடையவேண்டும்; அதன்பின் செல்வத்தையடையவேண்டும்; அதனால் புத்திரர்களையும் சுற்றத்தாரையும் காப்பாற்றவேண்டும்; முதலில் அடையவேண்டிய செங்கோல் வேந்தனை அடையப்பெறாத ஒருவனுக்குப் பின்னர்க் கூறிய இந்நலங்கள் எவ்வாறு உண்டாகப்போகின்றன? நான் இச்சமயத்தில் இத்தௌர்ப் பாக்கியத்திற்கு இருப்பிடமா யிருக்கின்றேன்; நாளைக்கு அசுரனுக்கு ஆட் பலியும் உணவும் அனுப்பவேண்டிய முறை என்னுடையதாகும்; இதற்கு எங்களுள் யாரேனும் ஒருவர் அவ்வாட்பலிக்கு ஆளாகவேண்டும்; எங்களுள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்திருக்கமுடியாது; எங்காவது ஓர் மனிதனை விலைக்கு வாங்கவேண்டுமானால் அதற்கு என்னகத்துப் பொருளில்லை; அந்த இராக்ஷசனால் உண்டாயிருக்கிற இவ்வாபத்தினின்றும் எங்களை விடுவித்துக் கொள்ள மார்க்கம் தெரியாமல் நாங்கள் இப்போது பெரிய துன்ப சாகரத்துள் மூழ்கியிருக்கின்றோம்; கடைசியாக ஒருவரையொருவர் பிரிந்திருக்க முடியாத நாங்கள் அனைவரும் ஒருங்கு சென்று, அசுரனுக்குப் பலியாகிவிடுகிறது என்று துணிந்துவிட்டோம்; இதனை அறிதற்கு நீ விரும்பியபடி.

யால் யான் விவரித்துச் சொன்னேன்" என்று சொல்லி வாளா இருந்தான்.

குந்திதேவி இவ்வாறு பிராமணன் உரைக்கக் கேட்டு, இரக்கம் மிகக்கொண்டு, அவனை நோக்கி, "பிராமணரே! நீர் வருந்தவேண்டாம்; இந்த இராக்ஷசனிடமிருந்து நீங்கள் தப்பிப்பிழைப்பதற்குரிய உபாயத்தை நான் தெரிந்திருக்கிறேன்; நீராவது உமது மனைவியாவது அந்த இராக்ஷசனிடம் போகவேண்டாம்; உமக்கு ஒரு புத்திரன் உளன்; பெண்ணும் ஒருத்தியே; எனக்கோ ஐந்து குமாரர்கள் இருக்கின்றனர்; அவர்களுள் ஒருவனை உமக்கீடாக அந்தக்கொடியவனுக்கு உணவைக் கொண்டுபோகும் ஆளாக அனுப்புகிறேன்; நீவிர் கவலவேண்டாம்" என்று சொன்னாள். பிராமணன், "அம்மையே, உனது அருட்குணத்தை மிகவும் பாராட்டுகின்றேன்; ஆனால் உனது கருத்துக்கு நான் இசைவது கூடாது; நீ கூறியபடி உன் மகனை அவ்வசுரனிடம் பலியாக அனுப்ப நான் உடன்படுவேனாயின், அதிதியாய் வந்த பிராமணனைக் கொன்றவனாய்ப் பிராயச்சித்தமில்லாத பிரமகத்தி தோஷத்துக்கும், அடைக்கலம் புகுந்தோரை அழித்த பெரும்பாவத்துக்குமன்றோ நான் ஆளாகவேண்டும்; சுயநலங் கருதிப் பிறர்க்குத் தீங்கிழைக்கும் இச்செய்கைக்கு நான் ஒருப்படமாட்டேன்; நானே என்னுயிரைத் தியாகஞ் செய்யப்போகிறேன்" என்று சொன்னான். இங்ஙனம் இவன் கூறக்கேட்ட குந்தி, "அந்தணரே! நான் 'என் புத்திரனை அனுப்புகிறேன்' என்று சொன்னது எனக்கு ஐந்து புத்திரர்கள் இருக்கிறார்களென்பதுபற்றி யென்று

நினைக்கவேண்டாம்; தாய்க்குச் சத்புத்திரர்க ளிருப்பினும் ஒரு புத்திரனைக்கூட இழக்க மனந்துணியாது; நான் இக் காரியத்திற்கு என்மகனை அனுப்பினால், அந்த அசுரன் அவனைக்கொல்லமுடியாது என்பதை நான் நன்கு தெரிவேன்; என்புதல்வன் அசகாய சூரன்; மந்திரசித்தியும் மகிமையும் வாய்ந்தவன்; இவன் உம்மைமட்டுமல்ல இவ்வசுரனிடமிருந்து இவ்வூரையே விடுவிக்கப் போகிறான்; அவன் இதோ நிற்கின்றானே இவன்றான்; நீர் இதுபற்றி ஒன்றும் யோசிக்க வேண்டியதில்லை" என்று சொன்னாள். பிராமணனும் அவனது மனைவியும் மகிழ்ந்து, பீமனைப்பார்த்து "இப்பேருபகாரத்தைத் தற்காப்புடன் செய்ய உமக்கு முடியுமேற் செய்க"என்றனர். பீமன் தனக்கு இப்பெருங்காரியத்தைச் செய்தற்குச் சமயம் வாய்த்தமை பற்றி மிகவும் குதூகலித்து நின்றான்.

களைகணுத் தம்மடைந்தார்க் குற்றுழியும் மற்றோர்
விளைவுன்னி வேற்றுடம்பு தாங்கார்—தளர்நடைய(து)
ஊனுடம் பென்று புகழுடம் போம்பு தற்கே
தானுடம் பட்டார்க டாம்.

என்று கூறியவாறு உத்தமர்க்கு இத்தகைய குணம் பிறவியிலேயே அமைந்ததன்றோ?

இச்செய்தி இங்ஙனமாக, பிக்ஷைக்குச் சென்றிருந்த உதிஷ்டிரர் தம்பிகளோடு வந்து சேர்ந்தார். சேர்ந்தவர் பீமன் என்றுமில்லாத மகிழ்ச்சியோடு அன்று இருப்பதைக் கண்டார்; கண்டு இம்மகிழ்ச்சிக்குக் காரணம் என்னவாகவிருக்கலாமெனத் தமக்குள் ஆராய்ந்து பார்த்தார். அவன் போர்செய்யக் கருத்துக்கொண் டிருக்கின்றா னென்பதைக்

குறிப்பினால் அறிந்து கொண்டார். அப்பால் உதிட்டிரன் தம் தாயுடன் தனித்திருந்து "இந்தப் பீமன் எவ்விதச் செய்கை செய்யக் கருதியுள்ளான்? அதனை உனது அனுமதியினாலேயே செய்யக் கருதுகிறானா? அல்லது சுயேச்சையாகச் செய்யக் கருதுகிறானா?" என்று கேட்டார். அதற்குக் குந்தி "பீமன் என் அநுமதியினாலும் தூண்டுதலினாலுந்தான் முதலாவது இந்தப்பிராமணனது விமோசனத்துக்காகவும் இரண்டாவது இந்த நகரத்தின் விடுதலைக்காகவும் ஒரு பெருங்காரியத்தைச் செய்யப்போகிறான்; அஃதாவது:— பகாசூரனுக்கு உணவும், ஆளும் அனுப்பும் இன்றையமுறை நமக்கு உறைவிட முதவிய பிராமணனது; அவ்வுணவை நம் பீமனே அசுரனிடம் கொண்டு செல்லச் சம்மதித்திருக்கிறான். அவ்வசுரனுக்குச் சித்தஞ் செய்த உணவினாலாவது இன்றைக்குப் பீமன் வயிறு நிரம்பட்டுமே"; என்று சொன்னாள். அதனைக் கேட்ட உதிட்டிரன் தாயைப் பார்த்து, "அம்மையே, இஃதென்ன விபரீதமான காரியத்தைச் செய்வதற்குச் சிறுவனைத் தூண்டியிருக்கிறாய்; இச்செய்கையைச் செய்யச் சொல்ல உனக்கு எப்படி மனந் துணிந்தது; பிறரது பிள்ளையைக் காக்கத் தன் பிள்ளையை இழப்பதற்கு இப்படி ஒருப்படுவார் இப்படியில் உன்னைப்போலுண்டோ? உனது இச்செய்கையால் நீ உலகத்துக்கும் சாஸ்திரத்துக்கும் மாறுபட்ட நெறியுடையவளாகவன்றோ காணப்படுகின்றாய்; எவனுடைய புயவலியால் நாமெல்லாம் விசாரமற்றுத் தூங்குகிறோமோ; எவனுடைய பராக்கிரமத்தால் பகைவர்களால் கவரப்பட்டுள்ள இராஜ்ய செல்வத்தை மீளப் பெறக் கருதி யிருக்கின்றோமோ; எவனுடைய ஆற்றலால் அரக்கு மாளிகையினின்றும் தப்பிப் பிழைத்து வந்தோமோ?

அவனையா இழப்பதற்கு இந்த யோசனையைக் கைக்கொண்டாய்? துன்ப மிகுதியால் மதிமயங்கியோ பீமனை இக்காரியத்தில் தலையிடச் செய்தாய்? நன்றாக விருக்கிறது உனது யோசனை" என்று மனம் வருந்திக்கூறினார். குந்திதேவி அவற்றையெல்லாம் கேட்டு "உதிட்டிரா நான் புத்திகெட்டு இதனைச் செய்ய ஆரம்பிக்கவில்லை; துரியோதனனது வஞ்சகச் சூழ்ச்சிக்கு அகப்படாமல் சுகமாக இந்தப் பிராமணனது மாளிகையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; இவனுக்கோ இப்போது உயிராபத்து ஏற்பட்டிருக்கின்றது; முன்பு நம்மிடத்து ஒருதவியும் பெறாமலிருந்தே நமக்கு உதவி புரிந்த இப்பிராமணனுக்குற்ற இடுக்கணை நீக்குதற்கு, நாம் நம்மா லியன்ற உதவியைச் செய்யா விடில் நமக்கு உய்தி உண்டோ?

'செய்யாமற் செய்த வுத்விக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது'

'உதவாமல் ஒருவன் செய்த உதவிக்குக் கைம்மாறாக
மதயானை யனையமைந்த மற்றுமுண் டாகவற்றோ'

'சிதைவகல் காதற்றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை ஆவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரிகுநர்க்கும் உண்டாம் மாற்றலாம் ஆற்றல் மாயா
உதவிகொன்றார்க்கொன்றேனும்ஒழிக்கலாம்உபாயமுண்டோ'

என்று உபகார தர்மத்தைப் பற்றிப் பெரியோர்கள் கூறியிருப்பவற்றை நீ அறியாயோ? இவற்றால் செய்நன்றியறிதல் சிறந்த அறமென்பதும் அதனை மறத்தல் பெரிய மறமென்பதும் விளங்கவில்லையா? பீமனை இழந்துவிடத்

துணிந்து விட்டேனென்று நீ முனிந்து கூறுகின்றாய்; பீமனது ஆற்றலைப் பெற்றவளாகிய யானன்றோ அறிவேன்; வாரக்குமாளிகையிலும் இடிம்பவனத்திலும் பீமனது வல்லபத்தை நீ கண்கூடாகக் கண்டும் ஏன் பயப்படுகின்றாய்? பீமன் அறுபதினாயிரம் யானைப்பல முடையவன்; அவன் கைவன்மைக்கு எதிர்நிற்கும் வன்மை இந்திராதி தேவர்களிடத்திலும் வேறு யாவரிடத்திலுமில்லை; பீமனது திறலை நான் உள்ளபடி அறிந்து கொண்டிருக்கிறபடியாற்றான் அவனைக்கொண்டு நமக்குதவி புரிந்தவர்களுக்கு உதவி புரிய முற்பட்டேன்; இக்காரியம் புத்திக் குறைவினாலாவது, பொருளை விரும்பியாவது, நன்றாக ஆலோசியாமலாவது என்றால் தொடங்கப்படவில்லை; விவேக பூர்வமாகவே இத் தர்ம காரியத்தைச் செய்ய முன்வந்திருக்கிறேன்; என்றால் தொடங்கப்பட்ட இக்காரியம், நன்றியறிதலும் ஒரு குடும்பத்தைக் காப்பதுமாகிய பேரறமென்று கருதி நீயும் சம்மதித்தல்வேண்டும்" என உதிட்டிரனுக்கு எடுத்துக்கூறினாள்.

இவற்றை யெல்லாம் ஊன்றிக் கேட்ட உதிட்டிரன், "அம்மையே! நீ செய்யத் தொடங்கிய இக்காரியம் பெரும் புண்ணிய காரிய மென்பதனை உணர்ந்தேன்; அறிவினால் ஆராய்ந்து தான் இக்காரியத்தை நீ செய்ய முற்பட்டிருக்கின்றாய்; 'தருமம் தலைகாக்கும்' என்றபடி உனது தரும குணமே பீமன் அந்த அசுரனைக் கொன்று வெற்றிமாலையிலவதற்குப் பக்கத்துணையாக நின்றுதவும்; ஆனால் வீமன் புரியும் இவ்வருஞ் செயலால் நம்மைப் பற்றிப் பிறர்க்கு ஐயம் உண்டாகாதபடி நாம் கவனமாய் நடந்து கொள்ள வேண்டும்", என்று சொன்னார். பின்பு அன்றிரவு குந்தி

தேவி மற்றைப் பிள்ளைகட்கும் இச்செய்தியைத் தெரிவிக்க அவர்கள் உடன்பட்டனர். பீமன் சூரியோதயமானதும் பிராமணனிடஞ் சென்று, "ஐயா உம்மையும் உனது மனைவி மக்களையும் ஆபத்தினின்றும் விடுவிக்கத் துணிந்துள்ளேன்; நானே அப் பகாசூரனுக்குப் பலியாகப் போகின்றேன்; என்னை அனுப்புவதில் இனித் தாமதிக்க வேண்டாம்; நான் இப்போது வயிறுநிரம்ப நல்ல உணவுகளை உண்ண விரும்புகிறேன்; முதலில் என்னை உண்பித்து விட்டு அசுரனுக்கு அனுப்பவேண்டிய உணவுகளை விரைந்து சித்தஞ் செய்யுங்கள்" என்றான். உடனே பிராமணனும், அவனது மனைவியும், இனிய பலவகை அடிசில்களையும், கறிவகைகளையும் குழம்புகளையும், பக்ஷணங்களையும். இன்சுவையோடு செய்து பீமனுக்கு வயிறு நிரம்பப் படைத்தார்கள்; பீமன் விலாப் புடைக்க உண்டு ஏப்பமிட் டெழுந்தான். அசுரனுக்கு வெள்ளிமலையைப்போல் ஒரு வண்டியில் சோற்றைக் குவித்தார்கள். குழம்பு முதலானவற்றையும் பல விதப் பானங்களையும் பானைகளில் நிறைத்து வைத்தார்கள். பின்பு வண்டியில் இரண்டு எருமைக் கடாக்களைப் பூட்டிப் பீமனைச் செவ்வலரி மாலையாலும் செவ்வாடைகளாலும் செஞ்சந்தனத்தாலும் அலங்கரித்து வண்டியில ஏற்றினார்கள். பீமனும் வண்டியில் அமர்ந்து கடாக்களைத் தென்றிசை நோக்கிச் செலுத்தினான். ஊரார்கள் பலவகை வாத்தியத்தை முழக்கிக் கொண்டு ஊரைக் கடந்து சிறிது தூரம்வரை சென்று, அசுரன் இருப்பிடம் அணுகவும் அஞ்சி நின்றுவிட்டார்கள். பின்பு பீமன் மாத்திரம் தனியாக வண்டியைச் செலுத்திச் சென்றான். சென்றவன் அசுரன் இருப்பிடத்தைப் பார்ப்பதற்கு வண்டியில் நிமிர்ந்து நின்று பார்த்தான். பகனோ இதற்கு

முன் நின்று நின்று குவித்த எலும்பு மலையாகிய ஆசனத்தில் ஆகாயத்தில் கழுகும் பருந்துகளும் பறந்து பந்தரிட, நரிகள் ஊளையிடுதலாகிய துதிவகைகளைச் செய்ய வீற்றிருப்பதைக் கண்டான்; கண்டு' இவனைக்கொன்றபின் இவ்வினிய உணவுகளெல்லாம் உண்ண உதவாது; வீணாகப்போய்விடும்; அப்படிப் போகாமல் இவ்வுணவுகளை நன்றாக உண்டுவிட்டே அசுரனோடு பொருதல் வேண்டும்;' என்று கருதி, வண்டி போகும்போதே உணவுள்ள பக்கம் திரும்பி உட்கார்ந்து கொண்டு, உணவுகளைக் கவளங் கவளமாக உருட்டி வாயிற் போட்டுக்கொண்டே இருந்தான். வண்டி செலுத்தப்படாமையால் மெதுவாகவே சென்று கொண்டிருந்தது. உணவு வண்டி குறித்த நேரத்தில் வாராமையினாலே, அசுரன் பசித்தீயுடன் கோபத்தீயாலும் கொதித்து எலும்புமலைமேல் பனைமரம் போல் எழுந்து நின்று பார்த்தான். வண்டி மெதுவாக வருதலையும், அதனை ஓட்டுபவன் உணவுகளை உண்டு கொண்டிருப்பதையும் கண்டான். கண்டதும் அவன் "இஃதென்ன விந்தை என்றைக்குமில்லாத புது நிகழ்ச்சியாயிருக்கிறது. நமக்கு வரும் உணவை அச்சமின்றி உண்பவனும் இருக்கின்றானோ!" என்று சொல்லிக் கொண்டு உதடு துடிக்க, புருவம் நெரிய, கண்ணில் நெருப் பெரிய, காதில் புகை பரிய ஆரவாரித்துக் கொண்டு விரைவாகக் கால் பிடரியிலடிக்க ஓடிவந்தான். அவன் அப்படி வந்தும் பீமன் அவனைத்திரும்பிப் பாராமலே உண்ணும் வேலையை விடாது செய்து கொண்டிருந்தான். உண்ணும் பீமனை விளித்து அசுரன், "அடா மானிடப் பதரே! சற்றுநேரத்தில் யமலோ

கத்துக்குப் போகிற உனக்கு இந்த ஆசை எதற்கு? புலிக்கிட்ட உணவைப் பூனையா தின்பது? நன்று" என்று சொல்லி, பீமன் முதுகிலும் பிடரியிலும் பலமுறை கையாற் குத்தினான். அப்போதும் பீமன் உண்பதை நிறுத்தாமல், "அடா அசுரப் பயலே! நல்ல காரியஞ் செய்தனை; அவசரமாக உண்டமையால் சோற்றுக்கவளங்கள் தொண்டையில் விக்கிக் கொண்டிருந்தன; நீ குத்திய குத்துக்களால் அவைகள், நன்கு உள்ளே இறங்கிவிட்டன" என்று சொல்லிக் கொண்டே தன்வேலையைச் செய்துகொண்டிருந்தான். பகாசுரன் பின்னும் பலமுறை குத்தியும் பீமன் உண்பதினின்றும் ஒழிந்த பாடில்லை. பின்பு அசுரன் கையிளைத்துப்போய், "இனி நீ வேண்டுமானால் உணவு முழுவதையுமே உண்பாயாக; நீ உண்ணும் உணவு என்னை விட்டு எங்கே போகப் போகிறது? சிறிது நேரத்தில் என் வயிற்றில் புகப் போகிறாய்; அப்போது நீ உண்ட உணவுகளும் என் வயிற்றில் தானே சேரும்" என்று சொல்லிக் கொண்டு நின்றான்.

பீமன் வண்டியிலிருந்த உண்டிகளையெல்லாம் வயிறு புடைக்க உண்டு தேக்கெறிந்து எழுந்து திரும்பி நின்று, கையோடு கையைத் தட்டிப் புயத்தைக் கொட்டிப் பகாசுரனைப் பார்த்து எள்ளல் நகை செய்து, "நிசாசர! இனி உன் கைவன்மையைக் காட்டலாம்; இந்நாள்வரை இந்த வனத்திலிருந்த மிருகங்களையும் பறவைகளையும் பலவகை உயிர்களையுங் கொன்று தின்று வளர்ந்த உனது உடலை இன்று அவ் வனசரங்களுக்கே விருந்திடப் போகி

றேன்; பாரடா" என்று அதட்டிச் சொல்லி எதிர்த்து நின்ருன். பகாசுரன் "புலியைப் பூனை எதிர்ப்பது போல், நீயா என்னை எதிர்ப்பவன்! நன்ருயிருக்கிறது! இங்ஙனம் செய்யும்படிக்குக் கெடு புத்தி சொல்லி உனனைக் கெடுத்ததுயார்? ஆழந் தெரியாமல் காலிட்டுக் கொண்டாய்; ஒரு நொடியில் உன்னைக் கொன்று, அகங்கையில் வைத்து நசுக்கித் தின்று விடுகிறேன் பாரடா" என்று சொல்லிக் கொண்டே ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கிப் பீமனை அடித்தான். பீமன் அதனை ஒற்றைக் கையாலே தட்டித் தடுத்து நின்ருன். திரும்பவும் அசுரன் அநேக விருக்ஷங்களைக் கொண்டு பீமனைத் தாக்கினுன். அவற்றையெல்லாம் பீமன் நொடியில் பொடி செய்து நின்ருன். நெடுநேரம் இவ்வாறு விருக்ஷயுத்தம் நடந்தது. அதன்பின் பகன் பீமனைச் செங்குத்தாகத் தூக்கி எறிந்தான். எறியப்பட்ட பீமன் சிரித்துக் கொண்டே பூமியில் வந்து நின்று, அசுரனைக் கைகளால் சேரப் பிடித்துத் தரையில் ஓங்கி அறைந்தான். அசுரன் அறையுண்டு வீழ்ந்தான். வீழவும் பீமன் மார்பிலேறிக் கால்களால் உதைத்தான். அவன் நாக்கு வெளியிற் பிதுங்கி மூர்ச்சித்தான். பின் சிறிது நேரத்தில் அவன் எழுந்து மறுபடியும் யுத்தந் தொடங்கிப் பீமனைத் தலையில் பலமாக மோதினுன். அதனுல் பீமன் மிகவும் கோபம் பொங்கி 'இனிக்காலந் தாழ்க்கலாகாது; விரைவில் இவனை முடித்துவிட வேண்டும்' என்று நினைத்துப் பற்களைக் கடித்துக் கண்களை உருட்டி விழித்து, அசுரனை ஓடி இறுகப் பிடித்துக் கொண்டு முழங்காலினுல் விலாவிலும் முதுகிலும் உதைத்

தான். அதனால் பகன் தன்னுடைய உடற் கட்டு உடைய வீழ்ந்து, அண்ட முகடுவெடிக்கும்படி கதறி, தடியால் அடியுண்ட சர்ப்பம்போல் துடித்துக் கிடந்தான். கிடந்தவனைப் பீமன் கால்களைப் பிடித்துக் கரகரவென்று இழுத்தான். பகன் உணர்ச்சியற்றுப்போனான். பின்பு பீமன், அசுரன் முதுகை முழங்காலால் அமிழ்த்திக் கொண்டு, ஒரு கையால் கழுத்தையும் ஒரு கையால் இடுப்புக் கச்சையையும் பிடித்து வளைத்து, முதுகந்தண்டெலும்பை முறித்தான். அவ்வளவில் பகாசுரன் வாயில் குருதி கான்று உயிர் துறந்தான். பகாசுரன் மாண்டுபோனதை அறிந்த மற்ற அசுரர்களெல்லாம் பீமனுக்கு அஞ்சி ஓடி வந்து, அவனை வணங்கிச் சரணமடைந்தார்கள். பீமன் அவர்களுக்கு "இனி நரபலியைக்கனவிலும்நினைக்கலாக" தெனக்கட்டளையிட்டு பகனது உடலை இழுத்துக்கொண்டுவந்து ஏகசக்கிர நகரத்துக் கோட்டை வாயிலில் போட்டுவிட்டு, அருகிலிருந்த ஆற்றில் நீராடி நகரை நோக்கி வந்தான். பீமன் வருகின்ற உக்கிரத்தைக் கண்ட அளவில் ஊர்ச்சனங்களெல்லாம் "பிரியனாய்ப் பலிக்குச்சென்றவன் என்ன குற்றஞ் செய்தானோ தெரியவில்லை! அசுரன் நம்மைக் கொல்ல வருகின்றான்" என்று சொல்லிக் கொண்டு ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தார்கள். பீமன் அவர்களை அஞ்சவேண்டாமெனக் கையமர்த்திக் குறிப்பித்து ஊரினுள் வந்து புகுந்தான். யாவரும் அவனைப் போற்றிப் புகழ்ந்து துதித்து, ஆநந்தமேலீட்டினாற் குதித்தார்கள். பீமன் வீடு சேர்ந்து தாயையும் தமையனையும் வணங்கி அவர்களால் வாழ்த்தப் பெற்றான்.

# துருவன் சித்தி

அல்லது

## முயற்சியின் உயர்ச்சி.

---

திருமாலின் உந்தியங்கமலத்தில் தோன்றிய நான்முகன் உலகத்தைப்படைத்து, அதனைப்புரப்பதற்குச் சுவாயம்புமனு வென்னும் அரசனையும் சிருட்டித்தான். அவன் உலகத்தை ஓராழி தனியுருட்டி ஆண்டு வருங்கால் சதரூபை என்னும் ஒரு மங்கையைமணந்து உத்தான பாதன், பிரிய விரதன் என்னும் இரண்டு மக்களைத்தோற்றுவித்தான். அவர்களுள் உத்தான பாதன் தன் தந்தைக்குப்பின் அரியணை ஏறி உலகத்தை உவப்புடன் காக்கத் தொடங்கினன். இவன் தனக்கு வாழ்க்கைத் துணையாகப் பூமடந்தையும் புவிமடந்தையும் போல சுநீதி, சுருசி என்னும் இரண்டு அழகிற்சிறந்த மங்கையரை மணந்து இன்புற்று வாழ்ந்து வந்தனன். வாழ்ந்து வருங்கால், அவ்வாழ்க்கையின் பயனுக அரசனுக்குச் சுநீதி வயிற்றில் துருவன் என ஒரு மகனும், சுருசி வயிற்றில் உத்தமன் என ஒரு புத்திரனும் முறையே தோன்றினர்கள். அரசன் இராஜ்ய செல்வத்தோடு புத்திர செல்வத்தையும் பெற்றமைக்குப் பெரிதும் மகிழ்ந்தான்.

இவ்வாறு இருமனைவிகளையும் இருகண்களாகக்கொண்டு வாழ்ந்து வந்த உத்தானபாதன் ஊழ்வயத்தால் இளையாளாகிய சுருசியிடம் மிக்க அன்பு கொண்டு, சுநீதிவயின் வர வர அன்பு குறைந்தவனுனன். இத்தன்மையனுன அவன் ஒருநாள் தனது நாளோலக்கமண்டபத்தில் சிம்மாதனத்தில்

தன் மகன் உத்தமனை மடிமீது வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தான். இதனைக்கண்ட துருவன் தானும் உத்தமன் போல் தந்தை மடிமீது உட்கார ஆசை கொண்டு தந்தையருகில் ஓடிவந்தான். அச்சமயத்தில் சுருசியானவள் தனக்கு எதிரில் இருந்தமையால் அரசன் துருவனை அன்போடு தூக்கி மடிமீது வைத்துக்கொள்ளாது வாளா இருந்து விட்டான். குழந்தை முகம் வாடி நின்றான். அப்போது சுருசி துருவன் எண்ணத்தில் அழுக்காறு கொண்டு அக்குழந்தையைப்பார்த்து, "சுநீதி மகனே நீ, என் வீணை பிரயத்தனஞ் செய்கின்றாய்? இந்த மனோரதம் நிறைவேறுமா? என் வயிற்றிற் பிறவாமல் மற்றொருத்தி வயிற்றிற் பிறந்த நீ, மிகச்சிறந்த இச் சிம்மாசனத்தில் இருக்கக் கருதுவது அறிவீனமாகும். இந்த மகிபாலனுக்கு நீ மகனானாலும் சகல ராஜ்ய லக்ஷ்மி நிவாசமான இவ்வரியணைக்குத் தகுந்தவனாக மாட்டாய்; என் மகனே இதற்குத் தகுந்தவன்; பயனில்லாத முயற்சி வேண்டாம்; என் மகன் போல நீயுமிருக்கக் கருதுகிறாய்; அது தகாது; பிள்ளாய்! நீ பாக்கிய மற்றவளாகிய சுநீதி வயிற்றிற் பிறந்த அபாக்கியத்தை நினைத்துக்கொள்ள வேண்டாமா? போ;" என்று முகங்கடுத்து மொழிந்தாள்.

இவ்வாறு மாற்றாந்தாய் மொழிந்த வசனங்களைக் கேட்ட துருவன், கோபத்தால் மனங்கலங்கிக் கண்ணைப் பிசைந்து அழுதுகொண்டு உதடு துடிக்கத் தன் தாயிடம் ஓடிவந்தான். துருவன் மிகுந்த வருத்தத்துடன் கண்பிசைந்தழுது வருவதைக்கண்ட தாயாகிய சுநீதி, விரைந்து வந்து துருவனைத் தூக்கி மடிமீது வைத்து, "என் அருமந்த கண்ணே! உன்னை யார் அடித்தவர்? யார் வைதவர்? உன்

கோபத்திற்குக் காரணம் என்ன?" என்று வினவினாள். அதற்குத் துருவன் அரசன் முன்னிலையில் மாற்றாந்தாயான சுருசி பேசிய கொடுஞ் சொற்களை எல்லாம் சொல்லி மீண்டும் தேம்பித்தேம்பி அழத்தொடங்கினான். அதையறிந்து சுநீதி பெருமூச்சுவிட்டுத் துக்கமேலிட்டு, அதனை மகனுக்குக் காட்டாமல் மறைத்துக்கொண்டு, துருவனை நோக்கி, "புத்திரசிகாமணியே! வருந்தாதே; சுருசி சொன்ன சொற்களெல்லாம் நியாயமானவையே; நீ சொற்ப பாக்கிய முள்ளவனானாய்; ஏனென்றால், மகா புண்ணிய முடையவர்களது பிள்ளைகள் இப்படிச் சத்துருக்களால் இகழப்பட மாட்டார்கள்; இது உன்னுடைய பழவினைப் பயனென்று கருதி வருத்தத்தை விட்டுவிடு; சுருசியானவள், பாக்கிய வசத்தினாலே நாயகன் அன்பைத்தான் நிரம்பப்பெற்றுப் பரிபூரண சுகவாழ்க்கையை யுடையவளா யிருக்கின்றாள். நானோவெனில் அரசருக்குப் பேருக்கு மாத்திரம் மனைவியாக இருந்து வருகின்றேன். உத்தமன் புண்ணியசாலி யாகையால் சுருசிக்கு மகனாகப் பிறந்தான்; நீ அதிர்ஷ்டவீனனாகையால் எனக்கு மகனாகப் பிறந்தாய்; குழந்தாய்! என் செய்யலாம்? கடவுள் அவரவரது வினைக்கீடாகவே போகங்களை அளந்து கொடுத்திருக்கிறார். எவனுக்கெந்த மட்டும் அதிர்ஷ்டமோ அந்தமட்டும் மன நிறைவு கொள்ள வேண்டுவதுதான்; செல்வமென்பது சிந்தையின் நிறைவுதானே; உனக்குச் சிம்மாசனத்தில் இருக்கும் பாக்கியம் கிட்டவில்லையே யென்றாவது, சிற்றன்னை இங்ஙனம் வசைபடப் பேசினாளே என்றாவது நீ கவல வேண்டாம்; அப்படிச் சுருசி கூறிய மொழிகளைப் பொறுக்கமுடியாதென்றாலும் உத்தமனைப் போல் உயரிய சிம்மாசனத்திலமரவேண்டுமென்றாலும் அதற்கு நீ செய்யக்

தருவது ஒன்றுண்டு கேள்; அதாவது உன் சித்தத்தில் பத்திமிகக் கொண்டு, சர்வலோக சரணியனாகிய திருமாலது திருவடிகளைச் சிந்தித்து அருந்தவம் பண்ணுவதுதான். ஆகையால் அதனை முறைப்படி விரைந்து செய்வாயாக; செய்யின் இப்போது நீ விரும்பிய இச்சிம்மாதன பதவியல்ல; இதனினும் எத்துணையோ மடங்கு சிறந்த மகோன்னத பதவியையும் அடையலாம்; " என்று தேற்றினாள். இவற்றைக்கேட்ட துருவன் தாயை நோக்கி " அன்னையே நீ, நான் அதிர்ஷ்டவீனனென்றும் அபாக்கியனென்றும்" ஆதலால் தகுதிக்கு மேற்பட்ட பதவிக்கு இச்சித்தல் கூடாதென்றும், சுருசி சொன்ன மொழிகளெல்லாம் மெய்ம்மையே அவற்றைப் பொறுப்பதே நலமென்றும் நீ சொன்ன இம்மாற்றங்களை நான் ஏற்றுக்கொள்ளேன்.

தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

என்பது முக்கால முணர்ந்த மூதறிஞர் வாக்கு; ஆகையால், முயன்றால் அடைய முடியாத பதவி எங்குமில்லை; இத்தகைய முயற்சியையே பற்றுக்கோடாகக் கொண்டு போராத பெரும்பதவி பெற, நீ இரண்டாவதாகக் குறித்த அருந்தவத்தைப் புரிய இப்போது துணிந்து விட்டேன்; செல்வச் செருக்கினால் கூறத்தகாதன கூறிய சிற்றன்னையின் சிறு சொற்கள் என் உள்ளத்தை வெதுப்பிக்கொண்டிருக்கின்றன; அரசனது அன்புக்கு உறைவிடமாக விளங்கும் சுருசியின் வயிற்றில் நான் பிறவாது உன் புன்வயிற்றில் பிறந்தாலும் நான் செய்யும் தவத்தின் மகிமையை நீ பார்; சுருசி வயிற்றிற் பிறந்த பாக்கியத்தினால் என் தம்பி உத்த

மன் பிதிர்ரார்ஜ்ஜிதமாகிய அரச செல்வத்தை அடையட்டும்; நானோ பிறர்முயற்சியினால் வரும் பெருஞ் செல்வம் துய்க்கும் பேடியல்ல; எனது தந்தையாம் அரசனும் காணுதற்கரிய பெரிய பதவியை அடையப் போகின்றேன்'' என்று பெருமிதந்திகழும் மொழிகளாற் பேசிவிட்டுத் தாயிடம் விடைபெற்று, நகரத்தைத் துறந்து அதிவேகமாகப் புறப்பட்டுப்போய் வனத்தை அடைந்தான்.

வனத்தையடைந்த துருவன், அங்கு கிருஷ்ணாசன உத்தரீயங்களையே ஆசனமாக இட்டு அமர்ந்திருந்த எழு ரிஷி புங்கவர்களைக்கண்டான். கண்டு அம்முனிவர்களை அணுகி, வணங்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு, "முனீந்திரர்களே! நான் உத்தானபாதனுக்குச் சுநீதி வயிற்றில் தோன்றிய குமாரன்; துருவன் என்னும் பெயருடையேன்; மிகுந்த மனக்கவற்சியாலே தேவரீர்களது சன்னதிக்கு வந்தேன்'' என்று சொல்லி நின்றான். அம்முனிவர்கள் பாலகனைப் பார்த்து '' ராஜகுமாரனே! உன்னைப்பார்த்தால் நீ நாலைந்தாண்டும் நிரம்பாத பாலகனாக இருக்கின்றாய்; துக்கமென்பதே இன்னதென அறியா இப்பாலப்பருவமுடைய உனக்கு மனத்தில் துக்கமுண்டாகக் காரணமென்ன? உன் தந்தை உலகையாளும் மன்னனாக விளங்க, நீ காட்டுக்கு வந்தது எதுபற்றி?'' என வினவினார்கள். அதற்குத் துருவன் "சுவாமிகாள்! எனது மாற்றாந்தாய் உரைத்த வசைமொழிகளினாலுண்டான அவமானத்தைப் பொறாமல் இங்கு வந்தேன்'' என்றான். அதனைக்கேட்ட முனிவர்கள், அவனது பெருங் குணத்தை வியந்து பேசிப்பின்னர் அவனைப் பார்த்து "ராஜ

குமார! மனவெறுப்பினால் நொந்திருக்கிற நீ இப்போது என்ன செய்யக் கருதுகின்றாய்? அதற்கு எங்களிடமிருந்து எவ்வித உதவியை நாடுகின்றாய்?'' என்றுகேட்கத் துருவன் முனீந்திரர்களே! அடியேன், ராஜ்ஜிய செல்வத்தையாவது மற்றுமுண்டான செல்வங்களையாவது விரும்பவில்லை; ஆனால் இதற்குமுன் ஒருவராலும் அநுபவிக்கப்படாததாய், அபூர்வமானதாய், சகல ஸ்தானங்களுக்கும் உன்னதமாய் விளங்கும் ஸ்தானம் எதுவோ? அதனை அடைய விரும்பிவந்துள்ளேன்; இந்த அரியகாரியம் சித்தியாவதற்குரிய உபாயமெதுவோ அதனை அடியேனுக்கு அருளிச்செய்ய வேண்டும்'' என்று வேண்டினான். அவன் எதிரில் வீற்றிருந்தவர்களான மரீசி, அத்திரி, ஆங்கிரஸ், புலகன், தவக்கிரது, புலஸ்தியன், வசிஷ்டன் என்னும் சப்த முனிவர்களும் துருவனை அன்புடன் நோக்கி, ''அறிவிற் சிறந்த அரசகுமார! நீ பக்தபராதீனனும், சர்வலோகேஸ்வரனும், பரமப்பிரமமும், பரமப்பிராப்பியமும் யக்ஞேஸ்வரனும், ஜனார்த்தனனுமான கோவிந்தனது சரணாரவிந்தங்களையே அரணாகக்கொண்டு ஆராதனஞ்செய்; அப்படிச் செய்வாயாகில், இதுவரையிலும் எவரும் அடையாத எங்குமில்லாத மிகப் புதிதான எவ்வித உன்னத ஸ்தானத்தையும் நீ பெற விரும்பினாலும் அதை நிச்சயமாகப் பெறுவாய். இதில் சிறிதும் சந்தேகம் வேண்டாம்''என்று அருளிச்செய்தார்கள்.

இவ்வாறு முனிவர்கள் அருளிய திவ்ய வாசகங்களைக் கேட்ட துருவன், மறுபடியும் அம்முனிவர்களைப் பார்த்து, ''தேவரீரே! இப்போது நான் ஆராதிக்க வேண்டிய

முழுமுதற் கடவுளைச் சுட்டிக்காட்டி யருளினீர்கள்; இனி அப்பெருமான் திருவுள்ளமுவந்து அருள் செய்யும்படி நான் ஜெபிக்க வேண்டிய மந்திரத்தையும், ஆராதனஞ் செய்ய வேண்டிய முறையையும் பிரசாதிக்க வேண்டும்" என்று கேட்டான். அதற்கு அம் முனிவர்கள், "ராஜபுத்திர! விஷ்ணுமூர்த்தியிடம் பக்தி செய்ய வேண்டுமென்று விரும்புகின்ற ஒருவன், முதலில் இவ்வுலகப்பற்றுக்களை அறவே ஒழிக்கவேண்டும்; பின்பு மனத்தை முகுந்தனது திருவடிக் கமலங்களிலே நிச்சலமாகச்சேர்த்து, வேறு எண்ணங்களின்றி அத்திருவடிகளையே பாவித்துக்கொண்டு, உளந்தூயனாய் 'வியஷ்டி சமஷ்டி ரூபமாகப் பிரகிருதியும் புருஷனும் சரீரமாகவுடைய சுத்த ஞான மயமான வாசுதேவனுக்குத் தெண்டன் சமர்ப்பிக்கின்றேன்' என்னும் பொருள் சேர்ந்த மகாமந்திரத்தைச் ஜெபிக்கவேண்டும்; உனது பாட்டனாகிய சுவாயம்பு மனுவும் இம்மந்திர உபாசனையினால் தான் ;எவரும் அடையப்பெறாத பெரும் பேறுகளையெல்லாம் அடைந்தான்; நீயும் அப்படியே இம்மகா மந்திரத்தை ஜெபித்துத் திருமகள் தலைவனாகிய திருமாலை ஆராதனஞ் செய்யக்கடவாய்" என்று கட்டளையிட்டருளினார்கள்.

துருவன், முனிவர் எழுவரும் இங்ஙனம் இயம்பிய உபதேசத்தைக்கேட்டு,ஆனந்தக்கடலுள் மூழ்கி முனிவர்களைத் தொழுது, அவ்வனத்தை நீங்கி அப்பாற் சென்றான். செல்லுங்கால் நாதமுனிவர், அவ்வனத்தின் இடைவழியிலே துருவனுக்கு எதிரே வந்து தோன்றினார். அவர் துருவனைப்பார்த்து, இளைஞ! "பலவிதச் செல்வமும் பாங்குடன் அமைந்த ராஜமாளிகையை விட்டு, இக்கானக வழியாக

எங்குச் செல்கின்றனை? இச்செலவிற்குக் காரணமென்னை?" என்று கேட்டார். துருவன் முனிவரை வணங்கி, "கீதநாத! எம்பெருமானாகிய வாசுதேவனது தேசுமிக்க திருவடியினும் சிறந்ததோ பத்தெட்டு நாளையில் பறந்துபோகும் இவ்வுலகச் செல்வம்?" என்று வினா வெதிர் வினாவாக விளம்பினான். முனிவர் கேட்டு 'இச்சிறுவனைத் தேற்றுதல் அரிது' என்று எண்ணிக், "குழந்தாய்! உன் மனக் கவலைக்குக் காரணத்தையும் உன் கருத்தையும் அறிந்து கொண்டேன்; நீயோ ஐந்து வயதும் நிரம்பாத பாலகன்; நீ யெங்கே? நீ செய்யத் தொடங்கும் தவமெங்கே? பொறி ஐந்தும் அடக்கி, எரியும் அனல்நடுவிலிருந்து அருந்தவமாற்றும் பெருந்தகைகளாகிய முனிவர்க்கும் அணுகுதற்கரியனாகிய எம்பெருமான் உன் மனதிற்கு எட்டுதலுமுண்டோ? வீணாக வருந்தவேண்டாம். விளையாட்டில் மனத்தைச் செலுத்த வேண்டிய நீ, அவமானம், சம்மானம் என்று ஆராய்தல் தகாது; நீ திரும்பிச் செல்" என்று சொல்லி அவன் கருத்தைச் சோதித்தார். துருவன், "அவமானம் சம்மானம் என்பவற்றில் சமநோக்கு வைப்பது அபேத ஞானமுடைய ஞானிகளுக்கேயாம்; எம்போலியர்க்கன்று; இவ்விஷயமாகக் கூறிய உமது சொல்லை நான் ஒப்புக்கொள்ளேன்; நீர் இப்போது மூவுலகிலுமில்லாத நற்பதவியை நான் பெறுதற்குரிய உபாயமெதுவோ அதனை மாத்திரம் அருளிச்செய்யும்" என்று கேட்டான். நாரதர் துருவன் மீது அன்புபெருகி இருகையாலும் ஆரத்தழுவி "மதலாய்! உனது அரிய மனவலியை வியக்கின்றேன்; நீ யமுனாநதிதீரத்திலுள்ள மதுவனத்தை யடைந்து, அந்நதியில் படிந்து, நியமங்களை முடித்து,

அகமும் புறமும் தூயனாய், சித்தத்தையும் மூச்சையும் அடக்கி, மோன முத்திரை வழியில் நின்று தவத்தைச் செய்வாயாக" என்று சொல்லி அவன் செவியில் துவாத சாக்ஷரமாகிய வாசுதேவ மந்திரத்தையும் உச்சரித்துப தேசித்துப் பின்னர் மகன் பிரிவால் வாடியிருந்த உத்தான பாதனைக் காணுதற்குப் புறப்பட்டுச்சென்றார்.

துருவன், நாரதர் சென்றபின் அவர் ஆணையின்படி மதுவனத்தையடைந்து, யமுனைப்புனலில் படிந்து, முனிவர்கள் உபதேசித்த முறைப்படியே தேவசிகாமணியாகிய திருமாலது பாத கமலங்களைத் தனது இருதய கமலத்தில் இடைவிடாது தியானித்துக் கொண்டு அருந்தவஞ் செய்யத் தொடங்கினான். அவன் தவம் புரியும்போது, முதல் மாதத்தில் மூன்று நாளுக்கொருமுறை கனிகளையும், இரண்டாம் மாதத்தில் ஆறுநாளைக்கொருமுறை இலை சருகுகளையும், மூன்றாம் மாதத்தில் ஒன்பது நாளைக்கொரு முறை யமுனை நீரையும், நான்காம் மாதத்தில் பனிரண்டு நாளைக்கொரு முறை வாயுவையும் உணவாகக்கொண்டு உண்டு, ஐந்தாம் மாத முதலாக இவைகளுள் ஒன்றுமின்றிக் கடுந்தவம் புரிந்தான். இச்சிறுவனது தவ மகிமையை அறிந்த அமலன் வியந்து கருணை கூர்ந்து, அவனது உள்ளக்கமலத்தையே உறைவிடமாகக்கொண்டு வந்து தங்கினார். இவ்வாறு அண்ட பிண்ட சராசரங்களையெல்லாம் தன் சரீரமாகக் கொண்ட பகவான், யோகீந்திரனை துருவனுள்ளத்தில் குடிகொண்டிருந்தமையால், பூமி தேவி அவனைத் தாங்கமாட்டாது தளர்ந்தாள். அவள், துருவன் சாயும் பக்கமெல்லாம் உடன் சாய்ந்தாள். துருவன் ஒற்றைவிரலை ஊன்றிய அளவில் மலை கடல் முதலிய எல்லாப்பொருள்களும் நடுங்கின; உலகமெல்

லாம் அதிர்ந்தன. இதைத் தேவர்கள் கண்டு பயந்து, தங்கள் தலைவனாகிய இந்திரனை அடைந்து, துருவனது அருந்தவத் தின் மகிமையை எடுத்துக்கூறி, "இவனது தவத்தினால் நம பதவிக்கே கேடு சம்பவிக்கும்போலிருக்கிறது; இனித்தாம திக்காது இவன் தவத்தைக் கெடுத்துவிடத் தக்க சூழ்ச்சி களைச் செய்ய வேண்டும்" என்றனர். இந்திரனும் அதற்குடன் பட்டுப் பல பூத பைசாசங்களை அழைத்துத் துருவன் தவ தை எவ்வாற்றாலேனும் அழித்து வரும்படி கட்டளையி டான். அவைகளும் துருவன் தவஞ்செய்யும் இடத்துக் வந்து, பலவித மாயாகாரியமான சூழ்ச்சிகளைச் செய்ய தொடங்கின. அப்பூதங்களுள் ஒன்று துருவனது தாயாகிய சுநீதியின் வடிவத்தை எடுத்துக்கொண்டு, அவன் முன் நின்று "அருமந்தமகனே! உடல் கெடுவதற்குக் காரண மான இத்தவத்தை நிறுத்து; ஐயோ! மகனே அநேக காலம் அரிய விரதங்களை நோற்று உன்னை அரிதாகப் பெற்றெடுத் தேனே! அநாதையும் பேதையுமான என்னைத் தனியே அலையவிட்டுச்சககளத்தி சொன்ன சொற்களாலே நீ இப்படி வந்தது நியாயமாகுமா? அருமைக் குழந்தாய்! கதியில்லாத எனக்கு நீயன்றோ கதி; பருவத்திற்கேலாத இச்செயலி னின்றும் உன்மனத்தைத் திருப்பு; இது உனக்கு விளை யாடுதற்குரிய காலமல்லவா? இதற்குப்பின் வேதசாஸ்திர களை ஓதுங்காலம்; அப்பால் கிருகஸ்தனாய் இன்பநுகருங்க லம்; அதற்கப்பால்தான் தவஞ்செய்யுங் காலம்; விளையாடு காலத்தில் வருத்தந்தாத்தக்க தவம் பண்ணுவது முறை யாமா? எனக்கு மகிழ்ச்சி விளைப்பதன்றோ உன் கடமை இத்துணையும் எடுத்து மொழிந்தும் எறிட்டுப் பார்க்கின் பில்லை; இனியும் இத்தவத்தை விடாமற் செய்வாயாகி

உன்முன்னரே நான் தற்கொலை புரிந்திறப்பது தவறாது" என்று சொல்லிப்புலம்பிக் கண்ணில் நீர் தாரை தாரையாய்த் ததும்ப நின்றது. நின்றும் துருவன், நாராயணனது சரணாரவிந்தங்களிலே சித்தத்தை வைத்திருந்ததினால் அம்மாயாசக்தியைக் கண்டானில்லை. அதன்மேல் அப்பூத பைசாசங்க பல இராக்ஷத வடிவோடும் துஷ்ட மிருகங்களின் உருவோடும் வந்து, பலவாறு அரற்றி அச்சுறுத்தின. துருவன் இவைகளையெல்லாம் ஒரு சிறிதும் அறியாதவனாய் நாராயணமூர்த்தியையே தன்னுள்ளே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு இதயங்களித்திருந்தான்.

தேவர்கள் தாங்கள் செய்த சூழ்ச்சி பயன்படாது போனமையை அறிந்து, அந்த மஹாத்மாவினது தபோமகிமையினால் தங்களுக்கு என்ன அபாயம் நேரிடுமோ என்று அசமிகக் கொண்டவர்களாய் ஒருங்கு சேர்ந்து, திருமாலின் சரணங்களையே சரணமாகப்பூண்டு தங்கள் குறையை விண்ணப்பிக்கத் தொடங்கி "தேவதேவனே! புருஷோத்தமனே! துருவனது தபாக்கினியால் மிகத் தவிக்கப்பட்டு உன்னைச் சரணாகதியடைந்தோம்; சந்திரன் ஒவ்வொருநாளும் கலைகளால் வளர்வதுபோல் தவசிரேட்டனாயவன் வளர்ந்து வருகிறான்; அந்தப் பாலகன் இந்திர, வருண, குபேர, சந்திர, சூரியர்களுடைய பதவிகளுள் எதனைக் கேட்டடையப் போகிறானோ? தெரியவில்லை; அதனால் அடியேங்கள் மிகவும் அஞ்சுகின்றோம்; ஆதலின் அவனது தவத்தை நிறுத்தி அடியேங்களின் வருத்தத்தை நீக்கி யருள வேண்டும்" என்று வேண்டினார்கள். அவ்விண்ணப்பத்தைத் திருச்செவி சாத்தியருளிய அச்சுதன், அமரர்களைக் கடாக்ஷித்து "துருவன் உங்களது பதவிகளுள் ஒன்றையும் விரும்பவில்லை;

அவன் விரும்புவது உங்கள் பதவியில் அந்நியமானது அதீதமானது மாகும்; நான் அவன் விரும்பியதையளித் அவன் தவத்தை நிறுத்துகின்றேன்" என்று திருவா மலர்ந்தருளினார். இந்திரன் முதலிய தேவர்கள்,

"வேத முதல்வா விரிசடையோ னாதியா
ஏதமற எவ்வுருவும் ஏற்றவனே—போதக்
கடலே யுனதடியைக் கைதொழுதோ மெங்கட்(கு)
இடரேது முண்டோ இனி"

என்று தொழுது துதித்துத் தம் மிருப்பிடம் சென்றனர்.

அப்பால் பகவான், கருடவாகனரூடராய்த் துருவ தவஞ் செய்யுமிடத்துக் கெழுந்தருளியாகி அவன் மு வந்து நின்றார். அப்போதும் துருவன் விழித்திலனாய் தவத்திலே சென்ற மனத்தினனாகவே யிருந்தான். பெ மான், அவனை விழிக்கச் செய்யத் திருவுள்ளங் கொண் அவனது மனக்கோயிலில் எழுந்தருளி யிருந்த தம திருவுருவை மறைத்தார்; உடனே துருவன் விழித்தா விழிக்கவும் முன் தன் அகத்தில் கண்டானந்தித்தபடிட புறத்திலும்,

"மண்டல நிறைந்த திங்கள் வதனமும் கமலக் கண்ணும
குண்டலஞ் சுடருங் காதுங் குறுநகைப் பவள வாயும்
தண்டுழாய் அலங்கல் மார்பும் தடக்கையோர் நான்கு மா
கண்டனன் மறையும் காணாக் கரியவன் உருவம் அம்மா"

காணலும் அத்திருவுருவைப் பருகுவான்போல் இமை யாதுநோக்கிப் பூமியில் விழுந்து எழுந்து, ஆநந்தக்கூத்தா உடல் முழுதும் புளகம் போர்த்து, பக்திபர[illegible]யப்